




# தமிழரசு

ஜூன் 1-15, 1999, ரூ. 3












# நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது.

# அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி:
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

# இந்த இதழில்...



## திருக்குறள்

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

எந்தத் துறையில் ஈடுபட்டாலும் அதில்
புகழுடன் விளங்கவேண்டும்.
இயலாதவர்கள் அந்தத் துறையில்
ஈடுபடாமல் இருப்பதே நல்லது.

– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...


தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2030
வைகாசி
ஜூன் 1–15, 1999
மலர் : 30 இதழ் : 23
விலை ரூ. 3



★ தமிழ் விசைப்பலகை அரசு ஏற்பு ........ 2
★ கணிப்பொறித் தமிழ் ஏற்பு ........ 6
★ சங்கத் தமிழ்த் தேனாறும் செம்புலப் பெயல் நீராரும் ........ 9
★ மேனிலைப்பள்ளி தேர்வில் முதன்மை பெற்ற மாணவ–மாணவிகளின் கல்விச் செலவை அரசு ஏற்பு ........ 13
★ ஆற்றலின் அகவை 76 ........ 16
★ சமத்துவபுரமாகும் தமிழ்நாடு ........ 19
★ பூக்களும் நீயே! வேலியும் நீயே!! ........ 26
★ தீண்டாமை, மதநல்லிணக்கத்தை வலியுறுத்தி வீடியோ படம் ........ 27
★ திருச்சி–நாகமங்கலத்தில் குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் ........ 28
★ பவள விழா கலைஞர் வாழி ........ 30
★ கோம்பை 18ஆம் கால்வாய் திட்டம் ........ 31
★ தமிழினத் தலைவர் கருணாநிதி வாழி! ........ 34
★ கோயம்பேடு பேருந்து வளாகம் ........ 35
★ அண்ணா அறிவியல் மைய கோளரங்கம் ........ 39
★ தேயாத கதிரவனே! ........ 42
★ பாரதிதாசன் பாடல்களில் விழிப்புணர்வு சிந்தனைகள் ........ 43
★ குளிர் தமிழே! வாழ்க!! ........ 46
★ எங்கள் ஊர் பிரச்சினை ........ 47


### முதல் பக்க அட்டையில்

1. சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சேப்பாக்கம் தொகுதி, அருணாசலம் தெருவில், ரூ.54.80 இலட்சம் செலவில் கட்டப்பட்ட பெண்கள் பள்ளிக் கட்டிடத்தை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் திறந்து வைக்கிறார்.
2. உலக அளவில் கணிப்பொறித் தமிழ் ஏற்பு விழா.
3. மேனிலைப் பள்ளித் தேர்வில் முதன்மை பெற்ற மாணவ–மாணவிகளுக்குப் பாராட்டு.

### கடைசிப் பக்க அட்டையில்

பண்ணப்பட்டி பெரியார் நினைவு சமத்துவபுரம் திறப்பு விழா.

# தமிழ் விசைப்பலகை வடிவமைப்பு அரசு ஏற்பு

## முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

உலகத் தமிழ் இணைய மாநாடு தமிழகத் தலைநகரிலே நடத்தப்பட்டதற்கு முக்கியமான நோக்கமே – தமிழ் விசைப் பலகையை உலக அளவிலே தரப்படுத்துவது; தமிழ் வரிவடிவக் குறியீடுகளைத் தரப்படுத்துவது; தகவல் தொழில் நுட்பத்திலும் இணையத்திலும் தமிழின் பயன்பாட்டை அதிகப்படுத்துவது ஆகியவைகளாகும்.

அந்த மாநாட்டின் முடிவில் தமிழ் விசைப்பலகையும் மற்றும் தமிழ் வரிவடிவக் குறியீடுகளும் – தரப்படுத்தப்படவேண்டும் என்பதற்கான பரிந்துரைகளின் மீது ஒருமித்த ஒரு கருத்து உருவானது. அந்த மாநாட்டிலே ஒருமித்த கருத்தே உருவாகாது என்று பலர் எதிர்பார்த்தார்கள். ஆனால், அதற்கு மாறாக ஒருமித்த கருத்து அன்றைக்கு உருவானது. அந்தக் கருத்தின் அடிப்படையில், அந்த மாநாட்டிலே ஏற்கப்பட்ட பரிந்துரைகள் மீது உலகம் அளாவிய ஆலோசனைகளைப் பெற வேண்டுமென்ற நோக்கத்தில் – அந்நப் பரிந்துரைகள் ஒரு இணையத் தகவல் பலகையில் (Dedicated Internet Website) 100 நாட்களுக்குக் குறையாமல் வைக்கப்பட வேண்டும் என்றும்; அதன் மூலம் பெறப்படும் ஆலோசனைகளை வல்லுநர் குழு ஆராய்ந்து அந்தப் பரிந்துரைகளுக்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

இந்த முடிவின்படி – பிப்ரவரி திங்கள் இறுதியில் ஒரு தனியாக இணையத் தகவல் பக்கம் – WWW tamilnet 99 org – ஏற்படுத்தப்பட்டு – அதன்மூலம் உலகின் பல பாகங்களிலிருந்தும் ஆலோசனைகள் பெறப்பட்டன. அரிய கருத்துக்கள் பல பகுதிகளிலிருந்தும் வழங்கப்பட்டன.

அந்த ஆலோசனைகள் ஒரு வல்லுநர் குழுவின் மூலம் தனித்தனியாக ஆராயப்பட்டு, சீராக்கப்பட்டு இறுதியிலே அவை ஒரு உலகம் தழுவிய வல்லுநர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

அந்த உலக அளவிலான வல்லுநர் குழு இறுதியாக வழங்கியுள்ள பரிந்துரைகளின் அடிப்படையில்,

தமிழ் விசைப் பலகை வடிவமைப்பு (Tamil Key Board Lay out)

தமிழ் மொழிக்கு மட்டுமேயான குறியீட்டு முறை (Monolingual Scheme)

தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளுக்கும் (Bi-Lingual Scheme) பயன்படும் குறியீட்டு முறை ஆகியவற்றை ஏற்றுக் கொள்வதென தமிழக அரசு முடிவு செய்து அவற்றை வெளியிடுவதற்காகத்தான் இந்த நிகழ்ச்சி இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொதுவாக மென்பொருள் இதற்கு முன்பே பலரால் தயாரிக்கப்பட்டு அதற்காக அவர்கள் தங்களுடைய உழைப்பைத் தியாகம் செய்திருக்கிறார்கள். இந்த புதிய Standardஐ – இந்தத் தரத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள் என்றால் அது உள்ளபடியே வரவேற்கத்தக்க – பாராட்டத்தக்க ஒன்றாகும். காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்று நான் கண்டுபிடித்த படைப்புத்தான் சரியானது என்று எதையும் ஏற்றுக் கொள்ள முடியாதென்று வாதிப்பவர்களும் உண்டு.

### புதிய தொகுப்பை ஏற்றுக்கொண்டதற்கு நன்றியும் பாராட்டும்

அந்த வாதத்தின் காரணமாகத்தான் பல ஆக்கபூர்வமான காரியங்கள் உலகத்திலேயே நடைபெற முடியாமல் போயிருக்கின்றது. அப்படியெல்லாம் விட்டுக் கொடுக்கின்ற மனப்பான்மையோடு தங்கள் உழைப்பைத் தியாகம் செய்து மென்பொருள் தயாரிப்போர் – என் கண்டுபிடிப்புத்தான் சரியானது. அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று வாதாடாமல், போராடாமல் இந்த புதிய Standardஐ – இந்தப் புதிய தொகுப்பை ஏற்றுக்கொண்டிருப்பது உள்ளபடியே நன்றிக்கும் பாராட்டுக்கும் உரிய செயலாகும் என்பதை இந்த நேரத்தில்தான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த முடிவுகளை ஏற்றுச் செயல்படுத்துவதற்காக – இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, மொரீஷியஸ் போன்ற நாடுகளின் அரசுகளுக்கும், புதுவை மாநில அரசுக்கும் இவை பற்றிய விவரங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

இது – ஆங்காங்குத் தரப்படுத்தப்பட்ட தமிழ் விசைப் பலகை தயாரிப்பவர்களுக்கும், அச்சக மற்றும்




புத்தக வெளியீட்டுத் தொழிலுக்கு (Desk Top Publishing) தேவைப்படும் தமிழ் மென்பொருள்களை உருவாக்குபவர்களுக்கும் தமிழில் மின் செய்தி (Tamil E-Mail) தயாரிப்பவர்களுக்கும் பெரிதும் ஊக்கம் அளிப்பதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

8-2-1999 அன்று நடைபெற்ற உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாட்டில், வெளியிடப்பட்ட அறிவிப்புகள் பற்றியும் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் தற்போது இங்கே நான் விளக்க விரும்புகிறேன். அறிவிப்புகள் – அறிவிப்புகளோடு நிற்பது இந்த அரசாங்கத்தின் பழக்கமல்ல. நான் மாறன் அவர்களுக்கும் சொல்லிக்கொள்கிறேன். இந்த மாநாட்டிலே எடுக்கப்பட்ட அறிவிப்புகள் மாத்திரமல்ல. அரசின் நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் கூட என்ன ஆயிற்று என்று மறுநாளே அதிகாரிகளை அழைத்துப் பேசி அந்த அறிவிப்புகளுக்கான ஆணைகளைப் பிறப்பிக்கின்ற அரசு பல ஆண்டுக் காலத்திற்குப் பிறகு தற்போதுதான் தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

உலகில் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் பயன்பெறக்கூடிய வகையில் உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் (Virtual Tamil University) ஒன்றை தமிழக அரசு நிறுவுமென்று அந்த மாநாட்டில் அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும், இந்திரா காந்தி திறந்தவெளி பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பொறுப்பேற்றிருந்தவருமான மதிப்பிற்குரிய டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்களின் தலைமையிலே குழு அமைக்கப்பட்டதென்றாலுங்கூட அந்தக் குழு உத்தேச உலகத் தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தின் செயல் திட்டங்களையும் தொழில் நுட்பங்களையும் உருவாக்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதனுடைய முடிவாக இன்றைக்கு நான் அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய தலைவராக டாக்டர் வி.சி.குழந்தைசாமி அவர்கள் பொறுப்பேற்று தலைமையேற்று நடத்துவார் என்ற செய்தியை மகிழ்ச்சியோடு இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

**தமிழ் மென்பொருள் தயாரிப்பினை ஊக்கப்படுத்திட வளர்ச்சி நிதி**

தமிழில் மென்பொருள் தயாரிப்பினை ஊக்கப்படுத்திட, "தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதி" ஒன்று ஏற்படுத்தப்படும் என்று அந்த மாநாட்டில் அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த அறிவிப்பினையொட்டி, தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதியத்திற்குத் தொடக்கத்தில் ஐந்து கோடி ரூபாய் தொகுப்பு நிதி (Corpus Fund) இருக்கும். இந்த நிதி குறித்த வழிகாட்டு நெறிமுறைகள் 6-5-1999 அன்று வரையறுக்கப் பட்டு, அவை இணையத்தில் தகவல் பக்கங்கள் மூலம் (Internet Websites) வெளியிடப்பட்டுள்ளது.

மூன்றாவது, மாநாட்டில், பன்னாட்டுத் தமிழ் இணைய ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையம் தமிழகத்திலே அமைக்கப்படும் என்று அறிவிக்கப் பட்டிருந்தது. இந்த அறிவிப்பு குறித்து அரசாங்கத்திற்கு ஆலோசனைகள் வழங்குவதற்காக தமிழ்நாடு உயர் கல்வி மன்றத்தின் துணைத் தலைவரும், இந்த முயற்சியில் முன்னணியில் இருப்பவருமான பேரன்புக்குரிய டாக்டர் எம்.அனந்தகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் ஒரு உயர் நிலைக் குழு

அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு – அண்ணா பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், முட்டுக்காட்டில் உள்ள இணைய சமுதாயக் கல்லூரி (Internet Community College) ஆகியவற்றிலிருந்து விரிவான கருத்துருக்களைப் பெற்றுள்ளது. அவற்றின் துணை கொண்டு பன்னாட்டுத் தமிழ் இணைய ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையம் அமைப்பது குறித்து இந்தக் குழு தனது பரிந்துரைகளை அரசாங்கத்திற்கு விரைவில் வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பன்னாட்டு இணைய மையத்தில் "தமிழ் வரிவடிவக் குறியீடுகளை" இடம் பெறச் செய்வதற்காக "Unicode Consortium என்னும் உலகளாவிய அமைப்பில் தமிழ்நாடு ஒரு உறுப்பினராக பதிவு செய்து கொள்ளும் என்று மாநாட்டிலே அறிவிக்கப்பட்டிருந்தது.

**அமெரிக்காவில் உள்ள அமைப்பில் தமிழ்நாடு உறுப்பினராகி உள்ளது**

அமெரிக்காவில் உள்ள "Unicode Consortium" என்னும் அமைப்பில் தமிழ்நாடு அரசு ஒரு உறுப்பினராக இடம் பெற்றுள்ளது. இணையத்தில் இடம் பெறத்தக்க நிலையான குறியீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்தக் குறியீடுகள் தயாரிக்கப்பட்ட பின் அவற்றை மாநில தகவல் தொழில்நுட்பப் பணி முனைப்புக் குழுவின் துணைக்குழு ஆய்வு செய்யும். அதன்பின் அந்தக் குறியீடுகளை இணையத்தில் இடம்பெறச் செய்வதற்காக "Unicode Consortium" அனுப்பிவைக்கப்படும்.

நான் ஏற்கெனவே கூறியதைப்போல – 'தமிழ் இணையம் 99' மாநாட்டில் இறுதி செய்யப்பட்ட கருத்துருக்கள் உலக அளவில் பரிசீலிக்கப்பட்டு ஆலோசனை வழங்கப்படுவதற்காக 100 நாட்களுக்கு ஒரு தனி தகவல் பக்கம் (WEB SITE) மூலம் வெளியிடப்படுவதற்குப் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. இந்தப் பரிந்துரையின்பேரில் கடந்த பிப்ரவரி திங்களிலேயே இணைய தகவல் பக்கம் மூலம் பரிந்துரைகள் வெளியிடப்பட்டு விட்டன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் மொழிக்கு மட்டுமே பயன்படக் கூடிய ஒரு மொழிக் குறியீடு (Mono Lingual encoding) தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிக்கும் பொதுவாகப் பயன்படக் கூடிய (Bi-lingual encode System) ஆகியவை மீதான பரிந்துரைகளை இறுதி செய்வதற்காகத் தமிழ்நாடு, சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, பாண்டிச்சேரி ஆகியவற்றின் வல்லுநர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்தக்குழு மூன்று மாதத்தில் தனது பரிந்துரையை அரசாங்கத்திற்கு அளிக்கும் என்று மாநாட்டிலே அறிவிக்கப்பட்டிருந்தது.

**தமிழ் விசைப் பலகை வடிவமைப்புக்கு தமிழக அரசு ஒப்புதல்**

அதன்படி அந்தப் பன்னாட்டுக்குழு 19–2–1999 அன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழு தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ் இடம் பெறச்செய்வது தொடர்பான தனது இறுதி அறிக்கையினை, மாநிலத் தகவல் தொழில்நுட்பப் பணி முனைப்புக் குழுவின் துணைக் குழுவிடம் அளித்துள்ளது. துணைக்குழுவின் பரிந்துரைகள் அரசினால் பரிசீலிக்கப்பட்டு, அவற்றின் அடிப்படையிலே இறுதி செய்யப்பட்டுள்ள தமிழ் விசைப் பலகை வடிவமைப்பு, தமிழ் வரிவடிவக் குறியீடுகள் ஆகியவற்றுக்கான ஒப்புதல்கள் இன்று அரசினால் அறிவிக்கப்படுகிறது.

இறுதியாக கோவை பாரதியார் பல்கலைக்கழகம், திருச்சி பொறியியல் கல்லூரி, சென்னை அண்ணா

**யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்**
**இனிதாவது எங்கும் காணோம்;**
**பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்**
**இகழ்ச்சிசொலப் பான்மை கேட்டு,**
**நாமமது தமிழரெனக் கொண்டுஇங்கு**
**வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!**
**தேமதுரத் தமிழோசை உலகமெலாம்**
**பரவும்வகை செய்தல் வேண்டும்.**

**– மகாகவி பாரதியார்**



பல்கலைக்கழகம் ஆகியவற்றில் இணையத்தின் மூலம் தமிழ் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காக மூன்று ஆய்வு இருக்கைகள் ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

**26–5–1999** அன்று இந்த அறிவிப்பின்படி இந்த மூன்று நிறுவனங்களிலும் மூன்று இருக்கைகளை ஏற்படுத்திட அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இணைய மாநாட்டிலே எடுக்கப்பட்ட அனைத்து முடிவுகளின் மீதும் இந்த அரசு முறையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பதையும் தெரிவித்துக் கொண்டு இந்த நடவடிக்கைகளினால் உலக அளவில் தமிழ் வரிவடிவை அனைவரும் ஒரே விதத்தில் பயன்படுத்த முடியாத சூழ்நிலை இனி வருங்காலத்தில் தவிர்க்கப்பட்டு கணிப்பொறியிலே தமிழ் வளர்ச்சி வியக்கத்தக்க வகையிலே அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தகவல் தொழில்நுட்பச் செயல்பாடு திருவாரூர் மாவட்டத்தில் தொடங்கப்படும்

அத்துடன் தகவல் தொழில்நுட்பச் செயல் பாட்டுக்கான Information Technologyக்கு முன்னோடியான ஒரு Pilot Projectஆக திருவாரூர் மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்து இந்தக் கூட்டத்திலே அறிவிக்கிறேன். அந்த மாவட்டத்தில் ஏற்படுகின்ற Pilot Project எல்லாவற்றையும் கணினி மயமாக்கிட அது ஒரு சோதனைக் கூடமாக எடுத்துக் கொள்ளப்படும். அதன் செயல்பாட்டினை நம்முடைய தலைமைச் செயலாளர் தலைமையிலே அமைந்துள்ள குழு பரிசீலித்து, அதன் பயன்களைப் பரவலாகச் செயல்படுத்த அதிகாரபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதையும் அறிவித்துக் கொள்கிறேன்.

Information Technologyயின் உபயோகத்தை – தகவல் தொழில் நுட்பத்தின் உபயோகத்தை வரவேற்புரையில் மாறன் குறிப்பிட்டதைப்போல, பொது விநியோகம், பதிவுத் துறை (Registration), வணிக வரித்துறை (Commercial Tax) போன்றவைகளில் உடனடியாக அமல்படுத்த ஏற்பாடுகள் செய்யப்படும். இதற்காகவே இந்த ஒவ்வொரு துறைக்கும் ஒரு சிறப்பு ஐ.டி. அதிகாரிகள் (Special Officer for I.T.) நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தரப்படுத்தப்பட்ட இந்த மென் பொருள்களைத் தான் இந்தத் துறைகள் இனி வாங்கும் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தியாவிலேயே முதல் முயற்சியாக பல காரியங்கள் தமிழகத்திலே இந்த அரசு சார்பாக நடைபெற்றிருக்கின்றன. அவைகளையெல்லாம் எடுத்துச் சொன்னால் சாதனைகளின் பட்டியல்களை எடுத்துச்சொல்வதாக நீங்கள் எண்ணக்கூடும்.

ஆதிதிராவிடர்களுக்குக் கான்கிரீட் வீடுகள் இலவசமாகக் கட்டித் தருவதிலிருந்து – ஏழையெளியோர் குடிசையிலே வாழ்வதை மாற்றிட குடிசை மாற்று வாரியம் அமைத்ததிலிருந்து – இன்றைக்குக் கிராமப்புறத்திலே இருக்கின்ற பள்ளி மாணவர்கள் 15 சதவிகிதத்தினர் இடஒதுக்கீட்டிலே இடம்பெற வேண்டுமென்று அறிவித்ததிலிருந்து – பட்டதாரிகளே இதுவரை இல்லாத குடும்பத்திலிருந்து வருகின்ற முதல் மாணவனுக்கு அவன் மதிப்பெண் பெறுவதில் முதல் பத்து நிலையிலே இருப்பார்களேயானால் அவர்களுக்கெல்லாம் தொழிற்கல்விகள் பயில ஆகும் முழுச் செலவையும் அரசே ஏற்றுக் கொள்ளும் என்பது வரை, மேலும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சமத்துவபுரம் திட்டம் போன்ற பல வளர்ச்சித் திட்டங்களை மனிதவள மேம்பாட்டுத் திட்டங்களை இந்த அரசு இந்தியாவிலேயே முதல் முதலாகச் செய்து காட்டியிருக்கின்றது.

இதற்கு மற்றொரு எடுத்துக்காட்டாக, நிதிநிலை அறிக்கையிலே நான் தெரிவித்ததற்கு ஏற்ப, பள்ளிகளில் கணினியை இந்த ஆண்டு பயன்படுத்துவது – பயிற்றுவிப்பது என்று அறிவித்து – அதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரிய வகையில் இந்த ஆண்டு முதற்கட்டமாக 695 பள்ளிகளில் 9,10,11,12 ஆகிய வகுப்புகளிலே கணினிப் பயிற்சி தொடங்கப்படுகிறது என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இது இந்தியாவிலேயே முதன்முதலாக கணினிப் பயிற்சிக்காகச் செய்யப்படுகின்ற சாதனை என்பதை பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நாம் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற World Tel நிறுவனத்தின் மூலமான இன்டர்நெட் மையங்கள். இதற்காகப் பல ஏற்பாடுகள், பல முயற்சிகள் நடைபெற்றுள்ளன. ஆனால் நம்முடைய வேகத்திற்கு அவர்கள் வரவில்லை என்ற உணர்வு எனக்கிருக்கின்றது. பல பிரச்சினைகள் அதிலே ஏற்பட்டாலும் – இதோ, அதோ என்று இழுத்தடிக்கும் ஒரு நிலைமை இருக்கின்றது.நான் இந்தக் கூட்டத்திலேயே தெரிவித்துக் கொள்கிறேன். மூன்று மாதங்களுக்குள் World Tel நிறுவனம் ஒரு சரியான முடிவிற்கு வந்து இன்டர்நெட் மையங்களை தமிழகத்திலே அமைப்பதற்கு முன்வராவிட்டால், வேறு புதிய ஏற்பாடு உடனடியாக அரசாங்கத்தின் சார்பில் மேற்கொள்ளப்படும் என்பதையும் உங்களுக்குத் தெரிவித்து இந்த நிகழ்ச்சிக்கு அழைப்பின் பேரில் அனைவரும் வந்திருந்து சிறப்புடையதாக ஆக்கியதற்காக அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்து இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

*-- உலக அளவில் கணிப்பொறித் தமிழ் ஏற்பு விழாவில் 13–6–1999 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.* ★

**த**மிழ் விசைப்பலகை ஏற்பு விழாவில் மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க.**அன்பழகன்** உரையிலிருந்து...

*"மகத்தான வெற்றி நிகழ்ச்சி இது. தமிழுக்கு இந்த சிறப்பை கலைஞர் தேடித்தந்திருக்கிறார். இந்த நூற்றாண்டின் இறுதியிலேயே கணினியில் தமிழை உலகம் முழுவதும் வளர்க்க இது பயன்படும். கடந்த 16 ஆண்டாக எடுத்துவந்த முயற்சி இன்று நிறைவு பெற்றிருக்கிறது. ஆங்கிலம் போல் தமிழையும் கணினியில் பயன்படுத்த இது உதவும். தமிழுக்கு பேராக்கம் உருவாகியிருக்கிறது. வரும் நூற்றாண்டில் எந்த மொழியையும் விட முன்னிலையில் தமிழ் விளங்கும் வாய்ப்பு பெற்றிருக்கிறது.*

*இந்தப் பெரிய முயற்சியை குறுகிய காலத்தில் செய்து முடித்தது வியப்புத் தருகிறது. தமிழுக்கு பெரிய வாய்ப்புத் தேடித் தந்த கலைஞருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்". கொள்கிறேன்".*

# கணிப்பொறித் தமிழ் ஏற்பு

உலக அளவில் கணிப்பொறித் தமிழ் ஏற்பு விழாவில்,
*மாநில தகவல் தொழில்நுட்ப பணி முனைப்புக்குழுத் துணைத்தலைவர்*
திரு. **முரசொலி மாறன்** உரை

"**இ**ன்றைய தினம் தமிழ் மொழியின் வரலாற்றிலும் தமிழ் நாட்டின் வரலாற்றிலும் ஒரு முக்கியமான நாள் ஆகும். சென்ற பிப்ரவரி திங்கள் 7,8 தேதிகளில் உலகத் தமிழ் இணைய கருத்தரங்கு மாநாட்டினை தமிழ் நெட் 99 என்கின்ற பெயரிலே தமிழக அரசு கூட்டியது. அதிலே மலேசியாவின் அமைச்சராக இருக்கின்ற டத்தோ சாமிவேலு, இலங்கை அமைச்சராக இருக்கின்ற தொண்டமான், மொரீஷியஸ் அமைச்சர் மற்றும் அமெரிக்கா, ஐரோப்பா போன்ற பகுதிகளில் இருந்து கணிப்பொறி வல்லுனர்களும், தமிழ் வல்லுனர்களும் வந்திருந்து அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு தமிழ்மொழியை இன்டர்நெட்டில் பயன்படுத்துவதற்கு ஒரு இன்டர்நேஷனல் ஸ்டேன்டர்ட் தரப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக அவர்கள் அனைவரும் கூடினர்.

***இன்டர்நெட் மூலம் கணிப்பொறி அறிஞர்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டன***

அதற்கு முன்பே அந்த தரப்படுத்தப்படுவதற்காக பல்வேறு நாட்கள் டாக்டர் அனைந்த கிருஷ்ணன் தலைமையிலே பல்வேறு கூட்டங்கள் கூட்டப்பட்டு இறுதியாக ஒரு நகல் திட்டம் தயாரிக்கப்பட்டது. அதை இன்டர்நெட்டிலே மூன்று நாட்கள் போட்டு வரையறுத்து உலகெங்கும் உள்ள தமிழ் அறிஞர்களின், கணிப்பொறி அறிஞர்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டு அதற்குப் பிறகு அதை தமிழ் கூறும் நல்லுலகம் ஒப்புக்கொள்கின்ற தளமாக அறிவிக்கலாம் என்கின்ற முடிவுக்கு வந்தோம்.

அதன்படியே மூன்று நாட்கள் அப்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்த தரம் கட்டுப்பாடு இன்டர்நெட்டில் ஒளிபரப்பப்பட்டது. உலகத்தின் பல்வேறு நாடுகளில் இருந்தும் இதற்காக பல்வேறு திருத்தங்கள் வந்து சேர்ந்தன. அதை எல்லாம் மேற்பார்வை செய்வதற்காக டாக்டர் கல்யாணசுந்தரம் ஐ.ஐ.டி. அவர்கள் தலைமையில் கன்வீனராகக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டது. அண்ணா பல்கலைக்கழகம் கிருஷ்ணமூர்த்தி, பொன்வைகோ, டாக்டர் சாருகேசி, டாக்டர் சீனிவாசன், டாக்டர் தெய்வசுந்தரம் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்து வந்து குவிந்த அந்தக் கருத்துக்களையெல்லாம் தொகுத்து அவற்றை எல்லாம் முறைப்படுத்தி, அவற்றை சர்வதேசக் குழு ஒன்றிற்கு அனுப்பி வைத்தார்கள்.

அந்தக் குழுவிற்கு ஐ.ஐ.டியைச் சேர்ந்த புரொபசர் முத்துகிருஷ்ணன் அவர்கள் தலைவராக இருந்தார். சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த கல்யாண சுந்தரம் அதன் உறுப்பினர். கனடாவைச் சேர்ந்த சீனிவாசன் ஒரு உறுப்பினர். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த வாசுதேவன் ஒரு உறுப்பினர். சிங்கப்பூரைச் சேர்ந்த ந.கோவிந்தசாமி ஒரு உறுப்பினர். பாண்டிச்சேரியைச் சேர்ந்த குப்புசாமி ஒரு உறுப்பினர். ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த அனுபவ் சார்நாத் ஒரு உறுப்பினர். மலேசியாவைச் சேர்ந்த முத்து நெடுமாறன் ஒரு உறுப்பினர்.

இந்தக் குழு அகில உலகிலும் உள்ள தமிழ் ஆய்வாளர்களையும் கொண்ட இந்தக் குழு மூன்று நாட்களில் சொல்லப்பட்ட திருத்தங்களையெல்லாம் ஏற்றுக் கொண்டு சில சில மாற்றங்களையெல்லாம் ஏற்படுத்தி மறுபடியும் அதை

இன்டர்நெட்டிலே போட்டு அந்தப் பரிந்துரைகளை அனைவரும் ஏற்றுக் கொள்கின்ற அளவிற்கு அதை இப்பொழுது தமிழக அரசிடம் ஒப்படைத்து இருக்கின்றனர். தமிழக அரசும் அதை ஏற்றுக்கொள்ளும் என்பதிலே வேறு சந்தேகம் இல்லை.

***இந்த பரிந்துரைகளைத் தமிழ் கூறும் நல்லுலகம் ஏற்றுக் கொள்ளும்***

இந்த பரிந்துரைகளை இப்பொழுது மலேசியா நாட்டிற்கும், இலங்கை நாட்டிற்கும், மொரீஷியஸ் நாட்டிற்கும், சிங்கப்பூருக்கும் மற்றும் தமிழ் பேசுகின்ற தமிழ் கூறும் நல்லுலகத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது. எனவே அவரவர்கள் அந்த நாட்டைச் சேர்ந்தவர்கள், இந்தப் பரிந்துரைகளை இப்பொழுது தமிழ்நாடும், பாண்டிச்சேரியும் ஏற்றுக் கொண்டதைப்போல் அவர்களும் இதை ஏற்றுக் கொள்வார்கள் என்பதிலே சிறிதும் சந்தேகமில்லை.

இப்படி அரிய முயற்சியைச் செய்து முதன் முறையாக தமிழ் விசைப்பலகை என்ற அமைப்புகள் எல்லாம் ஸ்டேண்டர்டைஸ் செய்யப்பட்டு இருக்கின்றது. அதைப் போலவே மோனோலிங்குவல் மற்றும் ஆங்கிலம், தமிழ் நுட்பக் குறியீட்டு முறையின் அட்டவணைத் தொகுப்பு தரப்பீட்டிருக்கின்றது. இதையெல்லாம் எதற்கு குறிப்பிடுகிறேன் என்றால் இந்தியாவிலேயே இன்டர்நெட்டிலே நுழைந்த முதல் இந்தியமொழி தமிழ் மொழிதான். அத்தகைய சிறப்பு நமது தமிழ் மொழிக்கு உண்டு.

ஆனால் இதில் விசித்திரம் என்னவென்றால் சுமார் 350 மென்பொருள்கள் (Software) உருவாக்கப்பட்டது. ஆனால் ஒரு மென்பொருள் இன்னொரு மென்பொருளை ஏற்றுக்கொள்ளாது ஆகவே 350 தமிழ்மொழி இருந்தால் ஒருவருக்கு ஒருவர் புரியாமல் போய்விடும். அது மட்டுமல்ல. உலகப் பொது மறையான திருக்குறள் மட்டும் 16 மென்பொருளிலே இருக்கின்றது. ஆனால் ஒன்றுக்கொன்று புரியாது. இப்படி ஒரு குழப்பம் இருந்த காரணத்தினால்தான் இவையெல்லா வற்றையும் சரிபடுத்தி ஒரு இன்டர்நேஷனல் ஸ்டேண்டர்டு கொண்டுவர வேண்டும் என்பதற்காக ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது.




இந்த முயற்சிக்கு மிகவும் உறுதுணையாக இருந்தவர் சிங்கப்பூர் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் கோவிந்தசாமி அவர்கள் பிப்ரவரி 7,8ல் நடைபெற்ற தமிழ் இணையம் மாநாட்டில் அவர் பெருமுயற்சி எடுத்துக் கொண்டது உங்களுக்கெல்லாம் தெரியும். அவருடைய மறைவு தமிழ் உலகிற்கே பெரும் நஷ்டமாகும். எனவே இந்த நேரத்தில் அவருக்கான

இரங்கலையும் தெரிவித்துக் கொள்ள நாம் கடமைப்பட்டு இருக்கின்றோம்.

### *இன்டர்நெட் நூற்றாண்டு*

இன்றைய தினம் தமிழக அரசும், புதுவை அரசும் ஏற்றுக்கொண்டிருக்கிற இந்த தளம் இதைத் தொடர்ந்து மலேசியாவும், சிங்கப்பூரும், இலங்கையும் ஏற்றுக் கொள்ள இருக்கின்ற இந்த தளம் தமிழ் வரலாற்றில் இது ஒரு புரட்சியாகும். ஒரு பெரிய மாற்றமாகும். இருபத்தோறாம் நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கின்ற இந்த நேரத்தில் அடுத்த நூற்றாண்டை இன்டர்நெட் நூற்றாண்டு என்றே சொல்லாம். அதற்கேற்ற வகையில் இப்பொழுது நாம் தமிழைப் பக்குவப்படுத்தி இருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால் தமிழிலே ஒரு புதுமை உண்டு 350 மென்பொருள் இருக்கின்றது என்றால் இதையெல்லாம் உருவாக்கியவர்களில் பெரும்பங்கினர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் அல்ல, வெளிநாட்டிலே வாழ்கின்ற தமிழர்கள்தான் இதற்கான பெரும் முயற்சியினை எடுத்தார்கள் வெளிநாட்டிலே வாழும் அந்தத்தமிழர்களுக்கு நாம் நன்றி சொல்ல கடமைப்பட்டு இருக்கிறோம். அதற்குப் பிறகுதான் தாய்த்தமிழகம். இங்கே நாம் ஒரு கடமையை ஏற்றுக் கொள்ள வேண்டும் - இந்தக் குறைபாட்டை நீக்க வேண்டும். இப்படி ஆளுக்கொரு தமிழாக 350 தமிழாக இருந்தால் யாருக்கும் ஒன்றும் புரியாது. யார் என்ன செய்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள முடியாது என்பதால்தான் கலைஞர் அவர்கள் இந்த முயற்சியை மேற்கொண்டு தமிழ் இணையம் 99 நடத்தினார்கள். அந்த மாநாட்டின் முடிவாக குறிப்பிட்டபடி அனைவரும் ஒன்று சேர்ந்து ஒத்துழைப்பு தந்து இன்றைய தினம் அந்த தரம் நிர்ணயம் அந்த விசைப்பலகைக்கும், தமிழ் எழுத்துக்களைக் கொண்டு தரம் உருவாக்கப்பட்டு இருக்கின்றது.

இதையெல்லாம் நாம் எதற்காக செய்கிறோம் என்றால் அதை பாமர மக்களுக்கு நாம் கொண்டு செல்ல வேண்டும் என்பதால்தான். ஆங்கிலத்திலே கொண்டு செல்ல முடியாது. கலைஞர் தலைமையிலே இயங்குகின்ற தமிழக அரசு ஒரு திட்டத்தைத் தீட்டி இருக்கின்றது. ஒவ்வொரு கிராமததிலும் இன்டர்நெட் வரவேண்டும் என்ற முயற்சியில் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றது. அதைப் போலவே பள்ளிகளிலே கணினிப் பயிற்சி தரும் திட்டம் இந்தியாவிலே முதன்முதலாக தமிழகத்திலேதான் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றது

அந்த நேரத்திலே ஆங்கிலத்திலே மென்பொருள் போய்ச் சேர்ந்தால் பிரயோஜனம் இல்லை. தமிழ்நாட்டு மக்களை ஆங்கிலம் கற்பதற்கு நாம் கட்டாயப்படுத்துகிறோம் என்று பொருளாகி விடும்.

### *கலைஞர் ஒப்படைத்த முயற்சியில் வெற்றி*

எனவே தமிழிலே மென்பொருள் இருந்தால்தான் அது பாமர மக்களுக்குப் போய்ச் சேர முடியும். அதனால்தான் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து கலைஞர் அவர்கள் முயற்சியை ஒப்படைத்தார். அந்த முயற்சியில் நாம் வெற்றி பெற்று இருக்கிறோம். இதற்கு அடுத்த கட்டம் இதை பாமர மக்களுக்குக் கொண்டு செல்கின்ற முயற்சியினை அரசு செய்ய வேண்டும். ஏனென்றால் தமிழ்நாட்டிலே எதையும் அரசைத்தான் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். பொதுமக்களும் அரசுக்கும் இடையே உள்ள இந்தத் தொடர்பை பலப்படுத்துவதற்கு உதாரணமாக பப்ளிக் டிஸ்ரிபியூஷன் திட்டம் இருக்கின்றது. பொது விநியோகக் கட்டுப்பாடு குறிப்பாக ஆந்திராவில் நாம் கேள்விப்பட்டு இருக்கிறோம். அங்கே வில்லங்க சர்டிபிகேட் வேண்டும் என்றால் ஒரு பொத்தானை அழுத்தினால் போதும் வில்லங்க சர்டிபிகேட் வருகின்றது. ஆனால் அது வேறு மொழியிலே இருப்பதாக கேள்விப்படுகிறோம். அதுபற்றிய முழுமையான விவரம் தெரியவில்லை.

நம்முடைய முறையில் செய்வதாக இருந்தால் தமிழிலும் ஆங்கிலத்திலும் இருப்பது மாதிரி செய்ய வேண்டும். எனவே இந்த கணினி தமிழை பாமர மக்களுக்கு எடுத்துச் சொல்கின்ற முயற்சியை கலைஞர் அரசு தி.மு.கழக அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த வரவேற்புக்குழுத் தலைவராக பொறுப்பேற்றிருந்த நான் எனக்குக் கொடுத்த இந்தப் பணியை முடித்து இருக்கிறோம். அதற்காக நன்றியைத் தெரிவித்து இந்தப் பணி இன்றோடு முடிவடைகிறது இந்தப் பணியில் வெற்றி பெறுவதற்கு அல்லும் பகலுமாக பாடுபட்டவர் டாக்டர் அனந்தகிருஷ்ணன் ஆவார்கள். அவர்களுக்கு உங்கள் சார்பாகவும், என் சார்பாகவும் தமிழக அரசு சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

★ ★ ★

# சங்கத் தமிழ்த் தேனாறும் செம்புலப் பெயல் நீராகும்

மாண்புமிகு கல்வி அமைச்சர்
**பேராசிரியர் க. அன்பழகன்**

பத்துப்பாட்டு இலக்கியமும் எட்டுத் தொகைப் பாடல்களும், பழந்தமிழர் வாழ்வு இயற்கையுடன் இயைந்ததொரு நிலையும் நினைப்பும் கொண்டு, உலகியல் வாழ்விலும் கடமையிலும் களிப்பினை எய்தி, இன்பமும் துன்பமும் வாழ்வின் இயல்பென ஓர்ந்து, ஒல்லும் வகையால் ஒப்புரவு பெருக்கி, வாழ்வாங்கு வாழ்வதைக் குறிக்கொண்டிருந்தது என்பதைப் புலப்படுத்தும் பெற்றியன.

முத்தமிழ் வழிப்பட்ட சிந்தையில் ஊறிய தெளிந்த ஞானத்தால், முப்பாலாம் வாழ்வமிழ்தம் வழங்கியதால் எப்பாலவரும் போற்றும் மாண்பினரான திருவள்ளுவரும், செந்தமிழில் பிறந்த முதல் காப்பியமாய் முத்தமிழ் முழங்கும் சிலம்பினை இசைத்தவரான இளங்கோ அடிகளும், புத்தர் நெறி போற்றும் மணிமேகலை யாத்த சீத்தலைச் சாத்தனாரும், சங்கச் செய்யுள்கள் வழங்கிய கபிலரும் பரணரும், கணியன் பூங்குன்றனாரும், பிசிராந்தையும், ஔவையும், ஒக்கூர் மாசாத்தியாரும், காக்கைப் பாடினியாரும், ஒப்பான புலவர் பல்லோர் தோன்றுவதற்கு ஏதுவான சிந்தனை வளர்ச்சியும், கொள்கை மாட்சியும் சொல்வளமும் கொண்டதாகத் திகழ்ந்த இனமே தமிழினம். இன்றளவும் பொதுறையெனப் பல்சமயத்தாரும் போற்றி மதித்திடும் திருவள்ளுவரின் முப்பாலுக்கு இணையான ஒரு வாழ்க்கை நூல், இன, மத, சாதி வேறுபாடு ஏற்காது மானிட நேயத்துக்கு வழிகாட்டும் ஓர் அறநூல், வையகத்தில் தோன்றவில்லை என்பதொன்றே தமிழரின் சங்ககால வாழ்வின் தனிப்பெரும் நிலைக்குச் சான்றாவது.

சங்ககாலப் பாடல்களைப் பாடியவரின் ஆர்வத்திற்கேற்ப, அவர்தம் உள்ளம் பற்றிய காட்சியைத் தீட்டிய வகையால் அவை முகிழ்த்தன. தமிழர்தம் நாகரிகப் பண்பாட்டு மணம் பரப்பும் மலர்களாக அவை ஒளிர்கின்றன. இன்றளவும் வாடி வீழாமல், 'வீ' யாகாமல் நிலையான தமிழில் நெடுநிலை மாடமாக நிலை பெற்றுள்ளன. காலத்தால் விளையும் மொழி மாற்றத்தாலும், திரிபாலும், சிதைவாலும் அவை வாழ்விழந்துவிடவில்லை. வடமொழியிலும் வேறுசில மொழிகளிலும் அந்த அளவு தொன்மையுடைய ஏடுகள் உளவெனினும், மக்கள் பேச்சுமொழி அடைந்த மாற்றத்தால், மக்கள் தம் மொழியென அடையாளங் காணமுடியாது வழக்கிழந்து போயின. என்றாலும் சங்கத்தமிழ் நடை காலத் தொன்மையதாகலின் தனியொரு கடினநடை வாய்ந்ததாக அமைதலின், எளிய தமிழறிந்தார் எல்லோரும் படித்து மகிழ்தற்கு இயல்வதில்லை. சங்கத் தமிழ் இலக்கியத்தின் அருமையும் பெருமையும் அறிந்தாரும் அதனைக் காலத்திற்கேற்றதாக அமையும் உரைநடையினில் படித்தின்புறவே விழைவர். சங்கத் தமிழின் அருமையையும், பொருள் நலத்தையும் இயற்கை எழிற் காட்சியையும் உணர்ந்திட விழைவார். அதன் குன்றாத சுவையையும் தாமே சுவைத்து உணரச் செய்திட வேண்டும் என்னும் உள்ளங்கொண்ட முத்தமிழ் வித்தகர் கலைஞர் அவர்கள், அந்தத் தேனடையைப் பிழிந்தெடுத்துப் படிப்பவர் நாவினிக்கவும், உணர்வார் உளங்களிக்கவும் வழங்கியுள்ளார். இதுகாறும் இலக்கியத்திற்கு உரையும், விரிவுரையும், பொழிப்பும், பொருள் பொதிந்த கட்டுரையும், ஆய்வேடும் வரைந்தவர் பலராயினும், கவிதை இலக்கியத்தைச் சிறப்பித்திடுமாறு, பிறிதோர் கவிதை இலக்கியம் புனைந்தார் கலைஞரேயன்றி வேறு எவரும் இலர் எனலாம்.

முத்தமிழ்க் காப்பியமாய், மன்பதையைப் பாடும் குடிமக்கள் இலக்கியமாய், பெண்ணின் பெருமை நிலைநாட்டும் பெட்டகமாய், நீதியைக் காக்கத் தவறிய செங்கோல் நிலைக்காமற் செய்ய ஊழ் (முறைமை) உறுத்துவந்து ஊட்டும் என்று பறைசாற்றும் பனுவலாய் வாய்த்த சிலப்பதிகாரத்தின் தனிச்சிறப்புக்கு, எவ்வகையிலும் குறை நிகழாத வகையில், புதுமை தழுவிய 'பூம்புகார்' வரைந்து, புத்திலக்கியம் படைத்த வித்தகர் கலைஞர் அன்றோ! மூலத்தினால் பெறும் பயனை இழக்காமல் காலத்தின் தேவையை நிறைவு செய்யும் ஆற்றல் மிக்க செஞ்சொற் புலமையும் புதுக்கவிதை புனையும் கற்பனை ஆற்றலும் சான்ற புலமையாளர் அவர்.

சங்கச் செய்யுள்கள் என்னும் மலர்களில் மகரந்தம் எடுக்கும் தேனீயாகப் பலநூறு பாமலர்களையும் சுவைத்து, அவற்றின் காட்சிப் புலனையும் கருத்து நலனையும் கற்பனை வளத்தையும் உளங்கொண்டு நிறுத்தி உய்த்துணர்ந்த திறத்தால், தனது உள்ளத்து ஊறிய கற்பனை வளத்தினால், தலைவன் தலைவியர் சந்திக்கும் அந்தக் களனுக்கு ஏதுவான அதற்கு முந்தைய களன்களில் அவர்களிடம் பிறந்த உணர்வுகளையும், பின்புலத்தையும் முப்பரிமாணக் காட்சியாகப் படம் பிடித்து, புத்துருவம் தந்து 'சங்கத் தமிழ்' என்னும் புத்திலக்கியமாய்ப் படைத்த அவர்தம் திறம் செப்புதற்கரிதாம்!

சங்கத் தொகை நூல்களுள் ஒன்று குறுந்தொகை. அதில் ஒரு பாட்டைப் பாடியவரின் இயற்பெயர் அறியப்படாமையின், அப்பாடலைத் தொகுப்பில் இணைத்தவர் அப்பாடலின் சிறப்பிற்கு ஏதுவாக அமைந்த அதன் தொடர் ஒன்றையே பாடியவரின் பெயராகக் குறித்துள்ளார். அப்பெயரே 'செம்புலப் பெயல் நீரார்' என்பது.

ஐந்தடி அளவினதான அப்பாடலைப் பலரும் படித்தும் கேட்டும் அறிந்திருக்கலாம்.

**"யாயும் ஞாயும் யாரா கியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?**
**நீயும் நானும் எவ்வழி அறிதும்!**
**செம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே"!**

காதல் உணர்வால் களவு நிலையில் உளங்கலந்த நிலையினரான பின்னர், சிலகாலம் பிரிய நேரிட்ட தலைவனின் உள்ளங் கவர்ந்த காதலியின் உள்ளத்தில் எழுந்த கலக்கம் மாற்றிடவே தலைவன் தன் காதலை இவ்வாறு உறுதிப்படுத்துகின்றான்.

**"என் தாயும் நின் தாயும் யார் யார் என்று**
**நாமறியோம்!**
**என் தந்தையும் நின்தந்தையும் எவ்வகையில்**
**உறவுடையார் என்றும் அறியோம்! ஆயினும்**
**நீயும் நானும் உளமொத்து ஒருவரை ஒருவர்**
**விழையலானோம்!**
**செம்மண் புலத்தில் பெய்த மழைநீர்**
**அம்மண்ணிறத்தைக் கவர்ந்து-பின்னர்ப் பிரிக்க**
**இடமற்ற**
**செந்நிறத்ததாய் ஒன்றி விட்டதைப் போன்று,**
**நம் நெஞ்சமும் காதலால் ஒன்றிவிட்டன**
**அல்லவோ?**

(இனிப் பிரிதலும் கூடுமோ?) என்பது அப்பாட்டின் பொருள்!

தலைவி தலைவன் உறுதி கண்டு உள்ளக் கலக்கம் நீங்கிடத் தலையின் காதல் வாழ்வு தொடர இப்பாடல் ஏதுவாயிற்று.

இந்தப் பாடலை மையப் பொருளாகக் கொண்டு ஒரு பின்னணியும் திரைச் சீலையும் கொண்ட நாடகக் காட்சி ஆக்கி, தலைவி உளநிலையும், தலைவன் ஆர்வமும் அவர்கள் உரையாடிய சூழலும், அவர்தம் இயல்பான உணர்வுக்கு விருந்தாகும் இயற்கை தந்த காட்சியும் வண்ண ஓவியமாக வருணிக்கப்படுகிறது கலைஞரால்.

இந்த ஐந்து வரிப் பாடலைக் கருப் பொருளாகக் கொண்ட கலைஞரின் புதுக்கவிதை நூற்றிருபது வரியாக வடிவெடுக்கின்றது. தலைவன் தலைவியின் உள்ளங்களில் காதல் தாக்கம் எப்படியெல்லாம் அவர்களை எண்ணிக்கொள்ள வைத்து, ஏக்கமுறச் செய்தது என்பதை வண்ணப்படப் பிடிப்பாகவே நிகழ்த்துகிறார் கலைஞர்.

விண்மீன்கள் முகம் பார்த்து ஒப்பனை செய்துகொள்ள, நாளெல்லாம் தேடிப் பிடித்துத் (மாலையில்) தொங்கவிட்ட மதி என்னும் கண்ணாடியில், நம்மிருவர் முகம் பார்க்க முடியாதெனினும், நான் உன் மதிமுகத்தை நிலவாகவே பார்க்கிறேன்! (தலைவி முகத்தில் தன் முகம் பார்க்கும் ஆர்வத்தினனாகின்றான் தலைவன்) நின் முகமும் உண்மை நிலவாக விளங்கிடவே, நீயும் கண்ணுக்கு மையிட்டுக் கன்னத்தில் கருமை நிறப் புள்ளியும் வைத்துள்ளாய்! தேங்காய்க்கீற்று போன்ற நின் பிறைநுதல் காட்டு என்றால், எழிலாக உன் முகத்தை என் முகத்தில் பதித்து நேர்வகிடுக்குக் கீழுள்ள உன் நெற்றியினை (நிமிர்வதால்) காண்பித்திடுவாய்!

நிலா மறைந்த உவாநாள் ஒன்று வருமே, அம்மதி மறைப்பு தானும் உனக்கில்லையோ என நான் கேட்க, என் மடி மீது உன் பால் முகம் மறைத்தே படுத்தவளாய், உன் காரிருள் கூந்தல் மட்டுமே காணச்செய்து, அவ்வாறே நான் கருதிக்கொள்ள விரும்பியவளாய், நீ உன் மென் விரலால் சுட்டிக் காட்டவும், நானும் உன் குழலைக் கோதிக்கொண்டே உன் உச்சி மீது முத்தம் பொழிந்தேன் அன்று!



பாம்பொன்று மதியைக் கவ்வும் பழம் புராணப் பொய்மையை நம்புவதற்கில்லை என்றேன். நீயோ, இந்த நிலவின் கன்னத்தை இதழ் பதித்து வாயினால் பற்றி விழுங்கும் உம் செயலுக்கு என்ன பெயர் எனக்கேட்டு, பழம் புராணப் பாம்புக் கதை பொய்யாயினும், பழம் போன்று என் கன்னக் கதுப்பை விழுங்கி விழுங்கி விடுவிக்கும் இந்தப் பள்ளியறை நடப்பு உண்மைதானே? என்றாய். உன் கற்பனை வளப் பேச்சில் மயங்கியே ஒரு நூறு முத்தங்கள் உடன் தந்தேன்! நீயும் (ஒருப்பட்டு) திருப்பித் தந்து களித்தாய்! அதை எல்லாம் மறந்து அயலூரில் நெடுநாள் தங்கிவிட்டதற்கு மனம் வருந்தி நீ வாட்டமுறுவது நியாயந்தானா? ஊடல் கொண்டதிலும் ஓர் அழகையே நான் காணுகின்றேன்! பாட்டிசைத்திடுமுன் இசை ஒத்திசைக்க வேண்டுமென்றோ? அது போன்று 'கூடல்' விழா தொடக்கத்திற்கும் 'ஊடல்' தான் கொடியுயர்த்த வேண்டும். அதனால் உன் ஊடல் கண்டு என் உவகையே பெருகினும், அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சாகுமன்றோ! நான் தொட முனைந்தால் நீ தூர விலகுவதால், எட்டியிருப்பினும் நின் பேரழகைப் பருகுகின்றேன். நின் மார்பகத்து இளங்குரும்பை எழில் காண நின் முன்றானையை நான் இழுக்க அதைப் பொறாத நீ, ஆடை இழுத்துப் போர்த்து வாய்மொழியால் 'விடு' 'விடு' என்றுரைப்பினும், நின் விழிப்பார்வை என்னை வெறுக்காத நின் உள்ளத்து வேட்கையை உணர்த்திடும்போது, என் இதயம் பொழியும் இன்ப மழையை நான் எப்படித்தான் விளக்குவேன்?



**''நீர்மிகுந்து சொரியும் தேனருவி அருகே**
**செல்வோம் வா!**
**பொழுது வீணாகிறதே என நம் வரவுக்குக்**
**காத்திருக்கும்**
**மலர்ப்பரப்பாம் மஞ்சத்தைப் பார்!**
**தொடையல் என ஒளிரும் முத்தாரப்**
**பல்லழகை**
**மூடியிருக்கும் உதட்டினில் புன்முறுவல்**
**பூத்திட ஊடலில்**
**நிறைவு கண்டு என் தோளில் தொத்திடும்**
**கிளியாவாய்!**
**வாடித் தவித்தே என் காதல் பசுங்கிளியின்**
**நெஞ்சம் தேடிக்கிடந்ததோ?**
**தேடிய நெஞ்சும் திகைப்புற்றதோ,**
**ஒருவேளை வருவானோ**
**வாரானோ என்று!**
**திகில் கொண்ட நெஞ்சம்**
**உலையில் வீழ்ந்த**
**புழுவென துடித்ததோ!''**

(அப்படிப்பட்ட மனநிலையில் வளர்ந்த திகைப்பால் தன்னைப் பிரிந்து சென்ற காதலனின் வருகை நோக்கி வாட்டமுற்று வீழ்ந்ததொரு பிணைமான் ஆனவள், தலைவன் வந்த பின்னும் ஊடலில் சினந்தபோது, அவளைத் தன்னவளாக்கத் தலைவன் சொரிந்திட்ட சொல்மாரி இது.)

**அந்தத் தலைவியோ -**
**ஊடுதல் கொண்டவளாயினும்**
**காதலன் தன்னைத் தழுவிடானோ**
**என்னும் ஏக்கத்தில்,**
**''இன்னும் ஏன் அவன் பேச்சோடு நின்றான்!**
**என்னை இழுத் தேகி மலர்ப்படுக்கையில்**
**சாய்த்துக்**
**கன்னங்கள் சிவந்திட, கன்னல் அதரம்**
**முன்போல் கணக்கின்றிக் களி கொள்ள**
**முந்நூறும் நானூறும் முத்தங்கள்**
**பதித்திட்டால்**
**வேம்பென்று கசப்பதாகக் கைநீட்டித்**
**தள்ளவா செய்வேன்?**
**கட்டித் தழுவ அவன் தடக்கை தாவாதோ?''**
**என்று**
**நெஞ்சம் நெருப்பாகக் கொந்தளித்தாள்**
**காதல் மீதூர.**

**''அன்றொருநாள் என்னை அமளியில்**
**அணைத்து**
**அன்றிலடி நம் உள்ளம் அரைநொடியும்**
**பிரிவதில்லை!**
**என் ஆணை இதுஎன்று பகர்ந்தீரே!**
**பயனென்ன?**
**விடிந்தால் திங்களொன்றும் ஓடிவிடும்,**
**இவள்**
**மடிந்தாலும் மடியட்டும் என்றன்றோ**
**எனைக் குறித்த கவலை ஏதுமின்றி**
**மறுநாளே வருவதாகச் சொன்ன சொல்**
**மறந்தீர்!**
**மறப்பது ஆடவர்க்கு இயல்பென்பறாவது**
**கூறிவிடும்!**
**நானும் உயிர்துறத்தல் மகளிர்க்கும் எளிதே**
**என்பதைக் காட்டுகின்றேன்'' என்றாள்**
**காதலி.**

இவ்வாறு சோகத்தில் தோய்ந்த சொற்களை அந்தப் பொற்சிலை பேசித் தன் உதடுகளை மூடு முன்னர் ஓடிவந்து தழுவினான் காதலன்! "நான் காத்து நின்ற தேனமுதே" என்று அவளும் தழுவிக் கொண்டாள். அம்மதி முகத்தாள் நாணத்தால் தன் கூந்தலிலே முகம் மறைத்தாள்!

**அக்காட்சியைக் கண்ட பிணை**
**மானொன்று**
**நாணத்தால் புதரியிடையினில் மறைந்தது;**
**பச்சைக் கிளிகளும் புறாக்களும் -**
**"இத்தனை**
**பேர் சூழ்ந்திருந்தும் இவர்கட்குக்**
**கூச்சமில்லை!**
**இங்குள்ள மலரணையில் காமக்**
**கூத்தா?"**
**என்றெண்ணித் தத்தம்**
**துணையோடும் பறந்தன!**
**ஊடலின் விளைவாய்க்**
**கூடலில் திளைத்தபின்**
**எழுந்தவள் "இனியும்**
**இப்படி ஒரு பிரிவு**
**வாராதன்றோ!"**
**என்று**
**கூடிமகிழ்ந்து**
**கூந்தல் முடித்த**
**தோகையும்**
**கேட்டாள்!**
**காதலன் அவளைக்**
**கூர்ந்து நோக்கிச்**
**சொன்னான்,**
**'உயிரனையாளே! இது**
**கேள்!**
**நம்மைப் பிரிக்கும் சக்தி**
**எதுவும் உலகினில் உண்டோ?**
**உன்தாய் யாரோ! என்தாய் யாரோ!**
**உன் தந்தையும் என்தந்தையும் என்னதான்**
**உறவோ?**
**நாம் இருவர் எவ்வழி எக்குடிப் பிறப்பென்று**
**எண்ணியோ உள்ளம் ஒன்றானோம்?**
**எங்கிருந்து வந்தோம் என்றறியாதே**
**என்னை நீயும் உன்னை நானும் ஏற்றோம்**
**அன்றோ!**
**இதயத்தில் இடம்தந்து இனிமை கண்டோம்!**
**செம்மண் நிலத்தில் பெய்த மழைநீர்**
**அம்மண் நிறத்தைக் கொண்டபின்**
**அவ்வண்ணத்தைப் பிரிக்கவும் கூடுமோ!**
**அப்படிப் பிணைந்து இணைந்த**
**நம்நெஞ்சம்**
**இனியும் பிரியுமோ என்னும் ஐயமும்**
**அகற்றிடு!"**

"இவ்வாறு குறுந்தொகைப் பாடலை இளங்குமரன் எளிதாக்கிச் சொன்னவுடன், மங்கை நல்லாள் மீண்டும் நிலமானாள். அவன் மழையானான்." - எனக் குறிப்பால் உணர்த்தி முடிக்கின்றார் கலைஞர்.

கவிஞரின் கவிதை நடையே, கட்டழகுப் பெண்ணொருத்தி குயிலின் குரலெடுத்துப் பண்பாடி, மயிலின் அடிதூக்கிவைத்து நடமாடி வரும் நிலையில், உவமையும் உருவகமும் குழலிசைக்க, எதுகையும் மோனையும் மத்தளம் கொட்ட, நிதமும் காண்போரைக் கவரும் ஆடரங்கம் எனத் திகழ்ந்தாலும், அதன் பொருள் ஆழத்தையும் அருமையையும் தெளிய அதனை உரை நடையாகவே அமைத்துக் காண வேண்டும் என்னும் அவாவினால் வரைந்ததே இக்கட்டுரை!



"அவள் மீண்டும் நிலமானாள் - அவன் மழையானான்" என்னும் தலைப்பில் உள்ளம் கலந்த காதலர்தம் இயற்கைக் கூட்டத் திற்கு ஏதுவான அவர்தம் உள்ளத்து உணர்வு எத்தனை நயமாகச் சித்தரிக்கப் பட்டுள்ளது என்பதை எண்ணுவோர் வியவாதிரார்!

ஆம்! அந்தக் கவிதையையும் நான் அப்படியே இங்கு எடுத்தெழுதலாம் என்றாலும், அந்த ஒரு பாடல் மட்டுமா சுவைப்பது! சங்கத் தமிழில் இடம்பெற்ற ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு வகைத் 'தனிச் சிறப்புடையதாய்ப் படிப்பவர்தம் சிந்தை நிறைப்பது! எனவே, கலைஞரின் இப்பாடலை - அவரது 'சங்கத் தமிழ்' ஏட்டிலேயே படித்து சுவைத்திடத் தலைப்படுவீராக! இந்தப் பாடலைப் படிக்கத் திறந்திடும் 'சங்கத் தமிழ்' ஏடு - காதலியின் ஊடலைத் தணித்திட்ட தலைவனின் அலைபாயும் நெஞ்சமென அத்தனை கவிதைகளையும் படிக்காமல் மூடி வைத்திட எவரையும் விடாது!

பழந்தமிழ்ச் சங்கப் பாடல்களில் தோய்ந்த உணர்வை இந்நூல் வழங்குகிறது எனில், கலைஞரின் கற்பனை வளம் பொதிந்த இலக்கியப் படைப்பு ஆற்றலுக்கு ஈடில்லை என்பது மட்டுமேயன்றி, அந்தப் பொற்கால வாழ்வு மீண்டும் தமிழகத்தில் உருவாவதற்கு வழிகாட்ட வல்லவர் கலைஞரே என்னும் பேருண்மையும் விளங்கும்! வாழ்க சங்கத் தமிழ் தந்த கலைஞர்!

***– நன்றி : கலைஞர் பவள விழா மலர்.***

# மேனிலைப் பள்ளித் தேர்வில் முதன்மை பெற்ற

# 99 மாணவ-மாணவிகளின் கல்விச் செலவை அரசு ஏற்பு

மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல 96–97இல் நான்காவது முறையாக நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த அந்தக் காலக்கட்டத்தில் தமிழகத்திற்கு தந்த நிதி நிலை அறிக்கையிலே தமிழை ஒரு பாடமாகவாவது எடுத்துப் படித்து 10, 12ஆம் வகுப்புகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்கள் பெறும் மாணவ மாணவிகளின் உயர் கல்விச் செலவை அரசே ஏற்கின்ற திட்டத்தை அறிமுகப்படுத்தினோம். பிறகு 1997–98ல் இத்திட்டம் மாநில அளவிலே மாத்திரமல்லாமல் மாவட்ட அளவிலும் விரிவுபடுத்தப்பட்டு மாவட்ட அளவிலே மூன்று இடங்களைப் பெறுகின்ற மாணவ, மாணவியருக்கும் இந்த உதவி வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின்படி 10–ஆம் வகுப்பில் சாதனை படைக்கும் மாணவர்களுக்கு அவர்களின் மேல்நிலைக் கல்விச் செலவு அல்லது ஐ.டி.ஐ., பாலிடெக்னிக் நிறுவனங்களில் பயிலுகின்ற செலவு ஆகியவற்றை அரசே ஏற்கின்றது.

12–ஆம் வகுப்புத் தேர்வில் சாதனை படைக்கும் மாணவர்கள் தொழிற்கல்வி உட்பட அவர்கள் எந்த வகைக் கல்விப் பிரிவில் சேர்ந்தாலும் அவர்களுக்குரிய செலவு முழுவதையும் அரசு ஏற்றுக்கொள்கிறது.

1996–ஆம் ஆண்டில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற 10–ஆம் வகுப்பு மாணவர்கள் மூவருக்கும், 12–ஆம் வகுப்பு மாணவர்கள் மூவருக்கும் உயர்கல்விச் செலவை அரசு ஏற்றுக்கொண்டது. 1997–ஆம் ஆண்டில், மாநில, மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பத்தாம் வகுப்பு மாணவர்கள் 126 பேருக்கும், 12–ஆம் வகுப்பு மாணவர்கள் 99 பேருக்கும் உயர்கல்விச் செலவை அரசு ஏற்றுக்கொண்டது.

1998–ஆம் ஆண்டில் மாநில, மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற 139 பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கும், 12–ஆம் வகுப்பு மாணவர்கள் 97 பேருக்கும் உயர்கல்விச் செலவை அரசு ஏற்றது. இந்த நடப்பாண்டில் இத்திட்டத்தின்படி 12–ஆம் வகுப்புத் தேர்வில் மாநில, மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ள 99 மாணவர்களைப் பாராட்டி அவர்களுடைய உயர்கல்விச் செலவை அரசு ஏற்கின்ற நிகழ்ச்சி இன்றைக்கு நடைபெறுகின்றது.

இந்த ஆண்டு 10–ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள் இன்னும் அறிவிக்கப்படவில்லை. அந்த அறிவிப்பு வந்த பிறகு அதிலே. இந்தத் தகுதியை பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் உதவிகளும் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

பட்டதாரிகள் இல்லாத குடும்ப மாணவர்களுக்கு இத்திட்டத்தின்படி உயர் கல்விச் செலவை அரசு ஏற்பது என்கின்ற இன்னொரு திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது இந்த அரசாங்கத்தினால். நான் 89–90ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது தமிழகத்திலே ஒரு குறை இருந்தது. சாதி வாரியாக இட ஒதுக்கீடு இருக்கிறது; பொருளாதாரத் துறையிலே ஏற்றத் தாழ்வு இருப்பதை எண்ணிப் பார்த்து அவர்களுக்கும் இட ஒதுக்கீடு தரப்பட வேண்டும் என்ற ஒரு கோரிக்கை இருந்தது. அதை நெஞ்சிலே பதிய வைத்துக் கொண்டு அப்பொழுது ஒரு திட்டத்தை அறிவித்தோம்.

பட்டதாரியே இல்லாத ஒரு குடும்பத்திலிருந்து வருகின்ற முதல் பட்டதாரி மாணவன் படிப்பிலே, வேலை வாய்ப்பிலே முன்னணியிலே வருவதற்கு ஒரு சலுகையாக ஐந்து மதிப்பெண் அவர்களுக்குத் தருவதென்று ஒரு திட்டத்தை அறிவித்தோம். அதன்படி எல்லா வகுப்பிலிருந்தும் – பிற்படுத்தப்பட்டவர், மிகவும் பிற்படுத்தப்பட்டவர், தாழ்த்தப்பட்டவர்கள், முன்னேறியவர்

*12–ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில – மாவட்ட முதன்மை பெற்ற 99 மாணவர்களுக்குப் பாராட்டு விழா சென்னை – கலைவாணர் அரங்கத்தில் 12.6.99 அன்று கல்வி அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் தலைமையில் நடைபெற்றது.*

*மேனிலைப் பள்ளி பொதுத்தேர்வில் தமிழை ஒரு பாடமாகக் கொண்டு மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற 99 மாணவ–மாணவிகளைப் பாராட்டி அவர்களின் மேற்படிப்புச் செலவினை அரசே ஏற்றிடும் சான்றிதழ்களையும் மேனிலைப் பள்ளித் தேர்வில் மாநிலத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...*




என்பதற்காக ஒதுக்கப்பட்ட இடஒதுக்கீடு மாத்திரமல்லாமல் அந்த இட ஒதுக்கீட்டுக்குள்ளேயே உயர்ந்த சாதியைச் சேர்ந்தவர்கள் – அந்தக் குடும்பத்திலிருந்து முதல் பட்டதாரி மாணவன் இவன் தான் என்ற அளவில் வருவார்களேயானால் அவர்களுக்கு ஐந்து மதிப்பெண்கள் அதிகமாகத் தரப்பட்டதின் காரணமாக அந்த 90–ஆம் ஆண்டு 400 பேர் பெரும் பயன் பெற்றுத் தங்களுடைய நன்றியையும் மகிழ்ச்சியையும் கழக அரசுக்குத் தெரிவித்தார்கள். ஆனால் அதன் மீது ஒரு வழக்கு தொடரப்பட்டு நல்லவேளையாக தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த 400 பேர் தப்பி, இனிமேல் இது தொடரக் கூடாதென்று நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்ட காரணத்தால் அந்தத் திட்டம் அத்துடன் நின்று போய்விட்டது.

### பட்டதாரி இல்லாத குடும்ப மாணவர்களுக்குச் சலுகை

மீண்டும் நான்காவது முறையாக நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும், அந்த முறையை நிறைவேற்ற முடியாது என்பதைத் தெரிந்து வேறு வகையிலே சிந்தித்தோம். அப்படி சிந்தித்துத் தான் பட்டதாரிகள் இல்லாத குடும்பங்கள் அது ஆதிதிராவிடர் வீட்டுக் குடும்பமாக இருக்கலாம். அல்லது பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வீட்டுக்குடும்பமாக இருக்கலாம். அல்லது முன்னேறிய சாதி செட்டியார், முதலியார், அய்யர், அய்யங்கார் அவர்கள் வீட்டுப் பிள்ளைகளாக இருக்கலாம். யாராக இருந்தாலும் அந்தக் குடும்பத்தில் இவர் தான் முதல் பட்டதாரி என்றால், அந்தப் பட்டதாரிகள் மருத்துவக் கல்வி, பல் மருத்துவக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி, பொறியியல் கல்வி, வேளாண்மைப் பொறியியல் கல்வி ஆகிய ஒவ்வொரு வகைத் தொழிற் கல்வியிலும் சேரும் முதல் 10 நிலை மாணவர்களின் உயர்கல்விச் செலவு முழுவதையும் கழக அரசு ஏற்றுக் கொண்டது.

இவர்கள் அதிலே தங்களுடைய திறமையைக் காட்ட வேண்டும். பொருளாதாரத் துறையில் இந்த இடஒதுக்கீடு செயல்பட வேண்டுமேயானால் முதல் நிலையில் மதிப்பெண் எடுக்கின்ற பத்து பேரும் அந்தக் குடும்பத்திலிருந்து வருகின்ற முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும். அதற்கு முன் அந்தக் குடும்பத்திலே யாரும் பட்டதாரியாக இல்லாவிட்டால் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற சலுகையாக நான் மேலே தெரிவித்த எந்தக் கல்வி பயில விரும்பினாலும் அந்தச் செலவு முழுவதையும் அரசு ஏற்கின்ற ஒரு புதிய திட்டத்தை 96–97ல் அறிமுகப்படுத்தி அது இப்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டம் 97–98ஆம் ஆண்டு முதல் சித்தமருத்துவம், சட்டக் கல்வி ஆகிய படிப்புகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது என்பதையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

மாணவர்களை மேலும் ஊக்கப்படுத்த, குறிப்பாக கிராமப்புறத்து மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்காக 89–90ஆம் ஆண்டிலேயே ஆட்சிப் பொறுப்பிலே இருந்த போது 8–ஆம் வகுப்புவரை படிக்கின்ற மாணவ–மாணவியர் அனைவருக்கும்

இலவச பஸ் பாஸ் வழங்குகின்றத் திட்டத்தை அறிமுகப்படுத்தினோம். இப்போது 96–97ல் ஆட்சிக்கு வந்தவுடன் 8–வது வகுப்பு வரை என்றிருந்த இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டத்தை ப்ளஸ் 2 வரை படிக்கின்ற மாணவ மாணவியர் அனைவருக்கும் நீடித்துத் தந்தோம்.

இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் தமிழகத்திலே பள்ளிகளில் முதற்கட்டமாக தமிழகத்திலே – 1000 பள்ளிகளிலாவது கணினியை அறிமுகப்படுத்தி கணினிப் பயிற்சி மாணவர்களுக்குத் தரவேண்டுமென்று திட்டமிட்டு அறிவித்து அதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் எல்லாம் கோரி அதை நிறைவேற்றித் தருவதற்காக தனியார் நிறுவனங்கள் பல முன்வந்து இந்த ஆண்டு முதற்கட்டமான 695 பள்ளிகளிலே கணினிப் பயிற்சி 9–ஆம் வகுப்பு, 10–ஆம் வகுப்பு, 11–ஆவது வகுப்பு, 12–ஆவது வகுப்புகளில் தொடங்கவிருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியும்.

இந்தக் கணினி யுகத்தில் தமிழ்நாடு இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களை எல்லாம் முந்திக் கொண்டிருக்கின்ற சிறப்பை நிச்சயமாக நாம் பெற வேண்டும், பெறுவோம் என்ற நம்பிக்கையை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திலே கிராமப்புறத்தில் இருக்கின்ற மாணவர்கள் இந்த இட ஒதுக்கீட்டிலேயே ஒரு பதினைந்து விழுக்காட்டைப் பெறுவதற்கான வழிவகை செய்து கிராமப்புறத்தில் நடைபெறும் அரசு மேல்நிலைப் பள்ளிகள், அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைப் பள்ளிகள், பிற்படுத்தப்பட்டோர்–சீர் மரபினர் நலத்துறைப் பள்ளிகள், வனத்துறை நடத்தும் பள்ளிகள் – ஆகியவற்றில் படிக்கும் மாணவர்களுக்கு இந்த பதினைந்து சதவிகித ஒதுக்கீடு அவர்களுக்குத் தொழிற்கல்வியிலே வழங்கப்படும் என்று அறிவித்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் உங்களுக்கு நான் ஞாபகப்படுத்துகிறேன்.

கிராமப்புறங்களில் இருந்தாலும் பயிற்றுக் கட்டணம் வசூலிக்கும் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு இந்த இடஒதுக்கீடு பொருந்தாது என்பதை இந்த ஆண்டு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றோம்.

### கல்வித்துறைக்கு செய்துள்ள வசதி – வாய்ப்புகள்

இந்த அரசைப் பொறுத்தவரையில் ஒரு மதிப்பீடு – அரசியல் அல்ல நான் பேசுவது – நீங்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக ஒரு ஒப்பீடு – உங்களுக்கு எவ்வளவு வசதி வாய்ப்புகள் செய்து தரப்பட்டிருக்கின்றன, கல்வியை வளர்ப்பதற்காக ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் மகிழ்ச்சியை தரக்கூடிய அளவிற்கு எந்த வகையிலே இந்த அரசு கல்வித்துறையில் தன்னுடைய நாட்டத்தைச் செலுத்தியிருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டை ஒப்பீடாகச் சொல்ல விரும்புகிறேன்.

ஏற்கெனவே நடைபெற்ற ஐந்தாண்டு கால ஆட்சியில் தமிழகத்தில் நியமனம் செய்யப்பட்ட இடைநிலை ஆசிரியர்களின் எண்ணிக்கை 8,450. இந்த மூன்றாண்டு காலத்தில் – இந்த ஆட்சியில் நியமனம் செய்யப்பட்ட இடைநிலை ஆசிரியர்களின் எண்ணிக்கை 31,108.

மக்களுக்கு எதுவுமே செய்யாத அரசு இந்த அரசு என்று சிலபேர் சொல்கிறார்களே, அவர்களுக்குப் பதிலாக இந்தப் புள்ளி விவரம் அமைந்திருக்கிறது.

ஏற்கெனவே ஐந்தாண்டு கால ஆட்சியில் நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை 838. கடந்த மூன்றாண்டுகளில் கழக அரசு நியமனம் செய்துள்ள பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை 2,420.

ஏற்கெனவே ஐந்தாண்டு கால ஆட்சியில் நியமனம் செய்யப்பட்ட முதுகலை பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை 843. இந்த ஆட்சியில், மூன்றாண்டுகளில் மாத்திரம் நியமனம் செய்யப்பட்ட முதுகலை பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை 2,385.

ஏற்கெனவே ஐந்தாண்டு காலத்தில் உடற்கல்வி ஆசிரியர்கள், தொழில் ஆசிரியர்கள், கலை ஆசிரியர்கள் என அழைக்கப்படும் சிறப்பாசிரியர்கள் நியமிக்கப்படவே இல்லை. ஒருவர் கூட நியமிக்கப்படவில்லை. உடற்கல்வி, தொழிற்கல்வி, கலைக்கல்வி போன்றவை தேவையில்லை என்று எண்ணியிருக்கலாம். ஆனால் இந்த ஆட்சியில் 1,332 உடற்கல்வி ஆசிரியர்கள், 614 கலை ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இந்த ஒப்பீடெல்லாம் வேறு எதற்காகவும் அல்ல. இந்த ஒப்பீட்டை உங்களுக்குக் காட்டுவது உங்களுக்காக, எதிர்கால இந்த நாட்டின் செல்வங்களாக வரவிருக்கின்ற மாணவ மாணவிகளுக்காக இந்த அரசு ஊக்கத்தோடு உற்சாகத்தோடு செய்கின்ற நல்ல காரியங்கள் இவை. இவைகளை எல்லா மாணவ மாணவியரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதற்காக சொல்கிறேனே அல்லாமல் வேறல்ல என்பதை எடுத்துக்கூறி பரிசு பெறுகிறவர்கள், அரசின் உதவி பெற்றுத் தங்கள் படிப்பைத் தொடரவிருக்கின்ற மாணவ– மாணவியர் அனைவருக்கும் என்னுடைய இனிய நல்வாழ்த்துக்களை – அவர்களுடைய பெற்றோர் இடத்திலே நின்று, அவர்களுடைய சகோதரர் இடத்திலே நின்று – வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✦ ✦ ✦

# ஆற்றலின் அகவை 76

ஆற்றல்களின் பல்கலைக் கழகம் அவர். சமூக விடுதலைக்காகப் போராளியாகவே வாழ்ந்து கொண்டிருப்பவர். எத்திசையிலிருந்து எதிர்ப்பு ஈட்டிகள் வந்தாலும் அதன் முனை முறிக்கும் வல்லமை அவருக்குண்டு. கலைஞர் - என்ற சொல்லுக்குப் புதிய அர்த்தம்; சாதுர்யம் மிக்க வீரம்!

நினைவு ஆற்றல், உழைப்பு ஆற்றல், உணர்வு ஆற்றல், படைப்பு ஆற்றல், தமிழ் ஆற்றல் இவற்றின் மொத்த உருவம்தாம் கலைஞர் என்பதை எவரும் மறுக்க முடியாது. அணிவகுத்து வருகின்ற அவருடைய ஆற்றல்களை விளக்கிப் பல அத்தியாயங்களை எழுதலாம்.

இளம் பருவத்தில் திருவாரூர்ப் பள்ளி மாணவனாக இருந்து,அதன்பின் ஈரோடு 'குடியரசு' அலுவலகத்தில் பணியாற்றி, அதன்பிறகு கோவைப் படப்பிடிப்புத் தளங்களில் வசனகர்த்தாவாக மிளிர்ந்து, பின்னர் சட்டமன்ற உறுப்பினராக, பொதுப்பணித்துறை அமைச்சராகச் செயலாற்றி, பேரறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பிறகு முதல்வர் பொறுப்பைச் சுமந்து பல்வேறு நலத்திட்டங்களை உருவாக்கி, உச்சகட்டச் செல்வாக்கு நிலையில் அவர் இருந்தபோதும் இளமைப் பருவத்தில் தன்னை வார்த்தெடுத்த திருவாரூர் வீதிகள் அவர் நினைவுக்குளத்தில் தேங்கியே இருந்தன. வளர்ந்த மண்ணை அவர் மறக்கவில்லை என்பதற்கு உதாரணமாக ஒரு சம்பவம்.

1980 சட்டமன்றத் தேர்தலுக்குப் பின் தமிழகச் சட்மன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகக் கலைஞர் இருந்த நேரமது. திருவாரூர் நகரக் கழகத்தின் சார்பில் 'முத்துவேலர் - அஞ்சுகம்" என்ற திருப்பெயரில் கழகக் கட்டடத்தின் திறப்பு விழா நடைபெறுகிறது. விழாவுக்கான மேடை, ஒரு நாற்சந்தியில் அமைக்கப்பட்டிருந்தது. கழகக் கட்டடத்தைத் திறந்து வைத்த கலைஞர் தமது பேச்சின் தொடக்கத்தில், "எனக்கு முன்புறத்தில் குமரகோவில் தெரு இருக்கிறது. பின்புறத்தில் தர்மகோவில் தெரு இருக்கிறது. வலப்புறத்திலே அய்யனார் கோவில் தெரு இருக்கிறது. இடப்புறத்திலே ஆண்டார் கோயில் தெரு இருக்கிறது. இவற்றிற்கு நடுவிலே என் இதயக் கோவிலாம் அறிஞர் அண்ணாவின் சிலை இருக்கிறது" என்று குறிப்பிட்டபோது எழுந்த கரவொலி அடங்க வெகுநேரமானது. அவர் பள்ளி மாணவனாக இருந்து, ஏறத்தாழ 45 ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையில், தாம் வாழ்ந்த பகுதியின் தெருக்களையெல்லாம் நினைவில் தேக்கி வைத்திருந்து, உரிய நேரத்தில் அவற்றைக் குறிப்பிட்டுப் பேசியதோடல்லாமல், அவற்றோடு அங்கிருந்த அண்ணா சிலையையும் இணைத்துக் குறிப்பிட்டு முத்தாய்ப்பாக அந்த வாக்கியத்தை நிறைவு செய்ததை எண்ணி மகிழாதார் இருக்க முடியாது. சட்டமன்றத்தில் புள்ளி விவரங்களை வழங்குவதிலாகட்டும், மேடையில் பழைய சம்பவங்களைத் தொகுத்துச் சொல்வதிலாகட்டும் கலைஞரின் நினைவாற்றலைக் காண்கின்ற எவருக்குமே ஆச்சரியமாகத்தான் இருக்கும்.

உழைப்பிற்கு ஓர் உருவம் கொடுத்து ஓவியம் வரைந்தோமானால் இறுதியில் அது கலைஞரின் உருவமாகத்தான் அமைந்திருக்கும். உதயசூரியனுக்கு முன்பாகவே விழித்துக் கொள்கின்ற இந்தத் தமிழ்ச் சூரியனின் ஒரு நாள் உழைப்பு ஆற்றலை அளவிடுவதற்குப் புதிய கருவியைத்தான் கண்டுபிடித்தாக வேண்டும். எடுத்துக் கொண்ட பணி எதுவாக இருந்தாலும் அதை நிறைவாகச் செய்து முடிக்கிறவரை உழைத்துக்கொண்டே இருப்பதுதாம் கலைஞரின் வழக்கம்; வாழ்க்கை இலட்சியம்.

முதல்வர் பொறுப்பு வகிக்கின்றபோதும் உடன் பிறப்புகளுக்கு முக்கிய செய்திகளைத் தெரிவிக்க வேண்டுமென்றால் உடனே கடிதம் எழுதிவிடுவார். காலையில் எழுதுகின்ற கடிதத்தை முரசொலி அலுவலகத்துக்கு அனுப்பிவிட்டுக் கோட்டைக்கு வருவார். கோட்டையில் தமது அலுவல்களைப்


மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்
**நாஞ்சில்** திரு. கி. மனோகரன்

பார்த்துக்கொண்டிருக்கிற நேரத்திலும் உடன்பிறப்புகளுக்கு எழுதப்பட்ட கடிதம் பற்றிய நினைவு அவரது சிந்தை அணுவில் மலர்ந்தே இருக்கும். முரசொலிக்கு அனுப்பிய கடிதத்தின் 'புரூஃபை'க் கொண்டுவரச் செய்து, பிழை திருத்தும் பணியை அவரே மேற்கொள்வார். ஒற்றுப் பிழைகளுக்குக்கூட இடந்தராமல், பிழை திருத்தி முரசொலிக்கு அனுப்பி வைப்பார். அதன் பிறகே அக்கடிதம் அச்சேறும்.

எழுதுகோல் பிடிக்கிற பணியில் மட்டுமன்று, செங்கோல் பிடித்துச் செயலாற்றும்போதும் காலநேரம் பார்க்காமல் கடமையாற்றுகின்ற பாங்கு கலைஞர்க்கு மட்டுமே உண்டு. இன்றைய இளைஞர்களிடம்கூட இல்லாத சுறுசுறுப்பு அவரிடம் இருக்கிறது. இருபத்து நான்கு மணி நேரமும் உழைக்கின்ற ஆற்றல் அவரிடம் இருக்கிறது. இளைய சமுதாயம் அவரைக் கூர்ந்து நோக்கிக் கற்றுக்கொள்ள வேண்டியவை ஏராளமாக இருக்கின்றன.

கலைஞன் என்றாலே உணர்வுப் பிழம்பாக இருப்பான். 'கலைஞர்' 'ன்' விகுதி கொண்ட கலைஞனை விடவும் 'ர்' விகுதியைக் கொண்ட கலைஞரிடம் உணர்வு நெருப்பு அதிகமாகவே இருக்கிறது. அந்த நெருப்புச் எந்தச் சூழ்நிலையிலும் அணைவதில்லை. 'குடியரசு' அலுவலகத்தில் அவர் பணியாற்றிய காலத்தில், திராவிடர் கழகத்தின் கொடியை வடிவமைப்பது பற்றிய ஆலோசனை எழுந்தது. கொடியின் நிறம் கறுப்பு என்பது முடிவாகிவிட்டது. அதில் வேறு ஏதேனும் அடையாளம் ஒன்றையும் பொறிக்க வேண்டும் என்று கழகத்தின் மூத்ததலைவர்கள் யோசித்துக் கொண்டிருந்த நேரத்தில், இளமைப்பு துடிப்புடன் இருந்த கலைஞர், தமது விரலைக் கீறி, கறுப்பு நிறத்தின் நடுவே சிவப்பு பொட்டு வைத்தார். இருண்டு கிடக்கும் தமிழக வானத்தில் சிவந்த சூரியன் தனது ஒளியைப் பாய்ச்சி வெளிச்சமாக்குவது போல் அது காட்சியளித்தது. இந்தச் சிறப்பான எண்ணம், கலைஞருக்குத் தோன்றியபோது அவர் சிவப்பு மையை எடுத்து பொட்டு வைத்திருக்கலாம். அவர் அப்படிச் செய்யாமல் தமது விரலைக் கீறிப் பொட்டு வைத்தாரே, அதில்தாம் கலைஞரின் உணர்வு வெளிப்படுகிறது. தமிழுக்காகவும் தமிழ்ச் சமுதாயத்திற்காகவும் அவர் தமது உணர்வாற்றலை வெளிப்படுத்த எந்தச் சூழ்நிலையிலும் தயங்கியதேயில்லை.

அண்ணா முதல்வராக இருந்தபோது, மொழிப் போராட்டத்தில் ஈடுபட்ட



மாணவர்கள், சென்னை சென்ட்ரல் நிலையத்தில் இரயில் பெட்டிகளுக்குத் தீ வைத்ததால், பதற்றமான சூழ்நிலை உருவானது. நிலைமையினைச் சமனிப்பதற்காகக் கலைஞரை அங்கே அனுப்பிவைத்தார் அண்ணா. நெருப்பு நேரத்தை நீர் தெளித்து அணைக்கக் கலைஞரால் மட்டுமே முடியும் என்பதை அண்ணா நன்றாகவே அறிவார். அண்ணாவின் ஆணைப்படி இரயில் நிலையத்திற்குச் சென்ற கலைஞர், மாணவர்கள் மத்தியில் புறநானூற்றைப் பொழிகிறார். ஆவேசப் புயல் மெல்ல மெல்ல அடங்கி வருகிறது. அப்போது, கலைஞரை நோக்கி மாணவர்கள், "இந்தி ஒழிக" என்று நீங்கள் சொன்னால்தான் இங்கிருந்து போகவிடுவோம்" என் நிர்ப்பந்திக்கிறார்கள். மாணவ பருவத்திலிருந்தே 'இந்தி ஒழிக' எனக் குரல் கொடுத்தவர்தாம் கலைஞர். ஆனாலும் அமைச்சர் பொறுப்பிலிருக்கும் அவர், ஆட்சி மொழியாக இருக்கும் இந்திக்கு எதிராகக் குரல் கொடுத்தால் சட்டச் சிக்கல்கள் ஏற்படும் என்பதை அறிந்திருந்தார். அதே நேரத்தில் மாணவர்களின் மன நிலையையும் அவர் உணர்ந்திருந்தார். எனவே, மாணவர்களை நோக்கி, "இந்தி........." என உரத்துக் குரல் கொடுத்தார். உணர்ச்சிப் பிழம்பாய் இருந்த மாணவர்கள் "ஒழிக" எனப் பெருங்குரல் எழுப்பினர். மாணவர்களின் உணர்வுடன் தமது உணர்வையும் ஒரே அலைவரிசையில் ஒலிக்கச் செய்து தமது ஆற்றலை வெளிப்படுத்தி வெற்றிக் கொண்டார் கலைஞர்.

தந்தை பெரியார் மறைவின்போது தமிழகமே கண்ணீரில் மிதக்கிறது. கழகத்தவரின் நாடி நரம்புகளிலெல்லாம் உணர்வு பாய்ச்சிய அந்தப் பகுத்தறிவுச் சூரியன் மறைந்ததால் எல்லோருடைய இதயங்களிலும் இருள் சூழ்ந்த நிலை. துயரம் அழுத்துகிற நெஞ்சுடன் கடமையாற்றிய கலைஞர், "தந்தை பெரியாரின் இறுதிச் சடங்குகள் அரசு மரியாதையுடன் நடைபெறும்" என அறிவிக்கிறார். அதிகாரிகள் பதைத்துப் போகிறார்கள். "எவ்வித அரசுப் பொறுப்பிலும் இல்லாத பெரியாருக்கு எந்த அடிப்படையில் அரசு மரியாதையுடன் இறுதிச் சடங்கை நிறைவேற்றுவது?" என்ற கேள்வியை எழுப்புகிறார்கள். இதனால், மத்திய அரசின் கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்றும் தெரிவிக்கிறார்கள். கலைஞர் கலங்கவில்லை.

அதிகாரிகளை நோக்கிச் சட்டெனச் சொல்கிறார். "காந்தியடிகள் கூடத்தான் எவ்வித அரசுப் பொறுப்பையும் வகிக்கவில்லை. அவருக்கு எந்த அடிப்படையில் அரசு மதியாதையுடன் இறுதிச் சடங்குகள் நிறைவேற்றப்பட்டனவோ அதே அடிப்படையில்தான் தந்தை பெரியாருக்கும் நிறைவேற்றப்படும். ஏனெனில் இது பெரியாரின் அரசு" என்று தனது உணர்வை அழுத்தமாக வெளிப்படுத்தினார்.

படைப்பாற்றலில் கலைஞரை விஞ்சக்கூடிய ஒரு படைப்பாளியைத் தமிழகம் இதுவரை கண்டதில்லை என்பது தமிழ்கூறும் நல்லுலகம் அறிந்த உண்மை. அவர் தொடாத துறைகளே இல்லை. கவிதை, சிறுகதை, புதினம், நாடகம், திரைப்படம் எனப் பல துறைகளிலும் பாதம் பதித்துத் தனி முத்திரைக்குச் சொந்தக்காரராகியிருக்கிறார்.

கவியரங்கங்களுக்கு தனி மரியாதையை உருவாக்கியவர் கலைஞர்தான். 'விதவை' என்ற சொல்லில்கூடப் பொட்டு இல்லையே என்று ஒரு கவிஞர் ஆதங்கப்பட்டபோது, 'விதவை' என்ற வடமொழியைப் பின்பற்றினால் பொட்டு இருக்காது. 'கைம்பெண்' என்ற தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்தினால் ஒன்றுக்கு இரண்டு பொட்டுகள் இருக்கும் என நெத்தியடியாகச் சொன்னவர் கலைஞர். வார்த்தைகளை மட்டும் அடுக்கிக்கொண்டு போகாமல் கருத்துகளைச் சொல்லிக் கைத்தட்டல்களை அள்ளியவர் நம் கலைஞர்.

கதையோ, கவிதையோ, கடிதமோ அவர் ஒவ்வொரு சொல்லையும் செதுக்கி வைக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும். அதனால்தான், அவரது வார்த்தைகள் இன்றும் உயிர்பெற்று விளங்குகின்றன. ஐம்பதாண்டுகளுக்கு முன் அவர் எழுதிய 'பராசக்தி'யில் "கோயில் கூடாது என்பதல்ல; கொடியவர்களின் கூடாரமாகி விடக்கூடாது" என்ற சொற்றொடர் இன்றும் ஜீவனுள்ளதாக இருக்கிறது.

"எரிமலை குமுறும் முன் எச்சரிக்கை செய்வதில்லை" என்ற 'மனோகரா'வில் ஒலித்த வசனம் இன்றும் நம் காதுகளில் ஒலிக்கிறது.

"ஓவியம் வரைபவன், கலை என்ற பெயராலே காமத்தைக் கொள்ளையடிக்கிறான்" என்று 'மந்திரிகுமாரி'யில் அவர் எழுதியது இன்றைக்கும் பொருத்தமானதாக இருக்கிறது.

"பொன்னும் மணியும் மின்னும் வைரமும் பூட்டி... சந்தனக் கட்டிலிலே தங்கத்தாலான தொட்டிலிலே... கண்ணே, மணியே என்று யாரைக் கொஞ்சினீர்களோ...அவனை அந்த மனோகரனை..." என்ற சலசலத்து ஓடும் நீரோடை போல அவரிடமிருந்து பொங்கிப் பிரவாகிக்கும் எழுத்து நடை வேறு எவர்க்குமே கைவரப் பெற்றதில்லை.

கலைஞரின் படைப்பாற்றலில் அடித்தளமாக இருப்பது அவரது தமிழாற்றல்தாம். அவர் ஒன்றும் வித்வான் பட்டம் பெற்றவர் அல்லர். பண்டிதரும் அல்லர். ஆனாலும், பழகு தமிழில் அழகு நடையில் எழுதுவதற்கோ, பேசுவதற்கோ அவருக்கு இணையாக இன்னொருவரைக் குறிப்பிட முடியாது.

1990ஆம் ஆண்டு சென்னைக் கடற்கரையில் ஐம்பெரும் விழா நடைபெற்றது. அப்போதைய பாரதப் பிரதமர் வி.பி.சிங் மற்றும் வடநாட்டுத் தலைவர்கள் பலரும் கலந்துகொண்ட மாபெரும் நிகழ்ச்சி அது. வடநாட்டுத் தலைவர்கள் இந்தியிலும், ஆங்கிலத்திலும் உரையாற்றியபோது, திரண்டிருந்த தொண்டர்கள் உற்சாகமின்றிக் காணப்பட்டனர். சலசலப்பு அதிகமாகிக் கொண்டிருந்தது. தொண்டர்கள் அமைதி காக்க வேண்டும் எனக் கழகத்தின் முன்னோடிகள் ஒவ்வொருவராக ஒலிபெருக்கியில் அறிவித்தும் கூட்டத்தில் சலசலப்பு தொடர்ந்துகொண்டே இருந்தது. ஒரு கட்டத்தில், கலைஞர் எழுந்தார். கூட்டத்தை நோக்கிக் "கழகம் கட்டுப்பாடு உடையது" என்றார். அடுத்த நொடி, அந்தக் கடற்கரை மணலில் குண்டுசி விழுந்தாலும் சத்தம் கேட்கும் என்கிற அளவுக்கு அமைதி திரும்பியது. அவர் சொன்னது சாதாரண வார்த்தைகள்தாம். ஆனால், அவர் சொன்னதாலேயே அந்த வார்த்தைகளுக்கே வலிமை சேர்ந்தது.

கலைஞரிடம் ஒருவர் கேள்வி கேட்கிறார். "நீங்கள் ஆத்திகரா, நாத்திகரா?" என்பதுதான் அந்தக் கேள்வி. அவர் யார் என்பது நாம் அனைவரும் அறிந்ததுதான். ஆனால், கேள்வி கேட்டவர், கலைஞரை வம்பில் மாட்டிவிட வேண்டும் என்பதற்காகவே கேள்வியைக் கேட்டிருந்தார். கலைஞர் மிகவும் சாமார்த்தியமாக 'நானாத்திகன்' என்று பதிலளித்திருந்தார். இதை 'நான் ஆத்திகன்' என்று எடுத்துக் கொள்ளலாம்; 'Non ஆத்திகன்' என்றும் எடுத்துக் கொள்ளலாம்; 'NON' என்பது ஆங்கிலச் சொல் என்றாலும் கலைஞரின் வசப்படும்போது ஆங்கிலச் சொல்லும் அழகுத் தமிழாகப் புதிய வடிவம் பெறுகிறது. இதுதான் கலைஞரின் தமிழாற்றல்.

ஐந்தரை அடி உயரம் கொண்டவர்தாம் கலைஞர் என்றாலும், அவரது ஆற்றலின் உயரத்தை அண்ணாந்துதான் பார்க்கவேண்டும். புலிக்கொடி பறந்த சோழமண்டலத்தின் ஒரு சிறு கிராமத்தில், சாதாரணக் குடும்பத்தில் பிறந்து, இன்று உலகத்தில் வாழும் ஏழு கோடித் தமிழர்களின் ஒப்பற்ற ஒரே தலைவராகக் கலைஞர் விளங்குகிறார் என்றால், அதற்கு அவரது ஆற்றல்தான் காரணம். அவரும் அவரது ஆற்றலும் நிலைத்து நின்று தமிழ்கூறும் நல்லுலகுக்கு நூறாண்டுக் காலம் பயனளிக்க வேண்டும். வாழ்க பல்லாண்டு பவள விழா நாயகர்.

*நன்றி : கலைஞர் பவள விழா மலர்*



# சமத்துவபுரமாகும் தமிழ்நாடு

முதலமைச்சர் **கலைஞரின்** இதயத்தில் உருவான, தமிழினம் சகோதர உணர்வுடன் வாழ்ந்திட, சாதிமத பேதங்கள் அகற்றிட நாடு முழுமைக்கும் எடுத்துக் காட்டாகத் திகழ்ந்து வரும் பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், பெரம்பலூர், திருச்சி, திண்டுக்கல், சிவகங்கை மாவட்டங்களில் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

தஞ்சை மாவட்டம் குருங்குளத்தில் அமைக்கப் பட்டுள்ள பெரியார் நினைவு சமத்துவபுரத்தையும், நாகை மாவட்டம் பனங்குடி சமத்துவபுரத்தையும் **15.5.99** அன்று முதலமைச்சர் திறந்து வைத்தார்.

திருவாரூர் மாவட்டம், அலிவலம், பெரம்பலூர் மாவட்டம் வாரணவாசி மற்றும் திருச்சி மாவட்டம் கல்லக்குடியில் பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் **16.5.99** அன்று முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

திண்டுக்கல் மாவட்டம் சீவல்சரகு பெரியார் நினைவு சமத்துவபுரத்தை **26.5.99** அன்றும் சிவங்கை மாவட்டம் அமராவதிபுதூர் சமத்துவபுரத்தினை **27–5–1999** அன்றும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தும், அவ்விழாக்களில் நலதிட்ட உதவிகளை வழங்கியும் சிறப்புரையாற்றினார். அவ்வுரைகளிலிருந்து சிலபகுதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### *குருங்குளம் சமத்துவபுரம்*

இந்த சமத்துவபுரத்திலே இன்றைக்கு யார் யார் கூடி அமர்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தஞ்சை மாவட்டம் என்றால் நண்பர்கள் கூறியதைப் போல பெருமைக்குரிய மாவட்டம் மாத்திரம் அல்ல. இந்த மாவட்டம்தான் சனாதனத்திலே உயர்ந்த மாவட்டம். இந்த மாவட்டம்தான் வைதீகத்திலே உயர்ந்த மாவட்டம். இந்த மாவட்டம் பக்தியிலே எல்லா மாவட்டத்தையும் மிஞ்சி நிற்கின்ற மாவட்டம்; இந்த மாவட்டம்தான் தமிழ்நாட்டிலே அதிகக் கோயில்களைக் கொண்டிருக்கின்ற மாவட்டம். ஆனால் இந்த மாவட்டத்திலே சாதி மதப் பிணக்குகள் இருக்கலாமா என்கின்ற அந்தக் கேள்வியின் அடிப்படையிலே எழுந்த வினாவிற்கு கிடைத்த விடைதான் சமத்துவபுரம் என்பதை நான் மீண்டும் மீண்டும் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

சமத்துவபுரம் என்றால் என்ன என்று இங்கே குழுமியிருக்கின்ற பலபேருக்கு தெரியாமலேகூட இருக்கலாம். சமத்துவபுரம் என்பது இங்கே கட்டப் பட்டிருக்கின்ற வீடுகள் மாத்திரமல்ல, அந்த வீடுகளிலே குடியமர்கிறார்களே அந்த மக்கள் – அவர்களுடைய உணர்வுகள் இவைகளெல்லாம் ஒன்றிக் கலக்கின்ற இடத்திற்குப் பெயர்தான் சமத்துவபுரம். தந்தை பெரியாரின் உள்ளத்திலே உதயமான சமத்துவக் கருத்து அதுதான்.

இங்கே நூறுவீடுகள் அழகாகக் கட்டி முடிக்கப் பட்டிருக்கின்றன. அதற்குரிய வசதி வாய்ப்புகளெல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. இதிலே 40பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் குடியமர்ந்திருக்கின்றார்கள். மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 25 பேர் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் 29 பேர், இதர பிரிவினர் 6 பேர் இங்கே குடியமர்ந்திருக்கிறார்கள்.

மத ரீதியாக, சாதி ரீதியாக பிளவுபட்டுக் கிடக்கிறவர்கள் எல்லாம் இந்த நூறு வீடுகளில் இன்று முதல்

உறவாடுகின்ற ஒரே சமுதாயமாக விளங்க இருக்கின்றார்கள்.

இது ஏதோ ஒருநாள் கூத்தல்ல. இது ஒரு அடையாளம். இதைப்போல தமிழ்நாடு முழுவதும் சமத்துவபுரமாக ஆகவேண்டும் என்பதற்கு எழுதப்படுகின்ற முதல் எழுத்துத்தான் இந்த சமத்துவபுரம்.

சமத்துவபுரங்களை அமைத்து அங்கே வீடுகளை மாத்திரம் அமைத்துக் கொடுத்தால் போதுமா? போதாது என்பதற்காகத்தான் இங்கே நம்முடைய மாவட்ட ஆட்சித்தலைவர் நல்ல சிந்தனை சக்தியோடு ஒவ்வொரு வீட்டிலும் தென்னங்கன்றுகள், ஒரு பலாக்கன்று, ஒரு சப்போட்டா கன்று, ஒரு கொய்யா கன்று ஒரு கருவேப்பிலைச் செடி ஆகியவைகளை நடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றார்.

அதுமாத்திரமல்ல; கணினி அமைப்பு கொண்ட சமுதாய தகவல் மையம் இங்கே அமைக்கப் பட்டிருக்கின்றது.

கிராமப்புற இளைஞர்களிடமும் சிறுவர்களிடமும் கலை உணர்வை வளர்க்கின்ற கலைக்கூடம் 'நமக்கு நாமே' திட்டத்தின் கீழ் இங்கே அமைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு இசை, ஓவியம், நாட்டியம் ஆகியவற்றிற்கான கருவிகளும் இங்கே உள்ளன.

இங்கே வாழ்கின்ற பயனாளிகளுக்கு நிரந்தர வருவாய் கிடைக்கின்ற வகையில் கறவை மாடுகள், டயர் வண்டிகள், மளிகைக்கடை, தேநீர்க்கடை, தையல்கடை, கூடை பின்னல் ஆகிய இனங்களுக்கு தாட்கோ, ஊரக வளர்ச்சித் துறை மூலம் கடன் வசதியும் செய்யப்பட்டிருக்கின்றது. இவைகளை எல்லாம் இங்கே வாழ்கின்ற மக்கள்





பயன்படுத்திக் கொள்ளவேண்டும் பயன்படுத்தி கொள்வார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகின்றேன்.

***பனங்குடி சமத்துவபுரம்***

இன்று திறந்து வைக்கப்பட்டிருப்பது, 21வது சமத்துவபுரம், 20 சமத்துவபுரங்களை நான் திறந்து வைத்தபோதெல்லாம் ஒன்றை ஒன்று முந்துகின்ற அளவிற்கு – ஒன்றை ஒன்று வென்றுகாட்டுகின்ற அளவிற்கு மதுரையிலிருந்து இன்றுகாலையிலே குருங்குளம் வரையிலே நான் திறந்து வைத்த சமத்துவபுரங்கள் எல்லாம் ஒன்றை ஒன்று வென்று காட்டுகின்ற அளவிற்கு அமைந்து, அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களையெல்லாம் புகழ்ந்து பாராட்டுகின்றேன். இந்த மாவட்ட ஆட்சியர் எப்படி செயல்பட்டிருப்பார் என்று பார்க்கும்பொழுது வந்து நுழைந்த உடனேயே குருங்குளத்தை மிஞ்சுகின்ற அளவிற்கு பனங்குடி

சமத்துவபுரம் அமைந்திருக்கிறது என்று நான் மனதிற்குள்ளாகவே பாராட்டிக் கொண்டு வந்தேன்.

இங்கே மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவருக்கான அலுவலகங்கள் பல இடங்களில் இந்த ஆண்டு கட்டி முடிக்கப்பட வேண்டும். அதற்கு ஏறத்தாழ 40 கோடி ரூபாய்க்கு மேல் நிதிநிலை அறிக்கையிலே நாங்கள் நிதி ஒதுக்கியிருக்கின்றோம்.

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடம் 3 கோடியே 68 இலட்ச ரூபாய் செலவில் 90ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலே அப்பொழுது நான் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது கட்டி முடிக்கப்பட்டது. அதேபோல், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு 89ஆம் ஆண்டு நான் அடிக்கல் நாட்டினேன். அடிக்கல் நாட்டியபொழுது, அந்த கட்டிடத்திற்கு மறைந்த மாவீரன் கே.வி.கே.சாமியின் பெயரைச் சூட்டி, அந்த கட்டிட வளாகத்திற்கு காமராஜரை பெற்றெடுத்த அன்னை சிவகாமியம்மாள் வளாகம் என்ற பெயரையும் சூட்டினேன். 89–ல் நான் அடிக்கல் நாட்டி 1991–ஆம் ஆண்டு எனது ஆட்சி கலைக்கப்பட்டது. ஆனால் அந்தக் கட்டிடத்தினுடைய கட்டுமானப்பணி கடந்த ஆட்சிக் காலத்திலே 5 ஆண்டுகாலமும் புறக்கணிக்கப்பட்டே கிடந்தது. ஏன் என்று கேட்பாரில்லை. பிறகு 96லிலே நான் 4–வது முறையாக ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடன் பொதுப்பணித்துறை அமைச்சர் துரைமுருகனிடத்திலே சொல்லி விரைவில் முடிக்கப்பட வேண்டும் என்று கூறி ஒரே ஆண்டு காலத்தில் கட்டி முடிக்கப்பட்டு, அந்த மாவட்ட ஆட்சியர் வளாகம் 16.9.98 அன்று திறந்து வைக்கப்பட்டது. அதைப்போலவே சென்னையிலே பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பாழடைந்துவிட்டது என்று அதை இடித்துவிட்டு, கட்டவேண்டும் என்று முடிவு செய்து 13.2.90 அன்று 3வது முறையாக நான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த ஆணையின்படி அது நிறைவேறுகின்ற காலம் நான் வந்துதான் ஆகவேண்டும் என்று இருந்திருக்கிறது.

சமூக ஒற்றுமை; மத நல்லிணக்கம்; ஒரு மதத்தோடு இன்னொரு மதம் மோதிக் கொள்ளக்கூடாது; அதற்கு வழி இருக்கக் கூடாது. சாதித் தலைவர்கள் சாதி மோதல்களை உண்டாக்குகிறார்கள்; அதற்கு இடம் தரக்கூடாது. சாதிச்சண்டை என்றால் என்ன? மதச்சண்டை என்றால் என்ன? திடீர் என்று ஒரு சாதியில் உள்ளவர்கள் எல்லாம் கூடி ஆயிரம் பேர் புறப்பட்டு, இன்னொரு சாதிக்காரர்களை தாக்குகிறார்களா என்றால் இல்லை. அதை யாரோ ஒருவர் தூண்டிவிடுகிறார். தூண்டிவிடுகிறவர் யார்? சாதியை வைத்து, பிழைப்பு நடத்த வேண்டும் என்று விரும்புகின்றவன் அதை தூண்டிவிடுகின்றான். அப்படிப்பட்டவர்கள் அடக்கப்பட்டால், ஒடுக்கப்பட்டால், சாதிச் சண்டை வராது. அதைப்போலவே, மத மோதல் எப்படி ஏற்படுகிறது? இஸ்லாமியர்களோ, கிறித்தவர்களோ, இந்துக்களோடு சென்று மோதிக் கொள்ள வேண்டுமென்று கருதுகின்றார்களா இல்லை. சிறுபான்மை சமுதாயம் இன்றைக்கு இந்தியாவிலே, தமிழ்நாட்டிலே, பல்லாண்டு காலமாக வாழ்ந்து வருகின்ற சமுதாயம், அவர்கள் இந்த மண்ணுக்கு உரியவர்கள்தான். அவர்களுக்கு ஒரு தீங்கு என்றால் துடித்துடித்து அவர்களுக்காக தங்களுடைய உயிரையும் பணயம் வைத்து, அவர்களை காப்பாற்றக்கூடிய ஒரு இயக்கம் தி.மு.கழகம் என்பதையும், ஒரு ஆட்சி தி.மு.கழக ஆட்சி என்பதையும் நான் இங்கு வலியுறுத்த கடமைப் பட்டிருக்கிறேன்.

அந்த வகையிலேதான் சமத்துவம் ஒன்றுதான் – எல்லோரும் சமமாக வாழ்வது ஒன்றுதான் மக்களிடத்திலே ஒற்றுமையை உருவாக்க வல்லது என்ற காரணத்திற்காகத்தான் இந்த திட்டத்தை இன்றைக்கு தொடங்கி 150 சமத்துவபுரங்களை திறப்பது என்று திட்டமிட்டு, அவைகள் படிப்படியாக கட்டப்பட்டு வருகின்றன. 21வது சமத்துவ புரத்தை இன்று திறந்துவைத்திருக்கின்றேன்.

### *ஆலிவலம் சமத்துவபுரம்*

இன்றைய நிகழ்ச்சியிலே 55 கோடி ரூபாய் செலவில் 1,869 கட்டிடங்கள், குடிநீர் திட்டங்களுக்காக 13 கோடியே 10 இலட்சத்து 19 ஆயிரம், கால்கோள் விழா நடை பெறுகின்ற மாவட்ட ஆட்சித்தலைவர் வளாகத்திற்காக ஏறத்தாழ 5 கோடி ரூபாய், புதிய குடிநீர் திட்டங்கள் உட்பட 494 பணிகளின் மதிப்பு ரூ. 35 கோடிக்கு மேற்பட்ட தொகை; இவைகளுடன் நலத்திட்ட உதவிகளுக்கு ஆறுகோடி ரூபாய் ஆக அனைத்தையும் சேர்த்து சற்றொப்ப 55 கோடியே 30 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய் செலவிடப்படுகிறதென்றாலும் கூட இங்கே பேசியவர்கள் அனைவரும் ஏன் நான் உட்பட இந்த ரூ.55 கோடியை பற்றி மிக அதிகமாகப் பேசாமல் ஒரு கோடிக்கு குறைவாக நிறைவேற்றப்படுகின்ற பெரியார் நினைவு சமத்துவ புரத்தைப் பற்றியேதான் பேசிக் கொண்டிருக்கின்றோம். காரணம் 55 கோடி ரூபாய் அல்ல 500 கோடி திட்டமானாலும் 5,000 கோடி ரூபாய் திட்டமானாலும் நிறைவேற வேண்டுமேயானால் பெரியார் கண்ட கனவு பலிக்க வேண்டும். அண்ணா கண்ட கனவு பலிக்க வேண்டும். அதுதான் சமத்துவம். அந்த சமத்துவம் நம்மிடத்திலே தோன்றாதவரையில்; அந்த உணர்வு நம்மிடத்திலே தோன்றாதவரையில்; அவர் கிறிஸ்தவ மதம், அவர் முஸ்லீம் மதம், அவர் இந்து மதம் என்று வேறுபாடுகள் இருப்பதிலே கூட பராவாயில்லை. அவர்களுக்கிடையிலே ஏற்படுகிற மோதல்கள் குறையாதவரை, பல்வேறு சாதிகளிலே உள்ள பேதங்கள் குறையாதவரை, 500 கோடியல்ல 50,000 கோடி வரையிலே திட்டங்களுக்குச் செலவழித்தாலும் அவைகள் மன நிறைவோடு மக்கள் அனுபவிக்கிறார்கள் என்ற சூழ்நிலை அந்தந்த திட்டங்களை அறிவித்து செயல்படுத்துகின்ற என்னைப் போன்றவர்களுக்கு நிச்சயமாக ஏற்படாது.



சமத்துவபுரத்திற்கு எத்தனை கோடி செலவழிக்கப் பட்டது என்பது முக்கியமல்ல, அதில் எத்தனை வீடுகள் என்பதல்ல முக்கியம். அதிலே யார் யார் வாழ்கிறார்கள் என்பதல்ல முக்கியம். வாழ்கிறவர்களின் உள்ளத்திலே என்ன உணர்வு இருக்கிறதென்பதுதான் முக்கியம். அந்த உணர்வுதான் நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் ஆரம்பத்தில் சொன்னாரே "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று தேசியக்கவி பாரதி பாடினார். "இருட்டறையில் உள்ளதடா உலகம் சாதி இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே" என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாடினார்.

ஆண்டவன் படைப்பிலே பேதங்கள் இல்லை என்பதை வலியுறுத்துவதுதான் சமத்துவபுரங்களின் நோக்கம். தமிழகத்திலே தென் மாவட்டங்களில் நடைபெற்ற அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெற்ற சாதிக்கலவரங்கள் என்னைப் பாதித்த காரணத்தால் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து அரசியலிலே எத்தனை வேறுபாடு இருந்தாலும் பொதுப்பிரச்சினையில் சமுதாயப் பிரச்சினையில் நாமெல்லாம் ஒன்றாக அமர்ந்து சிந்திப்போம், விவாதிப்போம், செயல்படுவோம் எடுத்த முடிவுகளை ஏற்று உருவாக்கியதின் விளைவாகத்தான் சாதிபேதங்களை ஒழித்தே தீரவேண்டுமென்கின்ற அந்தச் செயல்பாட்டை தமிழகத்திலே நாம் தொடங்கினோம். அதற்கு ஒரு திட்டமாகத்தான் இந்த சமத்துவபுரம் திட்டம்.

இந்த சமத்துவபுரத்திலுள்ள தெருக்களுக்கெல்லாம் மாணிக்க வீதி, பவள வீதி, முத்து வீதி, வைடூரிய வீதி, கோமேதக வீதி, மரகத வீதி, நீல வீதி, வைர வீதி என்றெல்லாம் பெயர்கள் சூட்டப்பட்டிருக்கின்றன.

இன்னொன்று இங்கே குடியிருக்க வருகின்றவர்கள் கையெழுத்திட்டுப் போட்டுத்தர வேண்டிய முக்கியமான நிபந்தனை சமத்துவபுரத்திற்கு ஒரு பொதுச் சுடுகாடுதான். யார் இறந்தாலும் அது பொதுச் சுடுகாட்டிலேதான் புதைக்க வேண்டும் என்கின்ற அந்த நிலையையும் எடுத்திருக்க வேண்டும். இவைகளெல்லாம் புரட்சிகரமாக இன்றைக்குத் தோன்றலாம்.

எந்த ஒரு ஊராட்சி மன்றத்தில் பொதுச் சுடுகாடு இருக்கிறதோ, பொதுச்சுடுகாடு பராமரிக்கப்படுகிறதோ அந்தச் சுடுகாடு உள்ள அந்த ஊராட்சி மன்றங்களுக்கு அரசின் சார்பாக ஒரு இலட்ச ரூபாய் தனி நிதியும், சமத்துவ விருதும் அந்த ஊராட்சித் தலைவருக்கு வழங்கப்படும்.

***வாரணவாசி சமத்துவபுரம்***

இந்த விழாவில் **100** சமத்துவபுர வீடுகள் திறக்கப்படுகின்றன என்பது மாத்திரம் பெரிதல்ல; இந்த விழாவிலே பெரம்பலூர் மாவட்டத்தில் மொத்தம் **40** கோடியே **96** இலட்சத்து **96** ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பல்வேறு திட்டப் பணிகள் இன்று முதல் பரிணமிக்கத் தொடங்குகின்றன.

திறக்கப்படும் கட்டிடங்களின் மதிப்பு **5** கோடியே **68** இலட்சத்து **38** ஆயிரம் ரூபாய்.

அடிக்கல் நாட்டப்பட்ட பணிகளின் மதிப்பு **33** கோடியே **24** இலட்சத்து **57** ஆயிரம் ரூபாய்.

வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளின் மதிப்பு **2** கோடியே **4** இலட்சத்து **99** ஆயிரம் ரூபாய்.

மறைந்த பல வீராங்கனைகள் பெயரால் – தியாகச் சுடர்களின் பெயரால் – மகளிர் இனத்திற்காகப் பாடுபட்ட மாதரசிகளின் பெயரால் பல திட்டங்களை பெண்கள் நலனுக்காக இந்த அரசு அறிமுகப்படுத்தி, அவர்களுடைய

வாழ்விலே ஒளிவிளக்கையேற்றி வைப்பதற்காக நாளும் உதவிக் கொண்டிருப்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

பெண்களுக்கு சொத்தில் சமஉரிமை வழங்கி 89இல் நாம் சட்டம் கொண்டுவந்ததை யாரும் மறந்திருக்க மாட்டீர்கள்.

அதைப் பின்பற்றித்தான் உள்ளாட்சிமன்றத் தேர்தல்களில் பெண்களுக்கு 33 சதவிகிதம் பங்களிப்பு தரப்பட்டதும் இந்த ஆட்சியிலேதான்.

எனவே சமுதாயத்திலே இரண்டு அங்கங்களாக இருந்தாலும்கூட ஒரே அங்கங்கமாக ஆணையும் பெண்ணையும் கருத வேண்டுமென்ற அந்த உணர்வோடு செயல்படுகின்ற அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசாகும்.

***கல்லக்குடி சமத்துவபுரம்***

தந்தைப் பெரியாருடைய பெயரால் இன்றைக்கு அமைந்திருக்கின்ற சமத்துவபுரம் நான் கடந்த பல மாதங்களாகச் சொல்லி வருவதைப்போல் இது 24–வது சமத்துவபுரம். இந்த சமத்துவம் தொடருமேயானால் தமிழகத்திலே திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறும். சாதிப் பிணக்குகள், சேட்டைகள் வீழ்ந்திடும். மத வாதம் ஒழியும், மத நல்லிணக்கம் தோன்றும். இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் என்கின்ற மதபேதங்கள் இருந்தாலும்கூட மதங்களுக்கிடையே மோதல்கள் இல்லாத சூழ்நிலைகளை நம்மால் உருவாக்க முடியும். அப்படி உருவாக்குகின்ற நேரத்திலே சாதிப்பூசல்களை ஒழிக்க முடியும். வன்முறைகளை வீழ்த்த முடியும். அமைதியான தமிழகத்தை உருவாக்க முடியும். அமைதியான ஜனநாயக இந்தியாவை உருவாக்க முடியும்.

***சீவல்சரகு சமத்துவபுரம்***

மாமழை ஒரு மாநிலத்தை வாழ வைக்கக் கூடியது. மாமழை பொழிந்தால்தான் மரங்கள், செடிகள், கொடிகள் வளரும். அவை வளர்ந்து காடு பெருகினால்தான் வானத்திலே முகில்கள் மிதக்கும். முகில்கள் மிதந்தால்தான் மழை வரும். இப்படி ஒரு வட்டம் இயற்கை ஓடுகிற நேரத்தில் உலக மக்கள் உவகையால் குதிக்கின்றார்கள். காரணம் தங்களுக்கு நல்வாழ்வு அமைகிறது என்பதை எண்ணி அதைப்போல இன்றைக்கு திறந்து வைக்கப்படுகின்ற இரண்டு சமத்துவபுரங்களில் குடியேறுகிற மக்களும், குதூகலத்தோடு இந்த நாளை எண்ணிப் பார்க்கிறார்கள்.

சாதி, சமய பற்று அகற்றப்பட்டு ஆண்டவனால் படைக்கப்பட்டவர்கள் மனிதர்கள் என்கிறபோது அந்த மனிதர்களில் ஆயிரம் சாதிகள் இல்லை, மதங்கள் இல்லை, எல்லா மதங்களும் ஒரே மதம்தான். மதங்களிடையே மோதுதல் கூடாது. மத நல்லிணக்கம் தேவை, சாதிச்சச்சரவு தேவையற்றது. 'எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற பாரதியின் பாட்டை மெய்ப்பிக்க 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற திருமூலர் வாக்கை பேரறிஞர்அண்ணா அவர்கள் அடிக்கடி கூறுவாரே அதற்கு உயிர்கொடுக்க உருவாகி இருப்பதுதான் பெரியார் நினைவு சமத்துவபுர திட்டம்.

இந்தத் திட்டத்தின்படி ஒரிரு ஆண்டுகளில் தமிழகத்தில் 150 இடங்களில் சமத்துவபுரங்களை அமைப்பது என்று அறிவித்து, இன்றைக்கு இங்கே இருபத்தைந்தாவது சமத்துவபுரத்தை திறந்து வைக்கின்றேன். இதேநேரத்தில் விருப்பாட்சியில் அமைந்துள்ள 26–வது சமத்துவபுரமும் இதே விழாவில் சேர்த்துத் திறக்கப்படுகிறது. நாளைய தினம் சிவகங்கையில் 27–வது சமத்துவபுரம் திறக்கப்படுகிறது.




எல்லா சமத்துவபுரங்களையும் திறந்து வைத்து பெருமகிழ்ச்சி அடைகின்ற அதேநேரத்தில் இந்த 27 இடங்களில் மாத்திரமல்ல; நான் எண்ணி இருக்கின்ற 150 இடங்களில் மாத்திரமல்ல; இங்கே மாத்திரம் சமத்துவபுரம்

தோன்றினால் போதாது. என்னுடைய நோக்கு, குறிக்கோள் தமிழகமே சமத்துவபுரமாக ஆக வேண்டும் என்பதுதான். இந்தியத் திருநாடே சமத்துவபுரமாக ஆகவேண்டும் என்பதுதான். உலகமே சமத்துவபுரமாக ஆகவேண்டும் என்கிற கொள்கை உயர்ந்தோரால் இன்றைக்கு எடுத்து ஓதப்பட்டு பரப்பப்படுகிறது என்றாலும் கூட நம்மால் முடிந்த அளவிற்கு நமது மாநில அளவிலாவது சமத்துவபுரத்தை காணவேண்டும் என்று நாம் விரும்புகிறோம். நம்முடைய நாட்டளவிலாவது சமத்துவபுரத்தை காணவேண்டும் என்று நாம் விரும்புகின்றோம்.

இந்த எண்ணம் எனக்கு திடீர் என்று உதித்தது அல்ல; என்னுடைய இரத்தத்தோடு ஊறிய ஒன்று. நான் சிறுபிள்ளையாகத் தவழ்ந்த அந்தக் காலத்தில் இருந்து இன்றைக்கு உங்கள் முன்னால் உங்களால் உருவாக்கப் பட்ட முதலமைச்சராக நின்று கொண்டிருக்கின்ற இந்த நேரம் வரையில் என்னுடைய இரத்தத்தின் அணுக்களிலேயே துடித்துக் கொண்டிருக்கின்ற உணர்வைத்தான் சமத்துவபுரத் திட்டங்களாக நான் மாற்றி இருக்கின்றேன்.

இங்கே பொன்னம்மாள் அவர்கள் பேசும்போது சொன்னார்கள்; முதலமைச்சர் அவர்களுடைய வீடே ஒரு சமத்துவபுரம்தான் என்று குறிப்பிட்டார்கள். அப்படி வீடு சமத்துவபுரமாக ஆவதற்கு நான் ஏன் திட்டமிட்டேன்? அந்த எண்ணம் எப்படி உருவாயிற்று என்றால், நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

இளமைக் காலத்திலே நான் – பொது வாழ்க்கையிலே அடியெடுத்து வைத்த என்னுடைய பதினான்கு அல்லது பதினைந்தாவது வயதிலேயே நான் சென்று பிரச்சாரம் செய்த இடங்கள் அருமை தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதிகள்தான். அதைப்போலவே அரசியல் வாழ்க்கையில் நான் திராவிட இயக்கத்தில் தந்தை பெரியார் அவர்களுடைய நிழலிலே வளர்ந்தேன் என்றாலுங்கூட, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கரம் பிடித்து உலவினேன் என்றாலும்கூட, அவர்கள் இருவருடைய கருத்தின் அடிப்படையில் இஸ்லாமிய சமுதாய பெருமக்கள், கிறிஸ்துவ சமுதாய மக்கள் என இந்தச் சமுதாய மக்களோடு இளமைக் காலந்தொட்டு எனக்கு இருந்த நெருக்கமான பழக்கம் – தமிழகத்திலே வேறு சில அரசியல் தலைவர்களுக்கும் இருந்தது என்றாலும்கூட, விகிதாச்சாரத்தில் சதவிகிதத்தில் நான்தான் அவர்களை எல்லாம் அதில் விஞ்சி நிற்பேன் என்று பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அந்த உணர்வுதான் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற இந்த நேரத்தில் தமிழகம் முழுவதும் சமத்துவப்புரத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தை எனக்கு உருவாக்கிற்று. அதன்படி, 25வது சமத்துவபுரத்தை இங்கேயும், 26–வது சமத்துவபுரத்தை பக்கத்திலே விருப்பாட்சியிலேயும் இன்றைக்கு நான் உங்களுடைய அன்பான வாழ்த்துக்களோடு திறந்து வைக்கின்றேன்.

### *அமராவதிபுதூர் சமத்துவபுரம்*

தமிழகத்திலே பெரியார் பிறந்த மண், பெருந்தலைவர் காமராஜர் பிறந்த மண், பேரறிஞர் அண்ணா பிறந்த மண், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் பிறந்த மண். அவர்களால் பண்படுத்தப்பட்ட இந்த மண்ணில் மதச் சண்டைகளுக்கு மதவாத மோதல்களுக்கு இடமில்லை. ஜாதிச் சச்சரவுகளுக்கு இடமில்லை. ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற திருமூலரின் வார்த்தை இங்கே நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்கு என்ன வழி என்று பார்க்கும் போதுதான் ஆங்காங்கு சிதறிக் கிடக்கின்ற மக்களை ஓரளவாவது சமுதாயத் துறையில் ஒன்றுபடுத்த வேண்டும் என்கிற முடிவை எடுத்துக்கொண்டு



சமத்துவபுரம் திட்டத்தை இந்த அரசு கடந்த ஆண்டு தொடங்கியது.

ஒவ்வொரு சமத்துவபுரமும் ஒன்றையொன்று மிஞ்சுகின்ற வகையில் இன்றைக்கு அமைந்துள்ளன. இவைகளைப் பற்றி எல்லாம் தமிழகத்தில் உள்ள ஏடுகள் மாத்திரம் அல்ல. அகில இந்திய அளவிலே உள்ள ஆங்கில ஏடுகளெல்லாம் இண்டியன் எக்ஸ்பிரஸ் போன்ற ஏடுகள், ஸ்டேட்ஸ்மேன் போன்ற ஏடுகள், எக்னாமிக்ஸ் டைம்ஸ் போன்ற ஏடுகள் இவைகளெல்லாம் புகழ்ந்து எழுதியிருக்கின்றன.

நீ கோயிலுக்கு செல்வாயா? என்று கேட்டால் நான் செல்ல மாட்டேன் என்று இனி சொல்லமாட்டேன். ஏனென்றால் நான் இதுவரை 27 கோயில்களுக்கு சென்று வந்திருக்கிறேன். இது 27வது கோயில். நான் ஒரு காலத்தில் சொன்னேன். 1972ல் நான் முதலமைச்சராக இருந்தபோது தொழுநோயாளிகளுக்கு மறுவாழ்வு இல்லங்களை அமைத்து; தெருவிலே இரவல் வாழ்வு, பிச்சைக்கார வாழ்வு நடத்திக் கொண்டிருந்தவர்களை அழைத்து வந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு தொழுநோய் இல்லத்தை உருவாக்கி அதிலே அவர்களை வாழச் செய்து, வாழ்கின்றவர்களுக்குத் தொழில் பயிற்சியும் அளித்து தொழில் தொடங்குகின்ற அளவிற்கு பொருளாதார ஏற்றத்தையும் அவர்களுக்குத் தந்து அவர்களைக் கண்காணிக்கின்ற பொறுப்பாளர்களும் நியமிக்கப்பட்டார்கள்.

ஏறத்தாழ 4 ஆயிரம் 5 ஆயிரம் பேர் பிச்சை எடுப்பதையே வாழ்க்கையாகக் கொண்டிருந்தவர்கள் இன்றைக்கு அந்த மறுவாழ்வு இல்லங்களில் மனைவி மக்களோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த மறுவாழ்வு இல்லங்கள் 7.2.1973ஆம் ஆண்டிலும் அமைக்கப்பட்டது. அப்போது சொன்னேன். இந்த இல்லங்கள்தான் நான் சென்று தொழுகின்ற ஆலயங்கள். இங்கிருக்கின்றவர்கள் இந்த மறுவாழ்வு பெறவேண்டுமென்று எண்ணுகின்ற மனிதர்கள்தான் நான் வணங்குகின்ற தெய்வங்கள் என்று சொன்னேன். அதற்கடுத்த இன்றைக்கு நான் சொல்வது, இந்த சமத்துவபுரங்கள்தான். சமுதாயத்திலே ஒரு மறுமலர்ச்சி ஏற்படுத்தக்கூடியதும், நாங்கள் அனைவரும் ஒரே குலம் என்கின்ற உரத்த கீதத்தை ஓங்கி ஒலிக்கக் கூடியதுமான மனிதர்கள். மனிதர்கள் அல்ல. மனித தெய்வங்கள் வாழ்கின்ற கோயில்கள் இந்த சமத்துவபுரங்கள்.

சமத்துவபுரங்களில் குடியேறி வாழ்ந்து விட்டால் மாத்திரம் போதாது. சமத்துவ நிலையைக் கடைப்பிடிக்க வேண்டும். ஒவ்வொருவரும் அண்ணன் தம்பிகளாக, அக்காள் தங்கைகளாக, தாயாக, தந்தையாக ஒருவரை ஒருவர் பாவித்து நல்ல உறவுமுறையோடு இங்கு வாழ வேண்டும். அப்பொழுதுதான் சமுதாயத்தில் ஏற்படக்கூடிய சச்சரவுகள், அதைத் தூண்டி விடுவதற்கு காத்துக் கொண்டிருக்கின்ற ஓநாய்கள், இவர்களெல்லாம் நாட்டில் ஒழிக்கப்படுவார்கள். நன்மை கொழிக்கும். நலம் செழிக்கும். அதற்கு ஏற்ற வகையிலே சமத்துவபுரம் இன்றைக்கு இங்கே திறக்கப்படுகிறது.

★ ★ ★

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 10.6.99 அன்று திருச்சி மாவட்டம் பண்ணப்பட்டியில் பெரியார் நினைவு சமத்துவபுரத்தைத் திறந்து வைத்தார்.**



# பூக்களும் நீயே! வேலியும் நீயே!

– கவிஞர் வைரமுத்து

சொன்னான் பழங்கவி பைஸி:'
'தங்கம் பெருமை பெறுவது
அக்பரின் முத்திரையால்"

சொல்கிறோம் நாங்கள் :தமிழ் பெருமை பெறுவது
உன் பேனாவிலும், நாவிலும் பிறந்து வருவதால்

சொன்னான் நிஜாமி :
"பல்முளைக்கும் முன்பே
என் சொல் முளைத்துவிட்டது"

சொல்கிறோம் நாங்கள் :
அஞ்சுகத்தம்மை கர்ப்பத்தில்
ஏழாம் மாதத்தில் உன் இதயம் துடிக்குமுன்பே
மூன்றாம் மாதத்தில் முத்தமிழ் துடித்தது.

பூமிக்கு வரும்போது
ஒவ்வொருவருக்கும் ஒன்று கொணர்ந்தாய்

பெற்றோர்க்கு ஆச்சரியம்
கற்றோர்க்குத் திகைப்பு

இளையவர்க்கு நம்பிக்கை
மூத்தோர்க்குப் பொறாமை

தமிழுக்குப் பூக்கள்
தமிழருக்கு வேலி

காலங்கள் உன்னைக் கலைஞனாக்கின
களங்கள் உன்னைத் தலைவனாக்கின

காயங்கள் உன்னை வீரனாக்கின
கண்ணீர் ரத்தம் ஞானியாக்கின

குறைந்தபட்ச வாழ்வில் தொடங்கி
உயர்ந்தபட்சம் தொட்டவன் நீ



மார்பில் ஆடிய மாலைகள்
முதுகில் குத்திய கத்திகள்

சுமக்க முடியாத புகழ்
செரிக்க முடியாத அவமானம்

நீளமான பயணம்
ஆழமான சுவடு

போதிய துய்ப்பு
போதுமென்ற மனது



நரைக்காத முயற்சி
நாளையின் தொடர்ச்சி

இந்த நூற்றாண்டில்
உன் போல் முழுவாழ்வு
எவர் வாழ்ந்தார் இங்கே?

கரைகள் தூங்கினாலும்
ஓயாமல் பேசும் அலைகள் போல
தமிழர் தூங்கினாலும்
அடித்தல் ஓயவில்லை
உன் அரை நூற்றாண்டு அலைகள்

ஒரு நாளில் சிலபொழுது
உன்னை ரசித்தலில் கழியுமெனக்கு



தபால்தலை சேகரிக்கும் மாணவன் மாதிரி
உன்
தடயங்கள் சேகரிக்கும் ஆசை எனக்கு

திருக்குவளைக் குளத்தில் நீ
படித்துறையில் உட்கார்ந்த பழைய சூடு

கச்சணத்தில் பதிந்த உன்
காற்சுவடு

கமலாலயக் குளத்தில்
நீ ஆடிய வேளையில் ஓடிய அலை

தண்டவாளத்தில் ஒட்டிய
தலை எண்ணெய்

பாளையங்கோட்டைச் சிறையின்
பழைய கம்பி
உன் முதல் எழுத்தின்
மூலப்பிரதி

அண்ணா அஞ்சலிக் கவிதையில்
கண்ணீர்ச் சொட்டு விழுந்த
கடைத்தாள்

பதவிப் பிரமாணத்தின்
முதல் கையொப்பம்

நெருக்கடிக் காலத்திலும்
உன் போர்வாள் சிந்திய புன்னகை

உன்
இதயத்திலிருந்து கொஞ்சம்
இரும்புத்துண்டு

பிறக்கும் நூற்றாண்டுக்கு
உன்னிடமிருந்து பிராணவாயு

இவையும் இன்னபிறவும்
சேகரிக்கவே ஆசை எனக்கு

உனக்குப் பிறகும்
நானிருந்து...

நன்றி : கலைஞர் பவளவிழா மலர்

# தீண்டாமை – மதநல்லிணக்கத்தை வலியுறுத்தி வீடியோ படம்



மாண்புமிகு செய்தி–விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர் திரு. வ. முல்லைவேந்தன் அவர்கள் அறிவிப்பு!

அரசுத் திட்டங்களையும், சாதனைகளையும், ஆற்றியுள்ள பணிகளையும் பொதுமக்கள் அறிந்திடும் வகையில் மாவட்ட அளவிலான பல்துறை பணி விளக்க முகாம்கள் மாவட்டந்தோறும் தொடங்கி நடைபெற்று வருகின்றன. முதல்கட்டமாக 7.6.99 அன்று இராமநாதபுரம், திருநெல்வேலி, கடலூர் மாவட்டங்களிலும், 12.6.99 அன்று சிவகங்கை மாவட்டத்திலும், 13.6.99 அன்று தூத்துக்குடி மாவட்டத்திலும், 14.6.99 அன்று விழுப்புரம் மாவட்டத்திலும் பல்துறை பணி விளக்க முகாம்களின் தொடக்க விழாக்கள் நடைபெற்றன.

**பணிவிளக்க முகாம்**

இராமநாதபுரத்தில் செய்தித் துறை சார்பில் அரசின் நலத்திட்டங்களை விளக்கி கூறும் வகையில் பல்துறை பணி விளக்க முகாமும், பல்துறை பணிவிளக்க பொருட்காட்சி ஆகியவற்றை மாண்புமிகு விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர் திரு. வ. முல்லைவேந்தன் அவர்கள் தொடங்கி வைத்து அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார். அவர் பேசியதாவது :–

அரசின் நலத்திட்டங்கள் மக்களைச் சென்றடையும் வகையில், அவர்கள் அறிந்து கொள்வதற்காக பல்துறை பணிவிளக்க முகாம்கள் மாவட்டந்தோறும் நடத்தப் படவுள்ளன. இந்த ஆண்டை தீண்டாமை ஒழிப்பு, மதநல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமை ஆண்டாக முதலமைச்சர் அறிவித்துள்ளார். அனைத்து பள்ளிகளிலும் மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் மாணவர்கள் ஒவ்வொரு திங்கட்கிழமையும் உறுதிமொழி எடுக்க வேண்டுமென்று பள்ளிகளுக்கு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

ரூ.21 இலட்சம் செலவில் தீண்டாமை ஒழிப்பு, மத நல்லிணக்கம், சமூக ஒற்றுமையை வலியுறுத்தி வீடியோ திரைப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளது. அதனை அனைத்து மாவட்டங்களிலும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் கிராமந்தோறும் வீடியோ மூலம் ஒளிபரப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. இந்தியாவில் மக்களின் நலன்களுக்காக மானியம் அதிகளவில் தமிழ்நாடு ஒதுக்கீடு செய்கிறது. பல்வேறு துறைகள் மூலம் மானியமாக மட்டும் ஆண்டிற்கு ரூ.5,500 கோடி தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.



# திருச்சி நாகமங்கலத்தில் குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள்

குடிசை மாற்று வாரிய திட்டத்தைப் பொறுத்த வரையில் 1970–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட திட்டமாகும். அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நேரத்தில் சென்னையில் வாழுகிற ஏழை, எளிய மக்கள், குடிசைப் பகுதிகளில் படுகின்ற வேதனை போதாது என்று தீயினாலும் அவர்கள் வேதனைப்படுவதைக் காணச் சகிக்காமல் நல்வாழ்வு வழங்குவதற்கு ஒரு நாட்டினுடைய பொதுமக்களுக்கு அத்தியாவசியத் தேவைகள், உணவு, உடை, உறையுள் என்பதில் இந்த உறையுள் அவர்களுக்குக் கிடைக்க என்ன செய்யலாம் என்று யோசித்தபோதுதான் இந்தக் குடிசை மாற்று வாரியம் என் மனதினுள் உதித்தது.




அதற்கு முன்பு Slum Improvement Board குடிசை மேம்பாட்டுத் திட்டம் என்று ஒன்று இருந்தது. அதை நான் மறுக்க விரும்பவில்லை. குடிசை மேம்பாட்டுத் திட்டத்திற்கும், குடிசை மாற்று வாரியத் திட்டத்திற்கும் நிரம்ப வேறுபாடு உண்டு.

குடிசை மேம்பாடு திட்டம் என்பது குடிசைகள் அப்படியே இருக்கும். அந்தப் பகுதி மேம்பாடு செய்யப்படும். குடிசைகள் நிரம்பி இருக்கிற அந்தப் பகுதியில் சுகாதார வசதிகள், குடிநீர் வசதிகள், விளக்கு வசதிகள் போன்றவை செய்யப்படும். அது மேம்பாட்டுத் திட்டம்.

அந்த மேம்பாட்டுத் திட்டம் மாத்திரம் போதாது. அவர்கள் பயமில்லாமல் வாழ வேண்டும். வெள்ளத்திற்கோ, தீயினுக்கோ ஆட்படாமல் அவர்களுடைய வாழ்வு காப்பாற்றப்பட வேண்டும். அவர்களுடைய குழந்தைகள் குட்டிகள் காப்பாற்றப்படவேண்டும் என்பதற்காகத்தான் Slum Clearance Board என்று அதாவது இருக்கின்ற குடிசைகளை எல்லாம் அகற்றுவது – ஏழைகளுக்காக குடிசைகளை அகற்றுவது என்றால் அது ஏதோ ஏழைகளுக்கு விரோதமாக செயல்படுகிற காரியம் போலத் தோன்றும். ஆனால், உண்மை என்னவென்றால் குடிசைகளை மாற்றியமைத்து அடுக்கு மாடி வீடுகளை கட்டித் தருவது என்கிற வகையிலேதான் இந்தத் திட்டம் 1970–ல் என்னால் தொடங்கப்பட்டது.

### கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு நகரும் சூழல்

தமிழகத்தில் இப்போது ஆறு கோடி மக்கள் இருக்கிறார்கள். அவர்களில் எத்தனை சதவிகிதம் பேர் ஏழைகளாக இருக்கிறார்கள், குடிசைகளில் வாழ்கிறார்கள் என்கிற கணக்கையெடுத்தால் உடனடியாக ஓரிரு ஆண்டுகளில் செய்து முடிக்கக்கூடிய காரியமாக இருக்கிறதா என்றால் இல்லை.

சென்னையில் கூட மொத்தம் எத்தனை குடியிருப்புகள் இருக்கின்றன என்று கணக்கு எடுத்தபோது, ஆயிரம் குடியிருப்புகள் அதிகமாகி விட்டன. எப்படி திடீரென்று அவை தோன்றியதென்றால், கிராமப்புறத்தில் இருக்கிற மக்கள், வேலை வாய்ப்புகளுக்காக – தொழில் தொடங்குவதற்காக – வயிறு பிழைப்பதற்காக கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு நகருகின்ற சூழ்நிலை!

இந்தச் சூழ்நிலையில் நாம் வேறுவிதமாகவும் சிந்திக்க வேண்டியிருக்கிறது. அதனால்தான் கிராமப்புறங்களிலேயே நகர்ப்புற வசதிகளை நாம் கொண்டு வந்து விட்டால் – கிராமப்புற மக்கள் சென்னைக்குப் படையெடுத்து யாரும் விழித்திராத நேரத்தில் – இரவு வேளைகளில் திடீரென்று குடிசைகளைப் போட்டு அங்கே அமர்ந்து, அவைகளைக் காலி செய்ய வேண்டுமென்று சொன்னால் சாலை மறியலில் ஈடுபட்டு, சட்டம் – ஒழுங்குப் பிரச்சினைகளை உருவாக்கும் அந்த நிலைகளை மாற்ற முடியும்.

அதற்காகத்தான் இந்த அரசு கிராமங்களில் நகர்ப்புற வசதிகளை உருவாக்கித்தருகிற அந்த நிலைகளை இன்றைக்கு வளர்த்துக் கொண்டிருக்கிறது.

அவர்களுக்குத் தேவையான குடிநீர் வசதி – சுகாதார வசதி – மற்றும் மற்ற மற்ற வசதிகளையெல்லாம் இன்றைக்கு இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. அப்படிச் செய்து கொடுத்தாலுங்கூட சென்னைக்கு நீங்கள் வந்து பார்த்தால்

இதுபோன்ற குடிசை மாற்று வாரிய வீடுகள் கட்டப்பட்டிருக்கிறது, அந்த வீடுகளில் – ஏற்கெனவே குடிசைகளில் வாழ்ந்தவர்கள் குடியேறி இருப்பார்கள். ஆனால் குடியேறி மூன்று மாதங்களுக்கெல்லாம் அந்த வாரிய வீடுகளுக்குப் பக்கத்தில் ஐந்தாறு குடிசைகள்! வாரியக் குடியிருப்புகளின் சுவர்களையொட்டினாற்போல கட்டப்பட்டு காட்சி தருகிறது. அவை எப்படி வந்தது என்று கேட்டால் – குடிசை மாற்று வாரிய வீடுகளில் வாழ்வதாக ஒப்புதல் அளித்துச் சென்றவர்களே – அந்த வீடுகளைப் பிறருக்கு வாடகைக்கு விட்டுவிட்டுக் கீழே தனியாகக் குடிசைகளைப் போட்டு அதிலே



அவர்களே குடியிருக்க முற்படுகிறார்கள். இதையும் குடிசை மாற்று வாரியம் ஒரு பெரிய சவாலாக எடுத்துக் கொண்டு இன்றைக்குச் சென்னையில் அந்தத் தொல்லையில்லாத ஒரு நிலையை உருவாக்கப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது.

அந்த வகையில் இன்றைக்குத் தமிழகம் முழுவதும் உள்ள – சென்னை போன்ற பெரிய நகரங்களாக இல்லாவிட்டாலுங் கூட – சேலம் ஆனாலும், தஞ்சை ஆனாலும், திருச்சி ஆனாலும், கோவை ஆனாலும், மதுரை ஆனாலும் இந்த நகர்ப்புறங்களிலாவது இந்த குடிசைகளை அகற்றி – இந்த குடிசைகளுக்குப் பதிலாக அடுக்கு மாடி வீடுகளைக் கட்டித் தருகிற திட்டத்தைத் தொடர்ந்து நாங்கள் நிறைவேற்றுவோம் என்ற உறுதியை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் துரிதமாக வீடுகளை ஏழை எளிய மக்களுக்காக அமைத்துத்தர இப்போது கல்நார் வீடுகளை அமைத்துத் தருகிற ஒரு பெரிய திட்டத்தை இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நான் தெரிவித்திருக்கிறேன். கல்நார் வீடுகள் தனித்தனி வீடுகளாகத்தான் கட்ட முடியும். அடுக்கு மாடிகளைப்போல காங்கிரீட் வீடுகளாக அவைகள் கட்டப்படுவதில்லை. தனித்தனி வீடுகளாகக் கல்நார் வீடுகள் கட்டித்தரப்படுகின்றன. வீடு ஒன்றுக்கு 15 ஆயிரம் ரூபாய் வரையில் செலவாகிறது. அப்படிப்பட்ட வீடுகளைப் பல்லாயிரக்கணக்கில் கட்டித்தரும் ஒரு முயற்சியை இந்த அரசு இன்றைக்கு எடுத்திருக்கிறது.

இந்த கல்நார் வீடுகள் எப்படி அமைய வேண்டும் என்பதற்காக – கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு அதிகாரிகளை வைத்து அதுபற்றி விவாதித்து ஒரு நல்ல முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த முடிவு வெகுவிரைவில் செயல்படுத்தப்படும் என்பதையும் திருச்சியில் இருக்கிற உங்களுக்கும் – திருச்சி போன்ற பல்வேறு நகரங்களில் வாழும் ஏழை மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோ.சி.மணி பேசும்போது 1970–71ல் தமிழகத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்காக மாத்திரம் என்று ஒரு வீடு கட்டும் திட்டத்தைத் தொடங்கினோம் என்றார். அதுதான் ஆதிதிராவிடர் களுக்கான இலவச காங்கிரீட் வீடு கட்டித் தரும் திட்டம். அந்தத் திட்டத்தின்படி இலட்சக்கணக்கான வீடுகள் ஆதிதிராவிட மக்களுக்காக இன்றைக்குக் கட்டித் தரப்பட்டிருக்கின்றன.

### தமிழக அரசின் திட்டத்தைப் பாராட்டி மத்திய அரசு நிறைவேற்றுவது பாராட்டுக்குரியது

அந்தத் திட்டத்தை மத்திய அரசு நிறைவேற்ற முன்வந்தபோது அதற்கு பெயர் வைத்தது பற்றி கோ.சி.மணி மிகவும் வருத்தப்பட்டார். ஆனால் நான் அதற்காக வருதப்படவில்லை. மகிழ்ச்சியடைகிறேன். காரணம் ஒரு மாநில அரசு அறிமுகப்படுத்திய திட்டத்தை மத்திய அரசு பாராட்டி – அதைத் தானே நிறைவேற்ற முன்வந்து – அதற்கு எந்தப் பெயர் வைத்தாலும் கவலையில்லை. இந்தியா முழுவதும் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முன்வந்திருப்பது வரவேற்கத் தக்க – பாராட்டத் தக்க ஒன்றாகும்.

ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் அதை காங்கிரீட் வீடுகளாகவே இன்றைக்கும் கட்டிக் கொண்டிருக்கிறோம். அதற்காக செலவாகும் அதிகப் பணத்தைக்கூட மத்திய அரசிடம் எதிர்பார்க்காமல் மாநில அரசே அந்தப் பணத்தைச் செலவு செய்து வருகிறது. ஏனென்றால் அவர்களுக்குக் கட்டித் தருகிற வீடுகள் – காங்கிரீட்டாக இல்லாமல் வெறும் ஓட்டு வீடுகாளாக இருக்குமேயேனால் புயலால் அந்த ஓடுகள் தூக்கிச் செல்லப்பட்டு – மீண்டும் மழை பொழிந்தால் நனைகிற வீடுகளாக அவைகள் ஆகிவிடக்கூடும் என்பதால் காங்கிரீட் வீடுகளாக – ஆதிதிராவிட மக்களுக்குக் கட்டித்தரும் திட்டத்தை அன்றைக்குத் தொடங்கினோம். இன்றளவும் அந்தத் திட்டம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் இது தொடரும்.

ஆதிதிராவிடர்களுக்கு மாத்திரமல்லாமல் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் கூட அத்தகைய வீடுகளைக் கட்டித் தருகிற ஒரு திட்டத்தை அறிவித்து அதற்காக மனைகளையும் எப்படி ஆதிதிராவிடர் களுக்கு மனைகள் வழங்குகிறோமோ அதைப்போல பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் அந்த மனைகளை வழங்குகிற அந்த முயற்சியையும், இந்த அரசு இன்றைக்கு மேற்கொண்டிருக்கிறது.

– திருச்சி, நாகமங்கலம் குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளை 10.6.99 அன்று திறந்து வைத்து முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து....

★ ★ ★




அருந்தமிழை அரியணையில் அமர வைத்த
அஞ்சுகத்தாய் ஈன்றளித்த அருமைச் செல்வா!
மருந்தாகப் பகுத்தறிவை மூட நோய்க்கு
மண்டையிலே ஊட்டிவிட்டப் பெரியார் தம்மின்
உருவாக உலவிவரும் உண்மைத் தொண்டா!
உலகமெலாம் அறிஞரெனப் போற்று கின்ற
அருவியென மேடைக்கே அழகு சேர்த்த
அண்ணாவின் நெஞ்சமர்ந்த அன்புத் தம்பி!

கோட்டங்கள் பலவமைத்தாய் ஏழை வாழ்வின்
கோட்டங்கள் தீர்த்துவைத்தாய்! பிச்சைக் காரர்
வாட்டத்தை மறுவாழ்வு இல்லில் தீர்த்தாய்
வாரியங்கள் பலவமைத்தாய்! குடிசை வாழ்ந்தக்
கூட்டத்தை மாடிகளில் ஏற்றி வைத்தாய்!
கூன்முதுகாய்க் கைகளிலே இழுத்து வந்தப்
பாட்டாளி இழிநிலையைப் போக்கக் காலால்
பயன்கொள்ளும் மிதிவண்டி மாற்றித் தந்தாய்!

கண்ணொளியை வழங்கியாடி மாட்டி விட்டாய்
கலப்புமணம் சட்டமாக்கி உயர்வு தாழ்வை
மன்மீதில் நீங்குதற்கு வழிகள் செய்தாய்!
மறுமணத்தைக் கைம்பெண்கள் புரிய வைத்தாய்
வெண்புரட்சி பசும்புரட்சி வயலில் செய்து
வெற்றிகொடி கோட்டையிலே ஏற்றி வைத்தாய்!
அண்டைநிலக் காவிரியாள் கைகள் கோர்க்க
அறநெறியில் உடன்படிக்கை செய்து யர்ந்தாய்!

சாதிகளால் வெடிக்கின்ற பகைமை நீங்கச்
சமத்துவப் புரங்களினைக் கட்டித் தந்தாய்!
வீதிகளில் கணினிகளைக் கொண்டு வந்தே
விஞ்ஞானம் சிற்றூரும் அடையச் செய்தாய்!
மேதினியோர் செந்தமிழை அறியும் வண்ணம்
மேன்மைகளை இணையத்தில் ஏற்றி வைத்தாய்!
நாதியுற்றோர் தோழனாக நம்மை ஆட்சி
நடத்துகின்ற பவளவிழா கலைஞா வாழி!

– பாவலர் கருமலைத்தமிழா!

# கோம்பை 18ஆம் கால்வாய் திட்டம்




**1969** ஆம் ஆண்டு எங்களுடைய இனிய தலைவர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பு என்னுடைய தோளிலே சுமத்தப்பட்ட அந்தக் கால கட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த அனுபவத்தோடு தமிழகத்திலே பாசன வசதிகளை மேலும் பெருக்க வேண்டும் என்கின்ற அவா மிகக் கொண்டு நான் மாநில அளவிலே ஒரு திட்டக் குழுவை உருவாக்கினேன். மத்திய அளவிலேதான் திட்டக் குழு இருக்கிறது என்பதை உங்களுக்குத் தெரியும். ஆனால் மாநில அளவிலே ஒரு திட்டக்குழுவை முதன்முதலாகத் தொடங்கிய ஆட்சி தமிழகத்திலே திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி ஒன்றுதான்.

அந்த மாநிலத் திட்டக் குழுவைத் தொடங்கிய போது தொடங்கி வைத்த நேரத்தில் நான் ஆற்றிய உரையிலேயே குறிப்பிட்டேன். ''பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று கோரிக்கைகள் வரும், குறிப்பாக விவசாயிகளிடமிருந்து கோரிக்கைகள் வரும். அப்படி வருகிற நேரத்தில் இது சாத்தியமா அல்லவா என்பதைக் கண்டுப்பிடிப்பதற்காக நீண்ட காலத்தைச் செலவிடாதீர்கள், சாத்தியமில்லாத திட்டங்களாக இருந்தாலும்கூட, விவசாயிகளின் நன்மைக்காக நீங்கள் அதை சாத்தியக் கூறான திட்டங்களாக ஆக்க வேண்டும். இதனால் கிடைக்கின்ற வருவாய் எவ்வளவு, இலாபம் எவ்வளவு, விளைவு எவ்வளவு, அந்த விளைச்சலின் காரணமாக அந்தப் பகுதி மக்கள் ஈட்டுகின்ற பொருளாதாரம் எவ்வளவு என்பதையெல்லாம் கணக்கிட்டால் பல திட்டங்களை நிறைவேற்ற முடியாமலே போய்விடும். வருவாய் எவ்வளவு என்று எதிர்பார்க்காத பல திட்டங்கள் அரசாங்கத்திலே இருக்கின்றன. அதைப் போல ஒரு திட்டமாக இதைக் கருதி இதனால் 100 ஏக்கர் பூமிக்குப் பாசன வசதி கிடைக்கிறதா? போதும், 100 ஏக்கர் பூமிக்குப் பாசன வசதி கிடைத்தால் 50 விவசாயிகள் பிழைப்பார்களா? போதும் என்கின்ற அந்த மனஆறுதலோடு இத்தகைய திட்டங்களை நீங்கள் வகுக்க வேண்டும், நிறைவேற்ற வேண்டும்" என்று 70ஆம் ஆண்டில் நான் மாநிலத் திட்டக் குழுவின் தொடக்க உரையிலே குறிப்பிட்டேன்.

தேனி மாவட்டத்தில் உத்தமபாளையம் வட்டத்தில் வைரவன் ஆற்றிலே உள்ள வைரவனார் அணைக் கட்டிலேயிருந்து 100 மீட்டர் தொலைவுக்கு ஒரு தலை மதகு கட்டி, இந்த 18ஆம் கால்வாய் அமைக்கப்படவுள்ளது. இந்தக் கால்வாய்க்கு அருகேயுள்ள கம்பம் பள்ளத்தாக்கில் ஏற்கெனவே 17 கால்வாய்கள் இருக்கின்ற காரணத்தினாலேதான் இதற்கு 18ஆம் கால்வாய் என்று பெயரிடப்பட்டுள்ளது.

30–8–98 அன்று நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல தேனியில் நடைபெற்ற ஒரு விழாவில் 18ஆம் கால்வாய் திட்டம் அடுத்த ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும் என்று நான் அறிவித்தேன். அவ்வாறு சட்டமன்றத்தில் நிதிநிலை அறிக்கை படித்தபோது 26.52 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தேனி மாவட்டத்தில் 18ஆம் கால்வாய்த் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்படும் என்று கூறினேன். அதன்படி இந்தத் திட்டம் அனுமதிக்கப்பட்டு

இன்று தொடங்கி வைக்கப்படுகிறது. விரைவிலே இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்ட நாள் ஒன்று வரும். அந்த நாளில் உங்களையெல்லாம் சந்தித்து உங்களுடைய மகிழ்ச்சியில் நான் பங்கு கொள்வேன் என்ற உறுதியையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த 18ஆம் கால்வாயின் நீளம் ஏறத்தாழ 39 கிலோ மீட்டர். இந்த கால்வாய் தெம்புச்சேரி, டி.சித்தலச்சேரி, பண்ணைப்புரம், சங்கராபுரம், வெம்பக்கோட்டை, லெட்சுமி நாயக்கன்பட்டி, பொத்தைபுரம், மீனாட்சிபுரம், கூடலூர், கம்பம், உத்தமபுரம், புதுப்பட்டி, கோம்பை, தேவாரம் ஆகிய கிராமங்கள் வழியாக சுத்த கங்கை ஓடையுடன் இணைக்கப்படும்.

இத்திட்டத்திற்கு 36 மில்லியன் கன அடி நீர் வைரவனார் அணையிலிருந்தும், அதைவிட அதிகமாக 5 ஓடைகளிலிருந்து 72.73 மில்லியன் கன அடி நீரும் கிடைக்கும். இந்த நீரைக் கொண்டு 36 ஏரிகள் நிரப்பப்படும். மேலும் 4 புதிய ஏரிகள் உருவாக்கப்படும். இதனால் ஏற்கெனவே இருக்கின்ற பாசன வசதியோடு கூடுதலாக 89 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

இந்த ஏரிகளின் கீழ், மொத்தம் 1,475 ஏக்கர் நிலங்கள் உறுதியான பாசன வசதியைப் பெறும். மேலும் 182 ஏக்கர் தரிசு நிலங்களுக்கும், 56 ஏக்கர் புதிய நிலங்களுக்கும் பாசன வசதி கிடைக்கும்.

இத்திட்டத்தைச் செயலாக்குவதற்கு 396 ஏக்கர் பட்டா புஞ்செய் நிலங்களும், 0.70 ஏக்கர் வன நிலங்களும் கையகப்படுத்தப்படும். 1999-2000 ஆண்டின் நிலை வீதப்படி இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை 26.52 கோடி ரூபாயாகும்.

இத்திட்டம் செயலாக்கத்திற்கு வரும்போது 1996 மெட்ரிக் டன் உணவு கூடுதலாக உற்பத்தி செய்யப்படும். அதனால் இந்தப் பகுதி மக்களுடைய பொருளாதாரம் மேம்பாடு அடையும்.

### *1969 முதல் 75 வரை நிறைவேற்றிய நீர்த்தேக்கத் திட்டங்கள்*

என்னைப் பொறுத்தவரையில் அறிஞர் அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு அவரது வழியில் அயராது உழைப்போம் என்று உறுதி எடுத்துக் கொண்டு 1969ஆம் ஆண்டு பொறுப்பேற்ற அந்தக் காலந்தொட்டு முதற்கட்டமாக 1975ஆம் ஆண்டு வரை நிறைவேற்றப்பட்ட நீர்த்தேக்கங்களைப் பற்றி உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இராமாநதி நீர்த்தேக்கம், கடானா நீர்த்தேக்கம், பரப்பலாறு நீர்த்தேக்கம், பாலாறு – புரந்தலார் நீர்த்தேக்கம், வரதமாநதி நீர்த்தேக்கம், மருதாநதி நீர்த்தேக்கம், பொன்னணி ஆறு நீர்த்தேக்கம், பிளவக்கல் நீர்த்தேக்கம் (பெரியாறு), பிளவக்கல் நீர்த்தேக்கம் (கோவிலாறு), கருப்பாநதி நீர்த்தேக்கம், சித்தாறு – 1 நீர்த்தேக்கம், சித்தாறு – 2 நீர்த்தேக்கம், மேல்நீராறு நீர்த்தேக்கம், கீழ்நீராறு நீர்த்தேக்கம், குடகனார் நீர்த்தேக்கம், மணிமுத்தாறு நதிநீர்த்தேக்கம், சின்னாறு நீர்த்தேக்கம், வரத்துப்பாளையம் நீர்த்தேக்கம், வட்டமலை கரை ஓடை நீர்த்தேக்கம், பெருவாரி பள்ளம் நீர்த்தேக்கம், குண்டேரி பள்ளம் நீர்த்தேக்கம், வைகையில் விரகனூர் தடுப்பு அணை, பார்த்திபனூர் தடுப்பு அணை, முக்கொம்பு தடுப்பு அணை, பரம்பிக்குளம் – ஆழியாறு அணை, தண்டரை நீர்த்தேக்கம், நந்தன் வாய்க்கால் அணைத்திட்டம், வறட்டுப் பள்ளம் நீர்த்தேக்கம், குண்டாறு நீர்த்தேக்கம், சாத்தனூர் வலதுகரைக் கால்வாய் திட்டம், சித்தாறு – பட்டணங்கால் திட்டம் என்று 69 முதல் 75 வரையிலே முதல்முறை நான் முதல்வராக இருந்த போது நிறைவேற்றப்பட்ட நீர்த்தேக்கத் திட்டங்கள் இவை :

### *1989–91 வரை இரண்டாண்டில் மேற்கொண்ட திட்டங்கள்*

பிறகு 89 முதல் 91 வரையில் நிறைவேற்றப்பட்ட பாசனத்திட்டங்கள். அதாவது மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் – முழுமையாக நிறைவேறவில்லை. காரணம் இரண்டு ஆண்டுக்காலத்திற்குள் ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. எனவே மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் –

கன்னியாகுமரி மாவட்டத்தில் பொய்கையாறு அணைக்கட்டு;

- ★ நெல்லை மாவட்டம் ராதாபுரம் அருகில் நம்பியாறு அணைக்கட்டு;
- ★ தென்காசி அருகில் அடவிநயினார் கோயில் அணை;
- ★ ஒட்டன்சத்திரம் தொகுதியில் நங்காஞ்சியார் அணை;
- ★ அருப்புக்கோட்டை தொகுதியில் கிருதமால் அணை;
- ★ காட்பாடி அருகில் இராஜாதோப்புக்கானாா் அணை;
- ★ வேலூர் மாவட்டம், குடியாத்தம் அருகே மோர்தானா அணை;
- ★ நான்குநேரி அருகில் கொடுமுடி ஆறு நீர்த்தேக்கத் திட்டம்;
- ★ பெரியகுளம் அருகில் சோத்துப்பாறை நீர்த்தேக்கத் திட்டம்.
- ★ குமரி மாவட்டத்தில் பொய்கையாறு நீர்த்தேக்கத் திட்டம்.
- ★ நெல்லை மாவட்டத்திலே நாங்குநேரி அருகே வடக்கு பச்சையாறு நீர்த்தேக்கத் திட்டம்.

இப்போது நான்காவது முறையாக முதலமைச்சராக வந்த பிறகு – இந்தக் காலக் கட்டத்தில் அனுமதிக்கப் பட்டுள்ள புதிய பாசனத் திட்டங்கள்:

- ★ 18.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வாணியம்பாடி வட்டத்தில் ஆண்டியப்பனூர் ஓடையின் குறுக்கே நீர்த்தேக்கம்.
- ★ 8.78 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நெல்லை மாவட்டம் வரட்டாறு குப்பத்து ஓடை குறுக்கே நீர்த்தேக்கம்.

★ 21.33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் போளூர் வட்டம் கமண்டலார் குறுக்கே செண்பகத் தோப்பு கிராமம் அருகே நீர்த்தேக்கம்.

★ 33.81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்கு பாசன வசதி அமைக்கும் திட்டம்.

★ 29.55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடியாத்தம் வட்டத்தில் பத்தலப்பள்ளி அருகே மலட்டாறு நீர்த்தேக்கம்.

★ 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செங்கம் வட்டத்தில் செய்யாறு குறுக்கே நீர்த்தேக்கம்.

★ 19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரூர் வட்டத்தில் வரட்டாறு குறுக்கே நீர்த்தேக்கம்.

★ 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாத்தான்குளம் வட்டத்தில் சடையனேரி வாய்க்கால் சீரமைப்பு.

★ 5.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இராமநாதபுரம் மாவட்டம் நாராயண காவிரி வாய்க்கால் சீரமைப்பு.

★ 4.18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இலால்குடி வட்டத்தில் உப்பார் ஓடையில் ஏரி.

★ 9.73 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னம்பட்டி கிராமத்தில் முதலைமுத்து வாரியில் ஏரி.

★ 18.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அம்பாசமுத்திரம் வட்டத்தில் அமைந்துள்ள கடானா நதி நீர்த்தேக்கத்தை மேம்பாடு.

★ 3.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திண்டுக்கல் மாவட்டத்தில் நாயோடையில் புதிய குளம்.

★ 3.55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ராமக்கால் ஓடை மற்றும் ஆனைவிழுந்தான் ஓடையில் நீர்த்தேக்கம்.

★ 31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாராபுரம் வட்டம் நல்லதங்காள் ஓடையில் நீர்த்தேக்கம்.

★ 1.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் லால்குடி வட்டத்தில் ஆண்டி ஓடையில் அணை.

★ எட்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் இராஜபாளையம் வட்டம் நகரியாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம்.

இவ்வளவும் இந்த ஆட்சியில் தமிழகத்திற்குக் கிடைத்த நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுகள்.

விவசாயிகளின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு ஆட்சிச் சக்கரம் சுழன்று கொண்டிருக்கின்றது என்பதற்கு இதை விட வேறு சான்று தேவையில்லை என்றே கருதுகிறேன்.

— தேனி மாவட்டம், கோம்பையில் 25.5.99 அன்று நடைபெற்ற 18ஆம் கால்வாய்த் திட்ட தொடக்க விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** ஆற்றிய உரையிலிருந்து...

✦ ✦ ✦

# வாழ்க ! வாழ்க !

அறுபத்தி ஆறோடு பத்து சேர
அன்புடனே எழுபத்தாறைக் கண்டு விட்டீர்!
வேறுபட்ட கருத்துடையோர் இன்று உம்மை
வண்டமிழே என்றழைத்து வாழ்த்து கின்றார்!
நறுமணமே விரும்புகின்ற சிலரைப் போல,
நல்லபல திட்டங்களைச் செயல்ப டுத்தி,
சுறுசுறுப்பு குறையாமல் ஆட்சி செய்யும்
செந்தமிழ்நல் முதலமைச்ச! வாழ்க! வாழ்க!

பெண்களுக்குச் சொத்துரிமை உண்டு என்று
பெருமையுடன் சட்டமியற்றி வாழ்வு தந்தீர்!
ஆண்களைப்போல் பெண்களுமே நன்கு வாழ
அரசாங்கப் பதவிகளில் முப்பது பங்கு
ஈண்டிந்த தமிழ்நாட்டில் உண்டு என்ற
ஈடில்லாச் சட்டமதைக் கொண்டு வந்தீர்!
வேண்டிநிற்கும் மக்களுக்கு உதவு கின்ற
வண்டமிழ்நல் குணக்குன்றே! வாழ்க! வாழ்க!

வீதியிலே வாழுகின்ற ஏழை கட்கு
வீடுகட்டித் தந்தவரே! வாழ்க! வாழ்க!
நாதியற்ற மக்களெல்லாம் நன்கு வாழ
நல்லெண்ணம் கொண்டவரே! வாழ்க! வாழ்க!
ஊதியத்தை அலுவலர்க்கு உயர்த்தி விட்டு
உவகைமிகப் பெற்றவரே! வாழ்க! வாழ்க!
நீதியுடன் ஆட்சிதனை நடத்து கின்ற
நேர்மைமிகு முதலமைச்ச! வாழ்க! வாழ்க!

பெண்களுக்கு வணிகக்கடன் தந்து நீங்கள்
பாவையர்கள் உயர்ந்திடவே வழிவ குத்தீர்!
கண்ணான விவசாயத்தில் உயர்வு காண
களிப்புடனே தூர்வாரும் பணியே கண்டீர்!
விண்ணவரும் போற்றிடவே விதவை களுக்கு
விருப்பமுடன் மறுமணநிதி தந்து நின்றீர்!
அண்ணா மறுமலர்ச்சி திட்டம் தந்து
அனைவருமே வாழ்த்திடவே உயர்வு பெற்றீர்!

— கோ. சுரேந்திரன்

அகவையதாம் இன்றுனக்கோ எழுபத் தாறு
அருந்தமிழர் தம்மினுக்கோ அமுத சாறு!
புகவொண்ணா இன்பமது பிடித்த தாமே!
போற்றுகிறோம் மனம்நெகிழ பரவி யாமே!
சிகரமென தமிழ்மொழியில் சிறப்பாய்க் கற்று
சீருறவே நிற்கின்றாய் செம்மை யுற்று
தகவொண்ணா பேராற்றல் தழுவி நிற்கும்
தமிழ்த்தலைவர் கருணாநிதி தரணி வாழி!

பேச்சாற்றல் எழுத்தாற்றல் படையைக் கொண்டு
பைந்தமிழர்க்(கு) ஆற்றுகிறாய் பிறழா தொண்டு
மூச்சாக அரசியலை முடிந்தாய் அன்றோ?
முழுமதியாய் இலங்குகிறாய் நாளு மன்றோ?
வீச்சுகளால் சோம்பிடாது தமிழர்க் காக
வாழ்நாளை அர்ப்பணித்தாய் விரச மேகா
பூச்சாண்டி காட்டினோரை பொசுங்கி டாயோ?
பைந்தலைவர் கருணாநிதி புகழே வாழி!

தொழுநோயால் வாடுவோர்க்கு தூய இல்லம்
தாம்கண்ட உயர்உள்ள கருணை யாளா!
அழுகின்ற முதியோரின் அவலம் சாய்த்து
ஆன்றவழி காட்டுகிறாய் அருமை யாக
முழுகாமல் இருக்கின்ற கர்ப்பி ணிக்கு
முறையாக பல்நன்மை முடுக்கி விட்டாய்
பழுதில்லா திட்டத்தால் பயன்கள் உற்றோம்
பேராளர் கருணாநிதி புகழாம் வாழி!



தமிழாய்ந்த அறிஞர்கள் தமக்கு தாமே
தகவில்லா பொற்கிழிகள் தரலா னாயே
அமிழ்தான செயலதனால் ஆன்றோர் தாமும்
அடைகின்ற களிப்பினுக்கே அளவும் உண்டோ?
குமிழெனவே அழிகின்ற செயலே செய்யா
குறள்நெறியை பேணுகின்ற காட்சி என்னே
இமயமென நின்பெருமை உயர்ந்தி டாவோ?
இணையிலாத கருணாநிதி புகழே வாழி!

# தமிழினத் தலைவர் கருணாநிதி வாழி!



குறளோவியம் அழகுறவே கொடுத்தாய் நீயே
குழந்தைகளாம் கண்மணியை தாங்கும் தாயே!
மறவாது பேரறிஞர் வழியே செல்வோய்
மாசிலாத ஆட்சியினை மலர செய்தோய்
இறவாத உன்புகழை எடுத்தே சொல்வேன்
இணையிலாத மாண்பதனை இழைய வெல்வோன்
அறவாணர் தம்மினோடு அறிஞர் போற்றும்
அருந்தலைவர் கருணாநிதி அவரே வாழி!

நலிந்தாரும் பெற்றிட்டார் நலங்கள் தாமே
நினதருமை ஆட்சியதன் திறமை யாமே
எளியவரும் மென்மேலும் ஏற்ற முற்றார்
இலவசமாம் கல்வியினால் பெருமை யுற்றார்
துளியேனும் இன்னலது தொடரா வாறு
தொண்டாற்றும் பெருமைக்கே நிகராம் யாரு?
பலியாடாய் தமிழகத்தை ஆக்கி டாது
பாதுகாக்கும் கருணாநிதி பெயரே வாழி!

பெண்ணினமும் உரிமைதனை பெறவே திட்டம்
பாங்குறவே படைத்திட்டாய் புதிய சட்டம்
தென்னையைதன் நீரெனவே தெளிந்த நோக்கம்
தினம்ஏற்றம் இழையோட திகழும் ஆக்கம்
முன்உள்ள சத்துணவில் முட்டைச் சேர்த்து
முனைப்பாக அளிக்கின்ற முயற்சி நன்று!
என்னெனை பல்திட்டம் இழையக் கண்டோம்
எழில்தலைவர் கருணாநிதி இனிது வாழி!

உழைக்கின்ற வர்க்கத்தை உயர்த்த வேண்டி
உணர்ந்திட்டே பலதிட்டம் விளைக்க கண்டோம்
பிழைத்திடவே வழியில்லா முதியோ ருக்கு
பணமீந்து உதவிதனை பெருக்க லானீர்
இழைகின்ற கொடுமையினால் தனித்தோ ருக்கு
இல்லமதை கட்டித்தந்து தாயு மானாய்!
தழைக்கிறது உம்மாலே தமிழர் வாழ்வு
தனித்தலைவர் கருணாநிதி திறமே வாழி!

சொக்கவைக்கும் பேச்சாற்றல் சொந்த மாக்கி
செந்தமிழர் உள்ளமெலாம் உலவு கின்றாய்
துக்கமெலாம் பறந்தோடி தெளிவி னோடு
தமிழ்த்தும்பி யாகியாமே திரிய லானோம்
தக்கதொரு வாய்ப்பதனைத் தந்து விட்ட
தமிழர்தம் வாழ்வினுக்கு பெருமை சேர்த்து
சிக்கலிலா அரசியலை சிதையா காக்கும்
செந்தமிழர் கருணாநிதி செகமே வாழி!



பட்டங்கள் பெற்றோரும் சிறப்புப் பட்டம்
பெறவேண்டி உன்படைப்பை ஆயு கின்றார்
பட்டங்கள் பின்னாலே பெறுகின்ற றாரே
பாராளும் என்தலைவர் பெருமை என்னே?
திட்டங்கள் செயலாக்கும் திறமை மிக்க
தேர்ந்ததொரு ஞானமுள்ள தலைவ ராவார்
எட்டாத மதியன்ன விளங்கு கின்ற
எம்தலைவர் கருணாநிதி புகழே வாழி!

சோர்வின்றி தமிழகத்தை சுற்றி வந்து
சிம்மாசனம் நீயமர்ந்தாய் சிறுமை யின்றி
ஆர்வமாக நகரமெலாம் அணியே வந்து
அற்புதமாக சொற்பொழிவு ஆற்று கின்றாய்
வேர்நீயாம் எம்தமிழர் வாழ்வி னுக்கு
வித்தும்நீ, விளைவும்நீ, வேறு யார்தாம்?
யார்உன்போல் செயலாற்ற இங்குள் ளாரோ?
எம்தலைவர் கருணாநிதி இனிது வாழி!



**கவிக்கோலம்
கிருட்டிணமூர்த்தி**

# கோயம்பேடு பேருந்துநிலைய வளாகம்

இந்தியாவிலுள்ள நான்கு பெருநகரங்களில் ஒன்றான சென்னை, பலவித மாற்றங்களுக்கும், வளர்ச்சிகளுக்கும் உட்பட்டதாக உள்ளது. சென்னை மாநகரின் மக்கள் தொகையானது 2001–ஆம் ஆண்டில் 50 இலட்சமாகவும், 2011–ஆம் ஆண்டில் 60 இலட்சமாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சென்னை நகரைச் சுற்றியுள்ள பெருநகரின் இதர பகுதிகளில் வளர்ச்சி மிக விரைவாக உள்ளது. இந்த இதர பகுதிகளில் மக்கட்தொகை 2001–ஆம் ஆண்டில் 25 இலட்சமாகவும், 2011–ஆம் ஆண்டில் 35 இலட்சமாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகரில் பொதுவாக பிரச்சினைகள் மிகுந்து காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று சென்னை மாநகரின் மையப் பகுதிகளிலும், மைய வணிகப் பகுதிகளுக்கு (ஜார்ஜ் டவுன்) செல்லும் முக்கிய சாலைகளான அண்ணா சாலை, பெரியார் சாலை மற்றும் எருக்கஞ்சேரி நெடுஞ்சாலையிலும் ஏற்படும் நெரிசலாகும். இத்தகைய பிரச்சினைகளைக் களையும் பொருட்டு, மக்களுக்கு சிறந்ததொரு வாழ்க்கைத் தரத்தை அளிக்கும் பொருட்டும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பல திட்டங்களைத் தீட்டி அவற்றை செயல்படுத்தி வருகிறது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், ஜார்ஜ் டவுன் பகுதியிலுள்ள காய்கறி, கனி, மலர் (அழுகும் பொருட்கள்), உணவு தானிய வகைகள் மற்றும் அதனை சார்ந்த வியாபாரங்கள், துணி வகைகள், இரும்பு மற்றும் எஃகு பொருட்கள் ஆகியவற்றின் மொத்த விற்பனை வியாபாரங்களை நகரின் எல்லைப் பகுதிக்கு இடமாற்றம் செய்ய திட்டமிட்டு, இவற்றில் ஏற்கெனவே அழுகும் பொருட்களின் மொத்த வியாபாரங்கள் கோயம்பேடு வணிக வளாகத்திற்கு இடமாற்றம் செய்துள்ளது. மேலும், சாத்தாங்காடு இரும்பு மற்றும் எஃகு பொருட்களின் அங்காடியின் அபிவிருத்தியும் முடிக்கப்பட்டு விட்டது.

தற்போது உள்ள பேருந்து நிலையங்களை, நகரின் எல்லைப் பகுதியிலுள்ள கோயம்பேடுக்கு இடமாற்றம் செய்யப்படுவதால், மாநகரின் பழைய பகுதிகளில் மற்றும் முக்கிய சாலைகளில் காணப்படும் நெரிசலைத் தவிர்க்கலாம்.

பிராட்வே, எஸ்பிளேனேடு மற்றும் பேசின்பாலம் ஆகிய இடங்களில் இயங்கி வரும் பேருந்து நிலையங்கள் அனைத்தும், சென்னை மாநகரின் மைய வணிகப் பகுதிகளிலேயே இருக்கிறது. நகரத்துக்குள் நுழையும் பேருந்துகள் தற்போது உள்ள பேருந்து நிலையங்களை அடைய, நெரிசல் மிகுந்த சாலைகளில் ஊர்ந்து செல்ல நேரிடுகிறது. தற்போது உள்ள பேருந்து நிலையங்கள் அதன் திறனை விட அதிக பேருந்துகளைக் கையாண்டுவருவதால், இந்நிலையங்கள் நெரிசல் மிகுந்து காணப்படுகின்றன. இவைகள் செயல்பாட்டிலும் மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாகவும் தரம் குறைந்த நிலையில் காணப்படுகின்றன.

1996–ஆம் ஆண்டு நடத்தப்பட்டப் போக்குவரத்து ஆய்வின்படி, இந்த நிலையங்களிலிருந்து, 1933 புறநகர் பேருந்துச் சேவைகள் இயக்கப் பட்டதாகத் தெரிகிறது. தினமும் 1,000 பேருந்துகள் இந்நிலையங்களுக்கு வந்து செல்கின்றன. அவற்றில் 65 விழுக்காடு பேருந்துகள் அண்ணா சாலை வழியாகவும், 15 விழுக்காடு பேருந்துகள் எருக்கஞ்சேரி நெடுஞ் சாலை வழியாகவும், 7 விழுக்காடு பேருந்துகள் ஈ.வெ.ரா பெரியார் சாலை வழியாகவும், 5 விழுக்காடு பேருந்துகள் திருவொற்றியூர் நெடுஞ்சாலை வழியாகவும், மீதம் இதரசாலைகள் வழியாகவும், மீதம் இதரச் சாலைகள் உள்ள பேருந்து நிலையங்களைப் புறநகர் பகுதிக்கு மாற்றுவதன் மூலம், இந்த சாலைகளில் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடியை பெருமளவு குறைக்க இயலும். மேலும், இந்த ஆய்வின்படி பேருந்து நிலையத்தை அடைய 64 விழுக்காடு பயணிகள் மாநகர போக்குவரத்துப் பேருந்தைச் சார்ந்தும், 8 விழுக்காடு மக்கள் புறநகர் இரயில் வண்டியைச் சார்ந்தும் உள்ளனர். கோயம்பேட்டில் உள்ள உள்வட்ட சாலையை ஒட்டியுள்ள இடம், புறநகர் பேருந்து வளாகம் அமைக்க ஏற்ற இடம் என இந்த ஆய்வில் கண்டறியப்பட்டது.

கோயம்பேட்டில் மேம்படுத்தப் பட்டுள்ள சென்னைப் பெருநகர் பேருந்து வளாகம், சென்னை மாநகரின் புறநகர் மற்றும் உள்வட்ட சாலையை ஒட்டி அமைந்துள்ளது. இது சென்னை மாநகரில் அனைத்துப் பகுதிகளி லிருந்தும் மற்றும் சென்னைப் பெருநகர் பகுதியின் இதர இடங்களிலிருந்தும் இலகுவாக அடையும் வகையில் அமைந்துள்ளது. இந்த வளாகம் மொத்தம் 25 ஏக்கர் பரப்பில், நெசப்பாக்கம் சாலையிலிருந்து பேருந்து வளாகத்தை அடையும் வகையில் 6 ஏக்கர் பரப்பிலான இணைப்பு சாலையுடன் மேம்படுத்தப்பட உள்ளது. இந்த திட்டத்திற்கான செலவு 84 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் 21.4.99 அன்று கொடுக்கப்பட்டது. இப்பணி இரண்டு ஆண்டு காலத்தில் நிறைவடையும்.

இந்த வளாகம், பலதரப்பட்ட வாகனங்கள், பாதசாரிகள் மற்றும் பயணிகள் ஆகியவற்றிற்கிடையே ஏற்படும் இடர்பாடுகளைக் குறைத்து, சிறந்த சுற்றுச்சூழலை உருவாக்கும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் எளிதான இயக்கங்களுக்கும், செயல்பாடுகளுக்கும், பராமரிப்புக்கும் வழி செய்கிறது. தற்போது பேருந்து நிறுத்தங்களின் தேவை 120 ஆக இருந்தாலும் வெளியூர் பேருந்துகளுக்காக 240 பேருந்து நிறுத்தங்களையும், சென்னை மாநகர பேருந்துகளுக்காக 30 பேருந்து நிறுத்தங்களையும் உட்கொண்டதாக உள்ளது.

இவ்வளாகத்தில் செயல்முறை வசதிகளுக்காக கணிப்பொறி மயமாக்கப்பட்ட பயணச்சீட்டு வழங்குமிடம், பணியாளர் ஓய்வு அறைகள், நேர கண்காணிப்பாளர் அறைகள் போக்குவரத்து மேலாளர் அறைகள், எரிபொருள் நிரப்பும்நிலையம், பராமரிப்பு பணிகளுக்கான இடம் மற்றும் கிடங்குகள் முதலியன அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது மற்றும் பயணிகளுக்கான இருக்கை வசதிகள் (1536), புறப்பாடு/வருகைக்கான அறைகள், பேருந்து நிறுத்தங்களைப் பற்றிய அறிவிப்புப் பலகைகள் (180), பொது தகவல் அமைப்புக்காக தொலைக்காட்சிப் பெட்டிகள் (60), குடிதண்ணீர் குழாய்கள் (47), வரிசைகள்), பொது தொலைபேசி சாவடி (60), சிறுகடைகள் (24), கழிவறைகள் (47), சிறுநீர் கழிப்பறைகள் (32), சிற்றுண்டி சாலைகள், பொருள் வைப்பறைகள் மற்றும் தகவல் மையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இங்கு வாகனங்கள், மிதிவண்டிகள், இரு சக்கர வண்டிகள், ஆட்டோரிக்சா மற்றும் வாடகை கார்களை நிறுத்துவதற்கும் அதிக இடம் தனித்தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது. சுமார் இரண்டு ஏக்கர் நிலம் எதிர்காலத்தில் வணிகக் கட்டிடங்கள் கட்ட ஒதுக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடங்கள் செயல்பாட்டுக்கு ஏதுவாக மட்டும் இல்லாமல் பார்வைக்கு அழகாகவும், இனிமையான சுற்றுச்சூழல் கொண்டதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அதிகமாக போக்குவரத்துக்கு பயன்படுத்துவது பேருந்து சேவையே ஆகும். இத்திட்டம் பொதுமக்களுக்கு மிகச் சிறந்த போக்குவரத்து வசதியையும், மனநிறைவையும் அளிக்கும். இந்த போக்குவரத்துத் திட்டம் சென்னை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது மட்டும் அல்லாமல், மாநகரின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் உதவும்.

கோயம்பேடு – புதிய பேருந்து நிலைய வளாகத்திற்கு முதல்வர் கலைஞர் அவர்கள் 6.6.99 அன்று அடிக்கல் நாட்டினார். அப்போது அவர் ஆற்றிய உரையிலிருந்து...

கோயம்பேடு பேருந்து நிலையம் ஏறத்தாழ 25 ஏக்கர் பரப்பில் அமைக்கப்படவிருக்கின்றது. இதனுடைய கட்டுமானப் பரப்பளவு 40,700 சதுர மீட்டர். வளாகம் உள்ளிட்ட மொத்த திட்ட மதிப்பீடு 84 கோடி ரூபாய் ஆகும். ஆனால் இங்கே போக்குவரத்துத் துறை அமைச்சர் எடுத்துக்காட்டியதைப் போல இந்தத் திட்ட மதிப்பீட்டில் இந்த வளாகத்திற்கு மாத்திரம் – இந்தப் பேருந்து நிலையத்திற்கு மாத்திரம் 40 கோடியே 50 இலட்சம் ரூபாய். வேலையினுடைய மதிப்பாக கொள்ளப்பட்டு Value of the work அதிலே value of the Lowest Tender என்ற வகையிலே ஒப்பந்தப்புள்ளி குறைக்கப்பட்டு கடந்த காலங்களிலே ஒப்பந்தப்புள்ளி



ஏற்றப்பட்டு என்றிருக்கும் ஒப்பந்தப் புள்ளி திறந்த ஒப்பந்தப்புள்ளி குறைக்கப் பட்டு 40. 50 கோடி Value of the Work என்பதற்கு டெண்டர் 38.28 கோடி என்றளவில் 2.22 கோடி ரூபாய் குறைக்கப்பட்டு அகமதாபாத்தைச் சேர்ந்த ஜே.எம்.சி. பிராஜெக்ட் ஆப் இந்தியா என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்தம் தரப்பட்டிருக்கிறது. அவர்கள் 5.5.2001–ல் முடித்துத் தருவார்கள் என்றும் குறிப்பிடப்பட்டது. ஏறத்தாழ 2 ஆண்டுக்காலத்திலே முடிக்கப்படும் என்பதுதான் அதனுடைய குறிப்பு.

இந்த நிலையம் ஏறத்தாழ 38 கோடி ரூபாய் செலவிலே இந்த நிலையத்திற்கான பணிகள் மாத்திரம் நடைபெற இருக்கும் நேரத்தில், அது நேர்மையாக நடைபெற வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய தீவிரக் கொள்கை. 96–ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபொழுதும் நிதிநிலை அறிக்கை படித்த நேரத்திலும், அதைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதங்களுக்குப் பதிலளித்த நேரத்திலும் திறந்த ஒளிவு மறைவு இல்லாத ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, வெளியிடப்பட்டு அதன்படி தான் அரசினுடைய பணிகள் நிறைவேற்றப்படும் என்று குறிப் பிட்டேன். இந்த பேருந்து நிலையத்திற்கு ஒவ்வொரு நாளும் 2000 பேருந்துகள் வந்து போகக் கூடிய வசதிகள் – வருகின்ற பேருந்துகள் செல்கின்ற பேருந்துகளின் மொத்தக் கணக்கு 2000 பேருந்துகள். அண்மையிலே மதுரை மாநகரத்திலே உள்ளாட்சித் துறையின் சார்பாக அங்கே கட்டி முடிக்கப்பட்ட பெரிய பேருந்து நிலையத்தை நான் திறந்து வைத்தேன். அந்தப் பேருந்து நிலையத்திலே ஒரு நாளைக்கு 600 பேருந்துகள் வருவதும் – போவதும் அதற்கான வாய்ப்புகளும் வசதிகளும் அங்கே உருவாக்கப் பட்டிருந்தன. அது தமிழகத்திலே இதுவரையிலே இல்லாத பெரிய பேருந்து நிலையம் என்று மார் தட்டிக் கொண்டது. அடுத்த ஆண்டு சென்னை மார்தட்டிக் கொள்ளும் மதுரையைவிடப் பெரிய பேருந்து நிலையம் இங்கே அமைந்திருக்கின்றது என்று. இந்தப் பேருந்து நிலையத்திலே 2000 பேருந்துகள் வரப்போக இருக்கின்ற அந்த சூழ்நிலையில் ஒவ்வொரு நாளும் ஒரு இலட்சம் பயணிகள் இங்கே வந்து செல்வார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

## முதலில் ஊழலை ஒழித்து அடுத்து மத நல்லிணக்கம் ஏற்படுத்துவோம்

அந்த ஒரு இலட்சம் பயணிகளிலே எல்லா மதத்தவர்களும் இருப்பார்கள். எல்லா வகுப்பைச் சேர்ந்தவர்களும் இருப்பார்கள். எல்லா சாதி – எல்லா சமூகத்தை சேர்ந்தவர்களும் இருப்பார்கள். அந்த ஒரு இலட்சம் பேர்கள் இங்கே கூடிக் குலாவுகின்ற காரணத்தால் அவர்களிடத்திலே மத ஒற்றுமை, மத நல்லிணக்கம் இவைகள் எல்லாம் ஏற்படும். முதலில் ஊழல் ஒழிந்த ஒரு முயற்சியிலே நாம் ஈடுபட்டு இந்த கட்டடத்தை கட்டி முடித்து, முதல் கட்டமாக ஊழலை ஒழித்து, ஊழலை தலைகாட்டாமல் இந்த கட்டடத்தைக் கட்டி முடித்து அதற்குப் பிறகு வருகின்ற ஒரு இலட்சம் பயணிகளும் மத நல்லிணக்கத்தோடு இங்கே செயல்படுவார்கள் என்ற நம்பிக்கையில் இதில் எது முதல் இரண்டாவது எது என்ற வரிசையில் நான் இங்கே எடுத்துக்காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகின்றேன்.

ஊழல் இல்லாத முறையில் திறந்த நிலையில், ஒளிவு மறைவு இல்லாத ஒப்பந்தத்தில், இந்தக் கட்டடம் கட்டுகிற நேரத்திலே ஒரு கல் வைப்பதிலே இருந்து கடைசியாக வைக்கின்ற கல் வரையிலே ஒரு துளியும் தவறு நடைபெறாவண்ணம் இந்தப் பணி நடைபெறுவதற்கு அமைச்சர் அவர்களும் மற்றும் இந்தத் துறையினுடைய செயலாளர்களும் கண்காணிப்போடு பணியாற்றுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிரம்ப இருக்கின்றது.

மக்கள் தொகை ஆண்டுக்கு ஆண்டு பெருகி வருகின்ற நிலையையும், வாகனங்கள் பெருகி வருகின்ற சூழலையும் எடுத்துச் சொல்லி எனவேதான் இப்படிப்பட்ட ஒரு பெரிய வளாகத்தை நாம் அமைக்கவேண்டியிருக்கின்றது.

நெருக்கடியைக் குறைப்பதற்காகத்தான் ஏற்கெனவே கடந்த இரண்டு, மூன்று திங்களுக்கு முன்பு 250 கிலோமீட்டர் நீளமுள்ள 8 பிராதான சாலைகளை – ஆரச்சாலைகளை மாநகர் நோக்கி வருகின்ற ஆரச்சாலைகளை அதனுடைய மேம்பாட்டுப் பணியை 212 கோடி ரூபாய் செலவில் 2 ஆண்டுகளிலே நடத்தி முடிக்கவும் இந்த அரசு திட்டமிட்டிருக்கின்றது.

அதைப்போலவே பல்வேறு போக்குவரத்துத் திட்டங்களை மேம்படுத்த 366 கோடி ரூபாய் செலவிலான போக்குவரத்து வசதிகள் மேம்பாட்டு செயல்முறை திட்டங்கள் மூன்று ஆண்டுகளுக்குள் செயல்படுத்த வேண்டும் என்று அரசு நிர்வாக ஒப்புதலையும் அளித்திருக்கின்றது. இந்த நிர்வாக ஒப்புதல் அளித்ததன் ஒரு பகுதியாகத்தான் இங்கே தம்பி ஸ்டாலின் சென்னை மாநகர மேயர் குறிப்பிட்டதைப் போல பத்து இடங்களிலே சிறிய மேம்பாலங்களை 115 கோடி ரூபாய் செலவிலே சென்னை மாநகரத்திலே அமைத்து வருகின்றோம்.

இங்கே அறிவிப்புப் பலகைகள் இருக்கின்றன. தொலைபேசிகள் பயணிகளுக்காக இருக்கின்றன. 182 குப்பைத்தொட்டிகள் பயணிகளுக்காக இருக்கின்றன. சிறுநீர் கழிவறைகள் இருக்கின்றன என்று பட்டியல் போட்டு காட்டினார்கள். இவைகள் இருந்தும் பயன் அல்ல. இவைகளைப் பயன்படுத்துகின்ற அளவிற்குப் பயணிகள் தங்களைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும். அறிவிப்பு

பலகைகளைப் பார்த்து வருகின்ற பயணிகள் குறும்புக்கார இளைஞர்கள், வாலிபர்கள் அல்லது குறும்புமனம் படைத்த வயதானவர்கள்கூட அந்த அறிவிப்பு பலகைகளிலே ஏதாவது எழுதி வைக்கவேண்டும் என்று தேர்தல் சின்னங்கள் எழுதுவதோ அல்லது வேறு ஏதாவது கிறுக்குவதோ கூடாது. இதெல்லாம் நமக்குக் கைவந்த கலை.

### அறிவிப்புப் பலகைகளில் எழுதவோ, கிறுக்கவோ கூடாது

நாம் பல நினைவுச் சின்னங்களை பார்க்கச் செல்கிறோம். மாமல்லபுரத்திற்கு சென்றாலும், பூம்புகாருக்குச் சென்றாலும் – வள்ளுவர் கோட்டத்திற்கு சென்றாலும், அல்லது வேறு எந்த நினைவுச் சின்னங்களை காணச் சென்றாலும் அங்கெல்லாம் செல்கின்றவர்கள் தாங்கள் வந்ததை உலகத்திற்கு அறிவிக்க தங்களுடைய பெயரை முகவரியோடு எழுதிவைத்துப் போகின்ற காட்சிகளை எல்லாம் நாம் பார்த்திருக்கின்றோம். அறிவிப்புப் பலகைகள் – எந்தப் பேருந்து எந்த நேரத்திலே புறப்படும் என்பதற்காகத்தான் அறிவிப்பு பலகையை தவிர உன்னுடைய முகவரியை எழுத அல்ல என்பதை வருகின்ற பயணிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

அதைப்போலவே தொலைப்பேசிகள் – சிலபேருக்கு விரல் சும்மா இருக்காது. தொலைபேசியைப் பார்த்தாலே சுற்றத் தோன்றும். அப்படி தொலைபேசியைக் கண்டாலே சுற்றுகின்ற பேர்வழிகள் பலபேர் இருக்கின்றார்கள். அப்படிச் சுற்றிச் சுற்றி தொலைபேசியை பயன்படுத்தினாலும் கூட, அதை வைத்துவிட்டுப் போகின்ற நேரத்திலே மற்றவர்களுக்கு பயன்படாமலோ அல்லது வருகின்ற தொலைபேசிக்கு பதில் சொல்ல முடியாமலோ அவை பொருத்த வேண்டிய இடத்திலே பொருத்தாமல் போய்விட்டால் தொலைபேசி இருந்தும் பயனில்லை. அதையும் பயணிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

அதைப்போல குப்பைத் தொட்டிகள் – குப்பைத் தொட்டிகள் வைத்தால்கூட அது இருந்தால் இருந்து விட்டு போகட்டும். அவ்வளவு தூரம்போய் யார் குப்பையைப் போடுவது என்று கிழித்த தாளையோ, அல்லது மிட்டாய் சாப்பிட்டு விட்டு அதில் இருந்து உரித்த தோலையோ, குப்பைத் தொட்டிகளில் போய் யார் போடுவார்கள் என்பது வேலையற்ற வேலை என்று எண்ணி அதை அங்கேயே கீழே போட்டு விடுகின்ற காரணத்தால் எவ்வளவு குப்பைகள் சேருமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

### குப்பைத்தொட்டியில் குப்பையை போடும் பழக்கம் வரவேண்டும்

நான் இன்றைக்கும் சொல்கின்றேன். நான் விக்ஸ் என்ற மாத்திரை சாப்பிடுவது வழக்கம். தாளிலே சுற்றப்பட்டது. அதை நான் காரிலே செல்லும்பொழுது பிரித்து வாயிலே போட்டுக் கொண்டால் கூட அதிலிருந்து பிரித்த தாளை காரிலே வைத்து விடுவேன் அல்லது காரிலே அந்த விக்ஸ்க்காக இருக்கின்ற பெட்டியிலே வைத்துவிடுவேன். இல்லாவிட்டால் என்னுடைய சட்டைப் பாக்கெட்டிலே போட்டு விடுவேன். பிறகு வீட்டுக்கு வந்து அதை எடுத்து குப்பைத் தொட்டியில் போடுவேன். இந்த சாதாரண பழக்கத்தை நாம் கற்றுக்கொண்டால் இன்றைக்கு சென்னை மாநகரத்திலே காணுகின்ற இவ்வளவு குப்பைகளைக் காணமுடியாது.

வெளிநாடுகளுக்குச் சென்றால் – நான் அண்மையில் கூட சிங்கப்பூர் – மலேசியா சென்றிருந்தேன். அதற்கு முன்பு நான் அமெரிக்கா நாடு சென்றிருக்கிறேன். ஐரோப்பாக் கண்டத்தைச் சுற்றிப் பார்த்து இருக்கின்றேன். அங்கெல்லாம் தேடிப் பார்த்தால்கூட அந்த அழகான சாலைகளில் ஒரு சிறிய துண்டுத்தாளை, சின்னக் குப்பையைக் காணமுடியாது. ஆனால் நாம் குப்பைகளைப் போடுவதற்காகத்தான் தெருக்கள் – சாலைகள் அமைத்து இருக்கிறார்கள். நடைபாதைகள் இருப்பதே குப்பைகளை போடுவதற்காகத்தான் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றோம்.

எனவே அந்தத் தவற்றைக் குறைந்த பட்சம் இங்கே நாம் கட்டி முடிக்க இருக்கின்ற பேருந்து நிலையத்திலாவது செய்யாமல் இருக்க வேண்டும் என்று பயணிகளை எல்லாம் பணிவன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே சிறுநீர் கழி வறைகள், சிறுநீர் கழிவறைகளைப் பயன்படுத்தாமல் சிறுநீர் கழிவறை என்று எழுதப்பட்டிருக்கின்ற இடத்திலே வெளியிலே உட்கார்ந்து இங்கேதான் சிறுநீர் கழிக்க வேண்டும் போலும் என்று எண்ணிக் கொண்டிருக்கின்ற சிற்றறிவு படைத்தவர்கள் இன்றைக்கும் நாட்டிலே இருக்கின்றார்கள். அவர்கள் எல்லாம் தங்களை திருத்திக் கொள்ள வேண்டும். இப்படி மக்களுடைய ஒத்துழைப்பு இருக்க வேண்டும்.

### மாநகரக் குழுமத்தின் வளர்ச்சிக்கு வர்த்தகர்கள் ஒத்துழைக்கவேண்டும்

இங்குள்ள வியாபாரிகளுடைய கோரிக்கையை எடுத்துச் சொல்லி அவர்கள் தாங்கள் செலுத்த வேண்டிய தொகையை இன்னும் செலுத்தவில்லை என்ற ஆதங்கத்தை அமைச்சர் பொன்முடி வெளிப்படுத்தினார். நான் கோயம்பேடு திறப்பு விழாவிற்கு வந்த போது சொன்னேன். இங்குள்ள வணிகர்களுக்கு வீட்டுவசதி தேவை என்று சொன்ன பொழுது அவைகள் நிறைவேற்றித் தரப்படும் என்று சொன்னேன். அவர்களும் இந்த கோயம்பேடு மேலும் வளருவதற்கு, அவர்களுக்கான வீட்டுவசதிகளைப் பெறுவதற்கு தங்களான ஒத்துழைப்பை அரசுக்குத் தரவேண்டும். மாநகர குழுமத்தின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். ●

இந்த அறிவியல் மையம் இன்றைக்கு அண்ணா அவர்களுடைய பெயர் தாங்கி திறந்து வைக்கப் பட்டிருக்கின்றது. இந்தக் கோளரங்கத்தை அமைப்பதற்குத் தமிழக அரசின் அறிவியல் தொழில்நுட்ப மையங்களுக்குத் துணை நின்று உதவியுள்ள ஜப்பானிய நாட்டிற்கு நான் என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொருந்தியுள்ள அம்புகள். மற்றொன்று ஒரு வாள். நான் "என்ன இந்தக் காலத்திலே வாளும், வில்லும், அம்பும் தருகிறீர்களே" என்று கேட்டபோது, அவர் சொன்னார். "அதுதான் பழைய காலத்திலே எங்களுடைய கலாச்சாரத்தை எடுத்துக்காட்டுகின்ற பொருள்கள் அதனுடைய அடையாளங்கள்" என்று குறிப்பிட்டார்.

நான் அப்பொழுதும் எண்ணிக்கொண்டேன். இப்பொழுதும் சொல்லிக் குறிப்பிட்டு அவரும் அதை மிகுந்த மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார்.

உலகம் பல்துறையிலும் வளர்ந்து வருகின்றது. அதிலும் விஞ்ஞானத் துறையிலே மிக வேகமாக உலகம் வளர்ந்து வருகிறது. இந்த அறிவியல் மையத்தினுடைய பெயர் அண்ணா அறிவியல் மையம். அந்த அண்ணா அவர்கள் இளைஞர்கள் அறிவுபெற்று, பகுத்தறிவு பெற்று, உலக அறிவு பெற்றுத் திகழ வேண்டும் என்று விரும்பியவர்கள். அண்ணா அவர்களுடைய

# அண்ணா அறிவியல் மைய கோளரங்கம்

இங்கே உரையாற்றிய ஜப்பானியத் தூதரக அமைச்சர் யாசுமாசா நாகமினே அவர்கள் நேற்றைய தினம் சென்னையிலே, தலைமைச் செயலகத்திலே என்னைச் சந்தித்து நீண்ட நேரம் உரையாடினார். அப்பொழுது அன்புப் பரிசாக இரண்டொரு பொருள்களை என்னிடத்திலே தந்தார். ஒன்று வில் அதோடு

கொள்கிறேன். வாளும், வேலும், வில்லும், அம்பும் பழைய கலாச்சாரத்தினுடைய அடையாளங்களாக இருக்க வேண்டுமேயல்லாமல், இந்தக் காலத்திலே பயன்படுத்தகூடியவைகளாக இருக்கக்கூடாது என்பதை நான் உணர்ந்து சொன்னது மாத்திரமல்ல; அவரிடத்திலே

எழுத்திலும், பேச்சிலும், 'அமர்ந்து உரையாடுகிற நேரத்திலும், வீஞ்ஞானப் புதுமைகளை நம்முடைய வாலிபர்கள், இளைஞர்கள், மாணவர்கள் கற்றுக்கொண்டு புதியதோர் உலகத்தை உருவாக்கிட வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுவார்கள்.

சென்னையிலே, பெரியார் அறிவியல் மையத்தை



90-ஆம் ஆண்டு நான்தான் திறந்துவைத்தேன். பெரியாருடைய பெயரால் அங்கே அமைக்கப்பட்ட பிர்லா கோளரங்கத்தில் அமைந்துள்ள அறிவியல் மையத்தை 90-ஆம் ஆண்டு 3-வது முறையாக நான் முதலமைச்சராக பொறுப்பேற்றிருந்தபோது திறந்து வைத்திருக்கின்றேன். பெரியார் அவர்கள் "இனிவரும் உலகம்" என்ற ஒரு அருமையான நூலை எழுதியவர்கள் ஆவார்கள்.




அந்தக் காலத்திலே, பல ஆண்டுகளுக்கு முன்பே இனி வரும் உலகத்தில் எல்லாமே விஞ்ஞான ரீதியாக நடைபெறும் என்பதையும், குழந்தை பெறுவதிலே கூட, டியூபிலே குழந்தைகளை உருவாக்கி, குழந்தைகளை உலகத்திற்குத் தரக்கூடிய அற்புதமான ஆற்றல் வளரப்போகிறது என்பதை இனிவரும் உலகம் என்கின்ற ஒரு சின்னஞ்சிறு நூலில் 20 அல்லது 30 பக்கங்கள் கொண்ட அந்த நூலிலே எழுதி விஞ்ஞானப் புதுமைகளுக்கு அன்றைக்கே வாழ்த்தும், பாராட்டும் கூறியவர் தந்தை பெரியார் அவர்கள்.

எனவேதான், சென்னையிலே 90-ஆம் ஆண்டு கோளரங்க மையத்திற்குப் பெயர் வைக்கும்போது பெரியார் அவர்களுடைய பெயரைச் சூட்டி திறந்துவைத்து பேராசிரியர் அவர்களுடைய முன்னிலையில் அந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

இன்றைக்கும் பேராசிரியர் அவர்களுடைய தலைமையில் அண்ணா அறிவியல் மையத்தை திறந்து வைக்கிறோம் என்றால் சில நினைவுகள். ஒரு முறை எழுத்தாளர் மாநாட்டில் அண்ணா அவர்கள் எதிர்கால இளைஞர்களைப் பற்றி பேசுகிற நேரத்திலே குறிப்பிட்டார்கள்.

"நம்முடைய இளைஞர் ஒருவரை கூப்பிட்டு, அல்லது மாணவர் ஒருவரைக் கூப்பிட்டு, அல்லது ஒரு நகர்ப்புறத்தாரையே கூப்பிட்டு 'ஐயா வானொலியை கண்டுபிடித்தவர் யார்' என்று கேட்டால் தெரியாது என்று விழிப்பார்கள். 'இஞ்சினை கண்டுபிடித்தது யார்' என்று கேட்டால் தெரியாது என்று விழிப்பார்கள். 'இந்தியாவை கண்டுபிடித்தது யார்' என்று கேட்டால் விழிப்பார்கள். 'அமெரிக்கக் கண்டத்தைக் கண்டுபிடித்தது யார்' என்று கேட்டால் தெரியாது என்று விழிப்பார்கள். அவர்களையே பார்த்து 'எமனுக்கு வாகனம் என்ன' என்று கேட்டால் சட்டென்று 'எருமைக்கடா' என்று சொல்வார்கள் என்று அன்றைக்கே ஒரு புதுமையான உலகத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக நம்முடைய இளம்வாலிபர்கள், மாணவர்கள் எந்த அளவிற்கு பழமையிலே ஊறிக்கிடக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டி, அந்த நிலை மாற வேண்டும் என்று அழுத்தம் திருத்தமாக எடுத்துரைத்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்கள்.

அவர்கள் வழிநின்று நாங்களும் அத்தகையக் கருத்துக்களை நாட்டுக்கு, மாணவர்களுக்கு எடுத்துரைத்த காலம் ஒன்று இருந்தது. நான் எழுதிய நாடகம் ஒன்று. 'தூக்கு மேடை' நாடகம். நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்களும், நானும் சேர்ந்து தஞ்சாவூரிலே நூறு நாள் தொடர்ந்து நடத்திய நாடகம். அதிலே ஒரு காட்சி வரும். அந்தக் காட்சி பள்ளிக்கூடத்து வகுப்பறை. அந்த வகுப்பறையிலே தமிழ் ஆசிரியர் வருவார். அவர் வந்து பாடம் சொல்லிக்கொடுப்பார்.

என்ன பாடம் சொல்லிக் கொடுப்பார் என்றால் "சந்திரனை ராகு, கேது என்ற பாம்புகள் விழுங்குகின்ற காரணத்தால் கிரகணம் உருவாகிறது" என்று சொல்லுவார். அடுத்த விஞ்ஞான ஆசிரியர் வருவார். அவர் "சந்திரன், பூமி, சூரியன் ஆகிய மூன்றும் ஒரே நேர்க்கோட்டில் வருகின்ற காரணத்தால் ஒன்றின் நிழல் ஒன்றின்மீது பட்டு கிரகணம் உருவாகிறது" என்று சொல்லுவார்.

இதைக் கேட்டுக் கொண்டிருக்கின்ற மாணவர்கள் மறுநாள் தமிழாசிரியர் வருகிற நேரத்தில், ஒருவர் கேட்பார். "ஏன் சார்? நேற்றைக்கு நீங்கள் இப்படிச் சொன்னீர்கள். ஆனால், விஞ்ஞான

ஆசிரியர் இப்படிச் சொல்கிறார். ஒரே கோட்டில் வரும்போதுதான் கிரகணம் வரும் என்கிறார். நாங்கள் எதை நம்புவது'' என்பார். அதற்கு ஆசிரியர் "எதையாவது நம்பித்தொலை'' என்பார். நம்புவது இருக்கட்டும். நாளைக்கும் பரீட்சையிலே கேள்வி வந்தால் எதை எழுதுவது என்று மாணவன் கேட்பான். எதையாவது எழுது என்று கோபித்துக் கொண்டு போவார்.

இது அந்த நாடகத்திலே வருகின்ற காட்சி. இந்தக் காட்சி வேடிக்கைக்காக, நகைச்சுவைக்காக வைக்கப்பட்டதல்ல. இதன் மூலமாக ஒரு சிந்தனையை இளைய உள்ளங்களிலேயே தூண்டவேண்டுமென்பதற்காக அன்றைக்கே கிட்டத்தட்ட நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு தூக்கு மேடை நாடகத்திலே நான் இந்த ராகு, கேது, சந்திர மண்டலம், சூரிய மண்டலம் இவைகளை வைத்து எழுதிய ஒரு காட்சி. இன்றைக்கு இந்த கோளரங்கத்திலே நான் உட்கார்ந்து பார்க்கும்பொழுது, அந்த நாடகக் காட்சிதான் என் நினைவுக்கு வந்தது.

இன்றைக்கு கோளரங்கங்களிலே இதுவரையிலே பெரியார் கோளரங்கத்தில், பிர்லா கோளரங்கத்தில் ஏறத்தாழ 30 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் அதைப் பார்வையிட்டார்கள். இந்த ஏழு, எட்டு ஆண்டுக்காலத்தில் என்ற அந்தப் புள்ளி விவரத்தையும், அதைப்போல இன்றைக்கு திருச்சியிலே உருவாகியிருக்கின்ற கோளரங்கத்திலும், நாளைய தினம் கோவையிலும், அடுத்து வேலூரிலும் தொடங்கப்பட இருக்கின்ற கோளரங்கங்களிலும், ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் நம்முடைய இளைஞர்கள் - எதிர்காலத்தை உருவாக்கக்கூடிய எதிர்கால விஞ்ஞானிகள் - இவர்கள் அமர்ந்து இந்த கோளரங்கங்களை பார்க்கப் போகிறார்கள் என்கின்ற அந்த மகிழ்ச்சியும் எனக்கு ஏற்படாமல் இல்லை.

எனவே திருச்சிக்கு இன்றைக்கு கிடைத்திருக்கின்ற இந்த ஒரு அற்புதமான இந்தக் கருவியை, அற்புதமான இந்த சாதனத்தை, அற்புதமான இந்த வாய்ப்பை திருச்சி மாத்திரமல்ல. இந்த மாவட்டம் மாத்திரமல்ல, பக்கத்து மாவட்டங்களில் உள்ள மாணவ-மணிகளும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அவர்களையெல்லாம் ஆசிரியப் பெருமக்கள் அழைத்துவந்து இந்தக் கோளரங்கத்தைக் காணச்செய்ய வேண்டும். இதன் மூலமாக புதிய எழுச்சியையும், புதிய அறிவையும் பெற்றிட வேண்டும்.

- முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் திருச்சியில் 10.6.99 அன்று அண்ணா அறிவியல் மைய கோளரங்கத்தினை திறந்து வைத்து ஆற்றிய உரையிலிருந்து...

★ ★ ★



கன்னியாகுமரியில் அமைக்கப்பட்டு வரும் திருவள்ளுவர் சிலை அமைப்புப் பணிகளை மாண்புமிகு அமைச்சர்கள் திரு.க.பொன்முடி, திரு.வ.முல்லைவேந்தன், திரு.என்.சுரேஷ்ராசன் ஆகியோர் 12.6.99 அன்று பார்வையிட்டனர்.

# தேயாத கதிரவனே!

## பெருங்கவிஞர் நெ.அ. பூபதி

நீ பிறந்த நாளெங்கள் திருநா ளாகும்;
நீவாழும் நாளெல்லாம் சரித மாகும்;
நீபடைக்கும் படைப்பெல்லாம் இலக்கிய மாகும்;
நீபார்க்கும் பார்வையில் ஒளிபி றக்கும்;
நீபடிக்கும் ஏடெல்லாம் வரலா றாகும்;
நீவடிக்கும் திட்டமெலாம் வாழ்வ ளிக்கும்;
நீபழகும் மண்ணெல்லாம் பெருமை யாகும்;
நீவிடும் மூச்செல்லாம் தமிழே யாகும்!

முத்துவேலர் அஞ்சுகத்தாய் பெற்றெ டுத்து
முன்னேற்றக் கழகத்தின் முத்தொத்த
கத்துங்கடல் ஓரத்தில் துஞ்சு கின்ற
காஞ்சிதந்த அண்ணாவின் அன்புத் தம்பி!
முத்தமிழை முழுதுணர்ந்த கலைஞர்; எங்கள்
மூச்சினிலே வாழுகின்ற தலைவர்; மீண்டும்
இத்தரையை ஆளவந்த முதல்வர்; ஏழை
இன்னல்களைத் தீர்ப்பவரே நீடுவாழ்க!

தேயாத கதிரவனே; எங்கள் நெஞ்சில்
சிதையாத ஓவியமே; எளியோர் மீது
பாயாத வரிப்புலியே; பகையைக் கண்டு
பதுங்காத தமிழ்மறவா; புயலைக் கண்டும்
சாயாத மரக்கலமே; குழிபறித்தும்
சரியாத கோபுரமே; தொண்டர் தம்மைக்
காயாத எம்தலைவா; துன்பங் கண்டும்
கலங்காத நெஞ்சுடையோய் வாழி! வாழி!!



# பாரதிதாசன் பாடல்களில் விழிப்புணர்வு சிந்தனைகள்

முனைவர் க. சிவசாமி

உலகம் ஏன் வாழ்கிறது என்பதை இலக்கியமும் எப்படி வாழ்கிறது என்பதை அறிவியலும் கூறுகின்றன. எனவேதான் இலக்கியமும் அறிவியலும் உலகின் இரு கண்கள் என்கிறார்கள். பாரதியைத் தொடர்ந்து இலக்கிய உலகிற்கு வந்தப் பாரதிதாசன், சமுதாயத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வை அகற்றவும் மக்களிடத்தில் சுற்றுபுறத் தூய்மை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் முயன்றுள்ளார் என்பதை அவர்தம் பாடல்கள் வழி அறிய முடிகிறது. பாரதிதாசன் வாழ்ந்தக் காலத்தில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு அன்றாடப் பேச்சாக இல்லை என்றாலும் அவரது நூல்களைச் சூழல் உணர்வோடு ஆராயும்போது அழகின் சிரிப்பு முதல் ஆத்தி சூடி வரை உள்ள நூல்களில் எத்தனையோ இடங்களில் சூழல் பற்றியச் செய்திகளைக் காண முடிகிறது.

தன்னை அழகாக வைத்திருக்கும் ரோஜா தானிருக்கும் தோட்டத்திற்கும் அழகு சேர்க்கிறது என்பார்கள்! அதைப்போல வாழ்க்கையை இயற்கையோடு இணைத்து பார்க்கும் நோக்குச் சங்கக் காலத்திலிருந்தே தமிழ் கவிஞர்களுக்கு உண்டு! அதனால்தான் கவிஞர்களை இயற்கையின் காதலர்கள் என்று கூறுகிறார்கள். இந்தக் கண்ணோட்டத்தில் பாரதிதாசன் பாடல்களில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு சிந்தனைகள் என்பது ஒரு புதிய ஆய்வுதான் என்றாலும் சங்க இலக்கியத்திற்குப் பிறகுச் சுற்றுச் சூழல் சிந்தனைகள் மற்றும் அறிவியல் செய்திகள் பாரதி, பாரதிதாசன் படைப்புக்களில் மிகுதியாக இருப்பதாக இருபுலக் கூட்டாய்வாளர்கள் கூறியுள்ளனர்.

பாரதிதாசன் பாடல்களில் சுற்றுச்சூழல் சிந்தனைகள் என்கிறபோது, இயற்கையின் இன்றியமையாமை, நிலம், நீர், காற்று, தீ, வான் ஆகியவற்றின் தூய்மைக் காத்தல், மாசு நீக்கும் வழிகள், தூய்மை காப்புச் சிந்தனைகள், உயிரினங்களின் வாழ்க்கை மேம்பாடு ஆகியன குறித்து ஆய்வில் கருத்துக்களை வழங்குவதன் வழி மக்களிடையே சுற்றுச் சூழல் பற்றிய சிந்தனையைத் தோற்றி வைக்க முடியும் என்றக் கருத்தைத் தாங்கப்பெற்றது இக்கட்டுரை.

இலக்கியக் கலையில் செய்திகளை நுட்பமாக கூறுவது படைப்பாளியின் இயல்பு என்றும் அதனைத் தெளிவாக வெளிப்படுத்துவது திறனாய்வாளரின் கடமையென்றும் அறிஞர்கள் கூறுவார்கள். கதிரவனின் எழுச்சியையும் மறைவையும், வானவில்லின் தோற்றப் பொலிவையும், மலர்களின் அழகையும் இன்னும் பிற இயற்கை வனப்புகளையும் கவிதை மொழியில் கூறி இயற்கையின் அழகையும் அதன் இன்றியமையா மையையும் மக்களுக்குப் பாரதிதாசன் வலியுறுத்தி யுள்ளார். இயற்கையளித்தச் சூழலை

*விரிந்த வானே, வெளியே – எங்கும்*
*விளைந்த பொருளின் முதலே*
*திறந்த காறும் புனலும் – மண்ணும்*
*செந்தீ யாவும் தந்தோய்*
*தெரிந்த கதிரும் நிலவும் – பலவாச்*
*செறிந்த உலகின் வித்தே*
*புரிந்த உன்றன் செயல்கள் – எல்லாம்*
*புதுமை! புதுமை! புதுமை!*

என எண்ணி வியந்து போற்றுகிறார். தொல்காப்பிய மரபுப்படி ஒவ்வொரு நிலத்திற்கும் அதனைச் சார்ந்த மரம், செடி, கொடி, புள்ளினம் எனக் கருப்பொருளை உரிமை ஆக்கும் சூழலைச் சங்க இலக்கியங்களில் காண்கிறோம். இத்தகைய மரபையே பாரதிதாசன் தன் பாடல்களில் தெளிவாக வலியுறுத்தியுள்ளார். இயற்கையின் தேவையை அறிந்தே இவ்வாறு கூறியுள்ளார் எனக் கொள்ளலாம்.

*நல்ல இமயம் நலம் கொழிக்கும் கங்கை நதி*
*வெல்லத் தமிழ்நாட்டின் மேன்மைப் பொதியமலை*
*செந்நெல் வயல்கள் செழுங்கரும்புத் தோட்டங்கள்*
*தின்னக் கனிகள் தெவிட்டாப் பயன்மரங்கள்*
*இன்பம் செறிந்திருக்கும் இப்பெரிய தேசத்தில்!*

என இயற்கைக் குறித்த தனிப் பாடல்களை விட சமுதாயச் சாடலில் அவர் இயற்கையை விவரிக்கும் அழகே தனி. அழகின் சிரிப்பில் இயற்கை சூழலுக்கு முடிசூட்டி ஒரு காவியமே படைத்து விட்டார். கவிஞர் நேரடியாக சூழல் கேடுகளைப் பற்றி பாடாவிட்டாலும் சமுதாயப் புரட்சியைப் பாடுங்கால் நல்ல இயற்கையின் மேன்மையை வலியுறுத்தி, நல்ல சூழலை ஆங்காங்குப் பெருமைப்படுத்தி பாடியுள்ளார்.

## நிலம் மாசடைதல்

அறிவியல், தொழில், பொருளாதாரம் ஆகிய பல்வேறு துறைகளில் நாடு பெற்றுவரும் வளர்ச்சி ஒருபுறம் பாராட்டுக்குரியது என்றாலும் அவற்றின் வழி ஏற்படுகின்ற கழிவுகள் நிலத்திலும் நீரிலும் காற்றிலும் கலந்து சூழலை மாசுபடுத்துகிறது. அதன்பொருட்டு நிலத்தின் தூய்மையை வலியுறுத்தும் பாரதிதாசன்! மக்கள் நிலத்தை எப்படி மாசுபடுத்துகிறார்கள் என்பதை

*கண்ட இடத்தில் துப்பாதே*
*காலில் சேற்றை அப்பாதே*
*துண்டு துணிகளைக் கிழிக்காதே*

என்ற மக்களின் செயல்களைச் சுட்டிக் காட்டி அதைக் கண்டிக்கிறார். இவ்வாறு மக்கள் செய்யும் தவறுகளால் நிலம் மாசடைந்து சூழல்கேடு ஏற்படுகிறது. இதனைத் தொடர்ந்து நோய்களைப் பரப்புவதில் ஈக்களும், கொசுக்களும் போட்டிப் போட்டுக் கொள்கின்றன. நோய்களைப் பரப்புவதில் ஈ, கொசுவுக்கு அடுத்தப் படியாகக் கோழியைத்தான் பாரதிதாசன் குறிப்பிடுகிறார்.

*கண்ணுக்கும் பிடிக்காது – அது*
*கழிக்கும் கழிவைக் கண்டால் – அது*
*மண்ணுக்கும் குப்பையைச் சீய்க்கும் – எங்கும்*
*மட்டத்தூசி ஆக்கும் – என்கிறார்.*

வீட்டில் வளர்க்கப்படும் கோழி, நாய், மாடு, ஆடுகளை முறைப்படி வளர்க்க வேண்டும் என்பதை இவ்வாறானப் பாடல்கள் வழி தெளிவுப்படுத்துகிறார். மண்ணையும் குப்பையையும் கோழி சீய்த்துக் கிளறுவதால் வெளியாகும் துர்நாற்றம் மற்றும் தூசிகளின் வாயிலாக நோய் பரவ வாய்ப்பாகிறது. எனவேதான் கோழி, ஆடு, மாடு போன்றவைகளைத் திண்ணையில் வளர்க்காமல் பண்ணை வைத்து வளர்க்க வேண்டும் என்கிறார் பாரதிதாசன். இனி வரும் சமுதாயமாவது தூய்மையாக இருக்கட்டும் என எண்ணித்தான் இளைஞர்களைப் பார்த்து

*தூய்மை சேரடா தம்பி – என்*
*சொல்லை நீ பெரிதும் நம்பித்*
*தூய்மை சேரடா தம்பி*

என்று வேதனையுடன் வினவுகிறார். சுத்தம் சோறு போடும் என்பது பழமொழி என்றாலும் நம்மைச் சுற்றியுள்ள இடங்கள் தூய்மையாக இருந்தால் வாழ்வு சிறப்புற விளங்கும் என்கிறார். சுகாதாரம் எனும் தலைப்பில் சிறுவனுக்கு நீதி புகட்டும் பாரதிதாசன் கவிதை அடிகள் மனித சமுதாயம் சிந்தனை செய்து அரியவேண்டிய கருத்துப் பேழையாகும்.



**நீர் மாசடைதல்**

'நீர் இன்றி அமையாது உலகு' என்பார்கள், என்றாலும் நீருக்கு ஆக்கும் சக்தியும் அழிக்கும் சக்தியும் உண்டு! நாம் அறிந்ததே. ஓர் ஊரின் தூய்மைக்கும் நோயின்மைக்கும் அவ்வூரில் உள்ள நீர்நிலைகளின் தூய்மை இன்றியமையாதது. உணவுப்பொருளை விளைவிக்கும் சக்தியாகவும் பருகும் நீராகவும் இருக்கும் நீர்! மக்கள் வாழ்வின் உயிர்த் தேவை என்கிறார். குடிநீர் குளத்தைப் பற்றிக் கூறும்போது

*குடிக்கும் தண்ணீர் குளமே – என்*
*குடத்தை நிரப்பும் குளமே*
*படித்துறையில் எங்கும் – ஒரு*
*பாசியில்லாக் குளமே*

என்று குடிநீர் குளத்தைப் பற்றிக் கூறுகிறார். காரணம் இந்தியாவில் குறிப்பாக காலரா போன்ற கொடிய நோய்கள் நீர் மூலமாக பரவுகின்றன என்று ஆய்வாளர்கள் கூறும் கருத்தும் பாரதிதாசன் கருத்துக்கு வலுசேர்ப்பதாக அமைந்துள்ளது. எனவேதான் நீர் தூய்மை வாழ்க்கை பற்றிய சிந்தனை என்கிறார்கள் இன்றைய ஆய்வாளர்கள். மூன்று பக்கம் கடலால் சூழப்பட்ட நம் நாட்டில் தூய்மையான நீர் குப்பிகளில் அடைத்து விற்பனைக்கு வந்திருப்பது நீர்நிலைகள் மாசடைந்துள்ளன என்பதையே தெளிவுப் படுத்துகிறது. அதனால்தான் தூயநீரை அமிழ்து என்றும் வெள்ளிக் கொடி என்றும் பாடிய பாரதிதாசன்! ஆற்றைத் தாயென ஓர் இடத்தில் வணங்குகிறார். கம்பன்கூட சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரி என்று ஆற்றைப் பற்றி இராமாயணத்தில் குறிப்பிட்டுள்ளார்.

*நோய்தீர்ந்தார்! வறுமை தீர்ந்தார் நூற்றுக்கு நூறு பேரும்*
*ஓய்வின்றிக் கலப்பைத்தூக்கி உழவுப்பண் பாடலானார்*
*சேய்களின் மகிழ்ச்சி கண்டீ சிலம்படி குலுங்க ஆற்றுத்*
*தாய்நடக் கின்றாள் வையம் தழைகவே தழைக என்றே.*

என்று ஆற்றின் பயனைப் பாரதிதாசன் பாடுகின்றார். ஆனால் ஆறுகள் எல்லாம் இன்று ஊர்களின் கழிவுநீர்க் கலக்கும் கால்வாய்களாக உள்ளன. கங்கை காவிரி உள்ளிட்ட தேசிய நதிகள் பதிநான்கும் மாசுண்ட மேனியோடு காட்சியளிக்கின்றன. "உரித்த நற்றாழம் பூவின் நறும்பொடி உதிர்த்தது" போல ஆற்று மணல் இருக்குமென கூறிய பாரதிதாசனின் கூற்று இன்று காணக்கிடைக்காத ஒன்றாகவுள்ளது.

### காற்று மாசடைதல்

காற்றுமாசு என்பது ஒர் உலகப் பிரச்சினை. ஏனெனில் நிலம், நீர் போன்றவற்றிற்கு இருப்பது போல காற்றுக்கு எல்லை ஏதும் இல்லை. ஒரு நாட்டின் நச்சுக் காற்று மற்றொரு நாட்டிற்குச் சென்று பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்தும். காற்று மாசுறுதலால் உயிரினங்கள், பயிரினங்கள், நீர்நிலைகள், நிலம் இன்னும் பிறப்பொருட்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டு வருகின்றன. எனவே புகைபிடிப்பதனால் வெளியாகும் நச்சுக் காற்றின் விளைவைக் கூறவந்த பாரதிதாசன்

*"புகைச் சுருட்டால் இளமை பரிபோகும்*
*பொல்லாங்கு ண்டாகும்*
*முகமும் உதடும் கரிந்து போகும்*
*முறுக்கு மீசையும் எரிந்து போகும்*
*மூச்சுக் கருவிகள் முற்றும் நோய் ஏறும் –*
*பிள்ளை*
*முத்தம் தருநேரத்தில் வாய் நாறும்*
*ஓய்ச்சல் ஒழிவில்லா திருமல் சீறும் – நல்ல*
*ஊரோ உன்னைச் சீ என்றே கூறும்."*

என்று புகைப்பழக்கத்தைக் கண்டிக்கிறார். கற்றவர் உட்பட பலர் இன்று பொதுவிடங்களில் புகைப்பதால் புகைப்பழக்கம் இல்லாதவர்களும் அப்புகையை சுவாசிக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகுகிறார்கள். இதனால் மக்களுக்கு புற்றுநோய், இருதய நோய் மற்றும் சுவாசக் குழல் தொடர்பான நோய்கள் ஏற்படுகின்றன. தூய்மையான காற்றைப் பற்றிக் கூறவந்தக் கவிஞர்!

*"குளிர்நறுஞ் சந்தனஞ் சார்*
*பொதிகையில் குளிர்ந்தும் ஆங்கே*
*ஒளிர்நறு மலரின் ஊடே*
*மணத்தினை உண்டும், வண்டின்*
*கிளர்நறும் பண்ணில் நல்ல*
*கேள்வியை அடைந்தும் நாளும்*
*வளர்கின்றாய் தென்றலே உன்*
*வரவினை வாழ்த்தா ருண்டோ"*

என்று கூறி! காற்றுக்கு இலக்கணம் கூறுவதுடன் அக்காற்றையே தென்றல் . காற்று என்கிறார். ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு 16 கிலோ கிராம் காற்றுத் தேவைப்படுகிறது என்று அறிவியல் வல்லுநர்கள் கூறி வருகின்றனர். நீர், உணவு போன்ற பொருட்களைப் பாதுகாப்பது போல் காற்றை ஒரு தனிமனிதனால் பாதுகாக்க இயலாது. எனவே காற்றுத் தூய்மையாப் பாதுகாக்க அனைவருக்கும் ஒன்றுபட்ட தேசிய ஒற்றுமை தேவை என்பதே கவிஞரின் கருத்தாகும்.

### விழிப்புணர்வு வேண்டும்

இல்வாழ்க்கையின் ஒளிவிளக்காகவும் சிகரமாகவும் கருதப்படும் பெண்கள்! குடும்பத்தை வழிநடத்தவும் குழந்தைகளைப் பெற்று பேணி வளர்க்கவும் சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாக்கவும் அவர்களுக்குக் கல்வி அவசியமாகிறது. பெண் கல்வியின் அவசியத்தைப் பல இடங்களில் வலியுறுத்தும் பாரதிதாசன்! படிப்பறிவும் உலகியல் பார்வையும் இல்லாத பெண்கள் சமுதாயத்திற்கே பெரும் சாபக்கேடு என்கிறார். அதனை உணர்த்தவே

*"கல்வியில்லாத பெண்கள்*
*களர்நிலம்! அந்நிலத்தில்*
*புல் விளைந்திடலாம், நல்ல*
*புதல்வர்கள் விளைவதில்லை"*

என்கிறார். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல! ஒரு பெண் கல்வி கற்றால் ஒரு தலைமுறையே கல்வி கற்றதற்குச் சமம் என்பார்கள்! பிறக்கும் குழந்தைகளுக்குச் சமுதாயத்தின் செயல்பாட்டையும் உறவு முறைகளையும் அறிமுகம் செய்யும் கருத்துப் பேழையாகக் கருதப்படும் பெண்களுக்கு விழிப்புணர்வுச் சிந்தனைகள் மிகவும் இன்றியமையாதது. சமுதாயத்தில் சுற்றுச் சூழல் விழிப்புணர்வு ஏற்பட சமுதாயத்தை உருவாக்கும் சமூக சிற்பியாம் பெண்களுக்குக் கல்வி அளிப்பது இன்றைய அவசரத் தேவை என்கிறார் பாரதிதாசன். இவரைத் தொடர்ந்து இன்று பல அரசியல் தலைவர்களும் சமுதாய முன்னோடிகளும் பெண் கல்வியின் வளர்ச்சிக்கும் அவர்களின் முன்னேற்றத்துக்காகவும் பாடுபட்டு வருகிறார்கள் என்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

பாரதிதாசன் இயற்கைச் சூழலைப் பற்றியும் நீரைப் பற்றியும் காற்றைப் பற்றியும் பலக் கருத்துக்களைத் தன் பாடல்கள் வழி கூறுவது அவையெல்லாம் சரியான முறையில் பராமரிக்கப்படவேண்டியன என்றுத் தெரிகிறது. மேலும் வேண்டாத பல செயல்களை இளைஞர்கள் மேற்கொள்ளக் கூடாது எனக் கூறும் அவரின் கூற்று! எதிர்கால சமுதாயமும் மக்களும் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதே அவரின் இலட்சியமாகத் தெரிகிறது. அதனால்தான் புதியதோர் உலகம் செய்வோம் என்று வெளிப்படையாகக் கூறியுள்ளார். பாரதிதாசனின் பாடல்களில் சிலக் கருத்துக்கள் மட்டுமே இங்கு சூழல் பற்றி விளக்க எடுத்துக்கொள்ளப்பட்டன. ஆகவே, சமுதாய மக்களின் சூழல் பிரச்சினை என்பது இன்று உலகளாவிய மக்களின் உயிர்ப் பிரச்சினையாக மாறியுள்ளது என்பதை அனைவரும் உணர்ந்து செயல்பட்டால் பாரதிதாசன் கூறிய புதியதோர் உலகை உருவாக்க இயலும் என்பது திண்ணம்.

★ ★ ★



# குளிர் தமிழே ! வாழ்க !

– முனைவர் கருவூர்க்கன்னல்

வானிருந்து வீழ்கின்ற மழையைப் போல
வாழ்கின்ற தமிழர்க்குப் பயன ளிக்கும்
தேனிருந்து வடித்தெடுத்த சுவையே! தமிழர்
தெளிவுக்கு வழிகாட்டி மக்கள் வாழ
ஊனுருக்கி உயிருக்குத் தொண்டு செய்யும்
'உயிர்காற்றே, உடன்பிறப்பே! என்ற சொல்லால்'
கூன்முதுகை நிமிரவைத்த கதிரே! இன்பக்
குளிர்தமிழ்போல் பல்லாண்டு வாழ்க! வாழ்க!!

தருகாதல் தனித்தமிழுக் காக உன்னைத்
தந்தவனே! தனித்தன்மைக் கெடுத்துக் காட்டே!
உகுதண்ணீர் துடைப்பதையே பணியாய்க் கொண்ட
உனக்காக உயிர்தருவோம்! தமிழர் நாட்டின்
நகுமடமை நோய்நீக்கித் தொடரும் தொண்டே!
நற்றமிழர் இனத்தலைவா! மெய்மை வாழப்
பகுத்தறிவு விதைதூவி இருள்கி ழித்துப்
பைந்தமிழர் கண்திறந்த கலைஞர் கோவே!

புற்றீசல் கவர்ச்சியெலாம் வீழ்ச்சி காணப்
புரட்சியினைத் தோற்றுவிக்கும் அறிவின் ஊற்றே!
விற்புருவ அசைவுகளைத் தோல்வி யாக்கும்
விளைவுகளைப் பயிர்செய்யும் அறிஞர் தோழா!
கற்காலச் சிந்தனையைத் தொடர்ந்து தாக்கிக்
கனித்தமிழர் நலங்காண திட்டம் தீட்டும்
கற்கண்டே! கனிச்சாறே! கவிஞர் தேரே!
ஊழலதன் ஆணவத்தை அழித்த வானே!

நீஇன்றேல் செந்தமிழர் விழிகள் இன்னும்
நீடுதுயில் நீக்காது! அறிவை அள்ளி
தீநிகர்த்த மடமையினை விலக்கி வாழும்
தீமையினைத் தகர்க்காது உரிமை பெற்று
வாய்திறந்து பேசுகின்ற நிகழ்ச்சி எல்லாம்
வாய்க்காது! மடத்தனத்தின் கால்மு றித்து
தாய்நிகர்த்த அன்பாலே தமிழர் வாழ்வைத்
தலைநிமிர வைத்தவன்நீ! அறிவின் ஆழி!

பாடுகின்ற பேராவல் தீர்ந்த தில்லை
பையவந்து நீபேசும் தமிழைக் கேட்கக்
கூடுகின்ற பேராசை எந்த நாளும்
குறைந்ததில்லை! தோழர்களின் கட்டுப் பாட்டை
ஊடுருவி நெருங்கிநின்று வேட்கை தீர
ஒளிமுகத்தைக் காணுகின்ற துடிப்பு இன்றும்
வாடுகின்ற நிலைமையில்லை! வாய்ச்சொல் கேட்டு
வாழ்கின்ற வாழ்க்கையினைத் தொடரு கின்றேன்!

# எங்கள் ஊர் பிரச்சினை

**பிரச்சினை:**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து, குடும்பக் கார்டுகள் கோவை ரவி எலக்ட்ரானிக் கம்ப்யூட்டர் மையத்திற்கு அனுப்பப்பட்டதாக கேள்விபட்டோம்; ஆனால் இன்னும் இதுவரை 7,000க்கும் மேற்பட்ட குடும்பக் கார்டுகள் வட்டாட்சியர் அலுவலகம், ஒட்டன்சத்திரம் வந்து சேரவில்லை என்று அறிவிக்கின்றனர். இந்த அலுவலகத்திற்கு உட்பட்ட கிராமத்தில் வசிக்கும் மக்கள் தவிக்கின்றனர். தாங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்து வட்டாட்சியர் அலுவலகத்திற்கு உடனடியாக பிரிண்ட் பண்ணி அனுப்புமாறு – ஆணை பிறப்பிக்கும்படி தங்களை தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

*பொதுமக்கள் சார்பாக, பி .தங்கராஜன்,*
*வீரவப்பட்டி, திண்டுக்கல்.*

**தீர்வு:**

*ஒட்டன்சத்திரம் வட்டத்தில் புதிய குடும்ப அட்டை கோரி வரப்பெற்றுள்ள விண்ணப்பங்களில், தகுதியுள்ள 7,227 மனுக்களுக்குண்டான பிளாப்பி, கோயம்புத்தூர் எல்காட் நிறுவனத்தில் ஒப்படைக்கப்பட்டு, அவற்றில் 7,079 புதிய குடும்ப அட்டைகள் அச்சடிக்கப்பட்டு ஒட்டன்சத்திரம் தாலுக்கா அலுவலகத்திற்கு எடுத்து வரப்பெற்று பொதுமக்களுக்கு அவர்கள் வீடுதோறும் சென்று உரிய பரிசீலனைக்குப்பின் புதிய குடும்ப அட்டைகளை அரசு அலுவலர்கள் 29.3.99 முதல் விநியோகம் செய்து வருகிறார்கள் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*மாவட்ட வழங்கல் அலுவலர்,*
*திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல்.*




**பிரச்சினை:**

மேலூர் வட்டம், அம்பலக்காரம்பட்டி பஞ்சாயத்தின்கீழ் உள்ள நாயத்தான்பட்டி விலக்கின் நான்கு திசை ரோடுகள் சந்திப்பு உள்ளது. வடக்கு–தெற்காக, மேலூர்–சிவகங்கை நெடுஞ்சாலை ரோடு செல்கிறது.

ரோட்டின் இரு பக்கங்களிலும் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதால் நிழற்குடை அமைக்க முடியாத நிலை உள்ளது. நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் ஆக்கிரமிப்பை அகற்றி நிழற்குடை வசதி செய்து பொது மக்களுக்குள்ள சிரமத்தைப் போக்க நடவடிக்கை எடுக்குமாறு இந்தப் பகுதியைச் சேர்ந்த பல கிராமங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

*இளைஞர் நற்பணி மன்றம், நாயத்தான்பட்டி,*
*வல்லவன் நகர், மதுரை மாவட்டம்.*

**தீர்வு:**

*மேலூர்–சிவகங்கை சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எச்சரிக்கை நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் அம்பலக்காரன் ஊராட்சி நிதியில் நிழற்குடையினை வைத்துக் கொள்ள அவர்களுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப் பட்டுள்ளது.*

*கே. காண்டீபன், கோட்டப் பொறியாளர்*
(நெஊபது), *மதுரை–2.*

**பிரச்சினை:**

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி வட்டம், கோட்டூர் பஞ்சாயத்து ஒன்றியம் தெற்கு நாணலூர் நடுநிலை பள்ளியில், எட்டு வகுப்பிலும் 400 மாணவர்களுக்கு மேல் இருந்தும் நடுநிலைப் பள்ளிக்குரிய ஆசிரியர்கள் நியமனம் இல்லாமல் தொடக்கப் பள்ளிக்குரிய ஆசிரியர்களைக் கொண்டே 6 ஆண்டுக் காலமாக இயங்கி வருகின்றது. 10.6.97ல் இருந்து ஒரு தமிழாசிரியர் இடமும் ஒரு இடைநிலை ஆசிரியர் இடமும் காலியாகவே இருக்கிறது.

மிச்சமிருந்து வந்த ஆசிரியர் 5 பேர்களில் இவ்வாண்டு 3 ஆசிரியர்கள் மாறுதல் செய்யப்பட்டு பள்ளியில் இருந்து சென்று விட்டார்கள். ஒரு ஆசிரியர் பதவி உயர்வுப் பெற்று சென்றுவிட்டார். மீதம் இருப்பது தலைமையாசிரியர் மட்டுமே.

பள்ளி திறந்து ஒரு மாதத்திற்கு மேலாகியும்கூட 400 மாணவர்களுக்கு மேல் உள்ள நடுநிலைப் பள்ளியில் தலைமையாசிரியர் ஒருவர் மட்டுமே பள்ளிக்கு வந்து போகிறார். எனவே தாமதம் இன்றி அவசர நடவடிக்கை எடுத்து பள்ளியையும், மாணவர்களையும் பாதுகாக்க வேண்டுகின்றோம்.

*பொதுமக்கள் சார்பாக சி.காசிநாதன்*
*சுதந்திர போராட்ட வீரர்*
*சிங்கமங்கலம், திருவாரூர் மாவட்டம்.*

**தீர்வு:**

*திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி வட்டம் கோட்டூர் பஞ்சாயத்து ஒன்றியம் தெற்கு நாணலூர் நடுநிலைப்பள்ளியில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலரால் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. இப்பள்ளியில் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்கள் 7 எனவும், இதில் தலைமை ஆசிரியர் 1, புலவர் 1, இடைநிலை ஆசிரியர்கள் 5 எனவும் இவற்றில் இரண்டு இடைநிலை ஆசிரியர்கள் பொதுமாற்றத்தின் காரணமாக மாறுதல் செய்யப்பட்டு தற்சமயம் நிரப்பப்பட்டுவிட்டது எனவும், ஒரு இடைநிலை ஆசிரியர் பணியிடம் 18.1.99 முதல் காலியாக உள்ளது எனவும் அறிக்கை பெறப்பட்டது, காலியாக உள்ள ஆசிரியர் பணியிடமும் நடப்பு கல்வியாண்டில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு விட்டது.*



*செ. உமாசங்கர், மாவட்ட ஆட்சியர்,*
*திருவாரூர் மாவட்டம்.*

**பிரச்சினை:**

அம்பரிஷபுரம் கிராம எல்லை வழியாக டி.12 என்ற பேருந்து அரக்கோணத்திலிருந்து உரியூர் நோக்கிச் செல்கிறது. இந்தப் பேருந்து உரிய நேரத்தில்



இயக்கப்படுவதில்லை. எனவே, பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே இந்தப் பேருந்தை உரிய நேரத்தில் இயக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*ஊர் பொதுமக்களுக்காக, ஆர். சிவா,*
*அம்பரிஷபுரம் கிராமம், வேலூர் மாவட்டம்.*

**தீர்வு:**

*மனுதாரர் கோரிய கோரிக்கை குறித்து பரிசீலனை செய்து தடம் எண். டி.12 நிர்ணயிக்கப்பட்டு கால அட்டவணைப்படி எவ்வித நடைகள் இழப்பின்றி இயக்கத்தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.*

*பொதுமேலாளர் தமிழ்நாடு அரசு*
*போக்குவரத்துக் கழகம்,*
*(விழுப்புரம்–கோட்டம் III) லிமிடெட், காஞ்சிபுரம்.*

★ ★ ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **க.முத்துசாமி,** இ.ஆ.ப. இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி:568926/568927/564906




# கோ-ஆப்டெக்ஸின் வண்ணங்கள் உங்கள் எண்ணங்கள்.



கோ-ஆப்டெக்ஸ் ரகங்கள்:

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

★ இன்றே அருகில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்திற்கு வருகை தாரீர்.

தமிழரசு

பதிவு எண் M.8676
Licence No. TN/MS(C) PP-23







